ஆவணி - 2021

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

சிற்றிதழ் சிறப்பிதழ்



# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

ஆவணி - 2021

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.


ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப : R.Mahendran,
34 Redriffe Road, Plaistow,
London, e13 0JX, UK

மின்னஞ்சல் : neythal34@gmail.com
mahendran54@hotmail.com

காசோலைகள் : R.Mahendran எனும் பெயருக்கு எழுதுங்கள்.

நன்றி : இணையம்


**வணக்கம்,**

காற்றுவெளி வழங்கும் மூன்றாவது சிற்றிதழ் சிறப்பிதழாகும்.ஒரு புறம் மகிழ்வையே தந்தாலும், சிற்றிதழாளர்களிடையேயான பரஸ்பர நட்பு இல்லை என்பதே உண்மை.அவரவர் கொள்கையுடனேயே சக சிற்றிதழ்களை நேசிக்கும் பக்குவம் இன்னும் ஏற்பட்டதாக இல்லை. ஒரு சிற்றிதழ் வந்த வேகத்துடனே தொடர்ந்து நடத்தமுடியாமல் நின்று போனவைகளும் உண்டு. பல ஆண்டுகள் சிற்றிதழுக்காகவே தங்களை அர்ப்பணித்த பல சிற்றிதழாளர்கள் நம்மிடையே உண்டு. அவர்களை மறந்துவிடாமலும்,அவர்களின் இதழ்கள் பதித்த வரலாற்றுத்தடங்களை நினைவுகூர்ந்தபடியும் ஒவ்வொரு சிற்றிதழ்களும் நினைவு கூரவேண்டும் என்பதே நமது வேணவா.

புதிய இதழ்கள் வடிவமைப்பிலும்,படைப்புகளிலும் அதிக கரிசனையுடன் வெளிவருவது மகிழ்வைத்தருகிறது. வணிக இதழ்களும் சிற்றிதழ்களின் கட்டுக்கோப்புக்களுடன் துணை இதழ்களையும் வெளியிடுவது ஆரோக்கியமாக உள்ளது.

சிற்றிதழ்கள் அமைப்பு,இயக்கம்,கழகம்,அரசியல் கட்சி,தனிநபர்களின் முயற்சியினால் பொறுப்புடன் வெளிவரும்.அந்தந்த இதழ்களின் தொடர்வருகை நிதிக்கட்டமைப்பைப் பொறுத்தே அமையும்.அநேக இதழ்கள் கலை இலக்கியம் சார்ந்தவையாகவும் வருகிறது.அதே சமயம் கவிதைக்கென,சிறுகதைக்கென,மொழிபெயர்ப்பிற்கென,விமர்சனத்திற்கென தனித்தும் வந்துகொண்டிருக்கின்றன.பல இதழ்கள் பலரையும் வசீகரித்தபடி தொடர்ந்து வெளிவருவதும்,சில இதழ்கள் காலதேசம் கடந்தும் தடம் பதித்தும் பேசப்படுகின்றன.சிற்றிதழ்கள் குறித்த முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என காற்றுவெளியும் விரும்புகிறது.

காற்றுவெளி தொடர்ந்து அவ்வப்போது சிற்றிதழ் சிறப்பிதழ்களைக் கொண்டுவரும். உங்கள் படைப்புக்களை தொடர்ந்து அனுப்பும் படைப்பாளர்களுக்கு நன்றி. பயணிப்போம் நம்பிக்கையுடன்.

அன்புடன்,

சோபா

நந்தினி சேவியர்




# சிறுகதை மஞ்சரி.!

லண்டனில் இருந்து சிறுகதைக்கென வெளிவரும் ஒருசஞ்சிகை 'சிறுகதை மஞ்சரி' கவிதைக்கெனமட்டும் தமிழகத்தில் வெளிவந்த சஞ்சிகைகளில் வானம்பாடி பற்றி பரவலாக அறிந்துள்ளோம்.

இலங்கையில் கவிஞன், அக்னி என ஒரு வரிசை உண்டு. சிறுகதைக்கென தமிழ் சஞ்சிகை வரலாற்றில் சிறுகதைச்சிறப்பிதழ்கள் வெளிவந்திருப்பதை நாம் அறிவோம் ஆனால் சிறுகதைக்கென வெளிவரும் ஒரு சஞ்சிகை' சிறுகதை மஞ் சரி ' என்பது எனது கணிப்பு. இதன் ஆசிரியர் கரவை மு.தயாளன். பாடசாலை காலத்திலேயே கையெழுத்து சஞ்சிகைகள்நடத்தி அனுபவப்பட்டவர். இற்றை வரை கவிதை,சிறுகதை, கட்டுரை, நாவலென இலக்கிய உலகில் ஆழமாக தடம்பதித்து வருபவர். சிறுகதைமஞ்சரி முதலில் காலாண்டு இதழாகவே ஆரம்பிக்கப்பட்டது.

"ஈழத்தின் பல எழுத்துக்கள் வறுமையின் காரணமாகத் தாள்களில் எழுதியபடியே நாளடைவில் கறையானுக்கு இரையாகும் தன்மையிலிருந்து அவற்றைக்காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கிலும்வாசகர்களை நவீன

எலக்ரோனிக் மாயையிலிருந்து மீட்கவேண்டும் என்ற நோக்கிலுமே இச் சஞ்சிகை வெளிவருகிறது”

என தனது முதலாவது ஆசிரியர் தலையங்கத்தில் மு.தயாளன்எழுதியிருந்த போதிலும் கதைமஞ்சரியை சர்வதேசதமிழ் எழுத்துக்களின் களமாக மாற்றியிருக்கிறார். இதுவரை (இக்கட்டுரை எழுதப்படும் வரை) 12 இதழ்கள் வெளிவந்துள்ளன. சிறுகதை மஞ்சரியின் முதலாவது இதழ் 2020 பெப்ரவரியில் வெளிவந்தது. தொடர்ந்து 6 ஆவது இதழ்வரை காலாண்டிதழாக வெளிவந்த கதைமஞ்சரி 7 ஆவது இதழில் இருந்து மாதஇதழாகிவிட்டது. முதலாவது இதழில் 10. சிறுகதைகள் உள்ளன. உண்மையைச் சொல்லப்போனால் சிறுகதைக்கு வளம் சேர்க்கவென ஆசிரியர்விரும்பும்படியான சிறுகதைகள் இவ்விதழில் அரிதாகவே காணப்படுகின்றன.

அலெக்ஸ் பரந்தாமன், கர்ணன் சின்னத்தம்பி., மன்னார் அமுதன் கதைகள் தேறக்கூடியவை. ஒவ்வொரு இதழின் சிறுகதைகள் பற்றி தனித்தனியே எழுதி எழுதியவர்களைச் சங்கடத்தில் ஆழ்த்த மனதற்றுள்ளேன் ஆயினும் சிலவற்றைச் சொல்லி.தானாகவேண்டும். சிறுகதைமஞ்சரியின் நல்லநோக்கத்திற்கு படைப்பாளிகள் ஒத்துழைக்கவேண்டும். சுமார் 100 கதைகள் மட்டில் இந்த 12 இதழ்களில் பிரசுரமாகியிருக்கின்றன ஒரு சிலவளரக்கூடிய எழுத்தாளர்களை கதை மஞ்சரி அடையாளம் கண்டுள்ளது.




கதைமஞ்சரியில்எழுதும் எழுத்தாளர்களே உங்கள் கதை மஞ்சரியில்லபிரசுரமாகிய காரணத்தால் தற்திருப்தி கொள்ளாதீர்கள். அது ஒரு பயில்களம். நீங்கள் நிறைய வாசிக்கவேண்டும் நல்ல படைப்புகளை அடையாளம்காணவேண்டும். நல்ல படைப்புகளைத் தரவேண்டும். உங்களால் அது முடியும். சிறுகதை மஞ்சரி உங்களுக்கு உதவும் சிறுகதை மஞ்சரியின் இன்னொரு விஷேசம் பிரசுரமாகும் ஒவ்வொரு சிறுகதைக்கு 1000/- சன்மானம் வழங்குவதாகும். அதுமாத்திரமல்ல ஒவ்வொரு இதழிலும் பிரசுரமான சிறப்புக்கதைகள் மூன்றுக்கு மேலதிகமாக தலா 1000/- வழங்கும் நடைமுறையாகும்.

கதை மஞ்சரி சிறுகதையோடு மாத்திரம் நின்றுவிடாமல் மூத்த தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளை மீள்பிரசுரம் செய்யும் பணியையும் செய்து வருகிறது. சிறுகதையாளர் பற்றிய குறிப்புகள் சிறுகதைகள்பற்றிய செய்திகள் குறுங்கதைகள் விமர்சனங்கள் என சுவைதரும் அம்சங்கள் கொண்ட சஞ்சிகை சிறுகதைமஞ்சரி. வளர்ந்த வளரும் எழுத்தாளர்களுக்கான சஞ்சிகை சிறுகதை மஞ்சரி இந்த கொரோனா காலச்சவால்களை மிகுந்த துணிச்சலுடன்எதிர்கொள்கிறது. இதன் சிறப்புகளில் மற்றொன்று சிறப்பான வடிவமைப்பு. இதன் தொடர் வருகைக்குபடைப்பாளிகளும் வாசகர்களும் உதவவேண்டும்.

இலங்கையின் வருட சந்தா 800/-




# கல்லூரிக் கையெழுத்துப் பிரதிகள் ஒரு நினைவோட்டம்

**சிற்றிதழ்கள்**

இன்றைய இணைய இதழ்களின் முந்தைய வடிவமே சிற்றிதழ்கள் / கையெழுத்துப் பிரதிகள் என்று கூடச் சொல்லலாம். பெரும் பத்திரிக்கைகளில் பிரபலங்களின் எழுத்துக்களுக்கே முன்னுரிமை என்ற நிலையில், இன்றைய இணைய வசதிகளை எல்லாம் கண்டிராத சூழலில், எழுத்தின் மீது தீவிரக்காதல்

கொண்டவர்கள் இணைத்து தங்கள் எழுத்தைச் சிலரிடமாவது கொண்டு செல்லத்தான் பல சிற்றிதழ்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. இது ஒரு வகையில் எழுத்தை பல இடங்களில் கொண்டு சேர்க்கும் காரணியாகவும் இருந்திருக்கிறது.

அம்பதுகளில் எழுத்தாளர் சி.சு. செல்லப்பா கொண்டு வந்த சிற்றிதழான 'எழுத்து' என்பதே தமிழில் வந்த முதல் சிற்றிதழ் என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு முன் வேறு யாரும் சிற்றிதழ்கள் நடத்தினார்களா என்ற விபரம் எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை வேறு யாராவது கொண்டு வந்திருக்கலாம் அல்லது வராமலும் இருந்திருக்கலாம்.

தமிழின் முதல் சிறுகதை மலேசியாவில்தான் எழுதப்பட்டது என்று சொல்லப்படுவதைக் கேட்டிருக்கிறேன் என்றாலும் இல்லையில்லை தமிழகத்தில்தான் முதல் சிறுகதை எழுதப்பட்டது என்று சொல்வதையும் சேர்த்தே கேட்டிருக்கிறேன். இதில் எது சரி என்பது நான் கேட்டவரையில் குழப்பமாக இருந்தாலும் சிறுகதை என்னும் வடிவத்தை யாரோ ஒருவர் கொண்டு வந்ததால்தான் இன்று நம்மால் உலகின் மிகச் சிறந்த தமிழ்ச் சிறுகதைகளை வாசிக்க முடிகிறது.

இதேபோல்தான் சிற்றிதழின் ஆரம்பம் யார் மூலமாகவோ இருந்துட்டுப் போகட்டும், 2000 வரை மிக அதிகமான சிற்றிதழ்கள் வந்தன என்பதும் அதன் பின்னான இணையத்தின் வளர்ச்சியால் அவை மெல்ல மெல்ல மறைந்து இணைய இதழ்களாக மாறிவிட்டன என்பதும் நாம் பார்த்து அறிந்த உண்மை.


எழுத்தில் அடியெடுத்து வைக்கவும் பத்திரிக்கைப் பணியின் மீது காதல் வரவும் - இப்போது வாழ்க்கையின் ஓட்டத்தில் அதிலிருந்து வெளிவந்து பதிமூன்று வருடங்களாகிவிட்டது - எங்கள் கல்லூரியும் எனது பேராசானும் சில நட்புக்களுமே காரணமாய் இருந்தார்கள் என்பதை இங்கு நினைத்துப் பார்க்கிறேன். எனக்கான விதையை விதைத்தது எங்கள் கல்லூரிதான்.

நான் வாசித்த முதல் சிற்றிதழ் என்பது எங்கள் கல்லூரியில் எங்களுக்கு ஒரு வருடம் முன்னர் படித்த அண்ணன்களான நவீன் (இப்போது அமெரிக்காவில் வசிக்கிறார், தமிழ் சினிமாவிலும் நடிக்கிறார்) மற்றும் அசோக்குமார் (பொறியியல் கல்லூரியில் பணிபுரிகிறார்) இருவரும் இணைந்து நடத்திய 'நீ..!' என்பதுதான். இவர்களுடன் இப்போதும் நட்பில் இருப்பது மகிழ்வான விஷயம்தானே.

சுட்டும் விரலுடன் 'நீ..!' என்ற பெயரில் வந்த இந்தப் புத்தகத்தில் கல்லூரி மாணவர்களுக்கே உரியனதான காதல் கவிதைகளே அதிகமிருக்கும் என்றாலும், தேவகோட்டையைச் சுற்றி இருக்கும் கிராமங்களில் இருந்து படிக்க வந்த மாணவர்கள் வெகு சிரத்தையாய் ஒரு இதழ் நடத்துவதும், அதில் பலர் எழுதுவதும் பார்க்கும் போது பிரமிப்பாக இருந்தது. நூலகத்துக்குப் போகும் போது இந்தப் புத்தகங்கள் குறித்த விவாதங்கள் நடப்பது ஆச்சர்யமாக இருக்கும்.

கல்லூரியில் பேராசான் பழனி ஐயாவுடன் நெருக்கமான பின்னர்தான் எழுத்தின் மீது எனக்கு ஆர்வம் உண்டானது. இரண்டாம் ஆண்டு ஆரம்பத்தில் நானும் என் நண்பர் முருகனும் ஒரு மாலை நேரத்தில் வீடு திரும்பும் போது 'நீ..!' கொடுத்த தாக்கத்தில் ஏன் நாம் ஒரு கையெழுத்துப் பிரதி நடத்தக் கூடாது என்று பேசினோம். இந்தப் பேச்சு அதன் பின்னான நாட்களிலும் எங்கள் பின்னே தொடர்ந்தது.

எங்களுக்குள் இந்த விதை விழுந்த பின் நாங்களும் ஒரு கையெழுத்துப் பிரதி நடத்த ஆசைதான்... மாதாமாதம் அதற்கென ஒரு தொகை செலவு செய்ய வேண்டும். அன்றைய விவசாயக்







குடும்பச் சூழலில் பெரும் பணமெல்லாம் செலவு செய்ய முடியாது என்ற எண்ணத்துடன் இதழாகக் கொண்டு வந்து என்ன செய்வது...? கல்லூரி நூலகத்தில் மட்டும் ரெண்டு புத்தகம் போட்டால் போதுமா..? அதை யார் வாசிப்பார்கள்...? வாசிப்பவர்கள் என்ன சொல்வார்கள்...? போன்ற பல கேள்விகள் மனசுக்குள் எழுந்த நிலையிலும் நான், முருகன், சுபஸ்ரீ, இளையராஜா, பிரபாகரன், அம்பேத்கார் என ஆறு பேர் கையெழுத்துப் பிரதிக்கான குழுவாய் இணைந்திருந்தோம்.

அதன் பின் 'மனசு' என்ற பெயரில் இதழைக் கொண்டு வந்தோம். கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என வந்த முதல் இதழைக் கல்லூரி நூலகம், துறைச்சுற்று, தேவகோட்டை பொது நூலகம் என மூன்று புத்தகமாக மட்டும் கொண்டு வந்தோம். முதல் இதழுக்கு மாணவர்களை விட ஆசிரியர்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. எங்களின்உழைப்புஅவர்களால்பாராட்டப்பட்டது. சில பேராசிரியர்கள் தங்களுக்குத் தோன்றிய சில விஷயங்களைச் சொல்லி அடுத்த இதழில் அதைச் செய்யுங்கள் என்றார்கள்.

அடுத்த இதழ் வரும் போது உயர்நிலைப் பள்ளிகளான என்.எஸ்.எம்.வி.பி.எஸ், தே பிரித்தோ, ஜெயிண்ட் மேரீஸ் நூலகங்களுக்கும் கொடுத்து ஆறு புத்தகமாகக் கொண்டு வந்தோம். பள்ளிகளிலும் எங்கள் 'மனசு'க்கு நல்ல பேர் கிடைத்ததால் இதழ் எங்களுடன் நின்று விடாது, அதன் பின்னும் தொடரும் என்றே நினைத்தோம். ஏனோ எங்களுக்குப் பின் யாரும் எடுத்து நடத்த விரும்பவில்லை. கல்லூரிச் சிற்றிதழ்கள் எல்லாமே நாம் படிக்கும் மூன்றாண்டுகளுக்கு மட்டுமே உயிர் வாழ்பவை என்பதை உணர வைத்தது.

எங்களின் எழுத்துக்கள் என்பதைவிட பேராசிரியர்கள், வெளிநட்புக்கள், தேவகோட்டை கலையிலக்கியப் பெருமன்றத்தின் உறுப்பினர்கள் என எல்லாரிடமும் வாங்கி வெளியிட ஆரம்பித்தோம். 'மனசு' என்ற பெயர் கல்லூரியில் மிகவும் பிரபலமானது. ஒவ்வொரு மாதமும் அதற்கான உழைப்பு என்பது தொன்னூறுகளில் மிகப்பெரியதாகத்தான் எங்களுக்குத் தெரிந்தது.

நாப்பது அம்பது பக்கங்களை அழகான கையெழுத்தால் எழுதி, அதன் பின் அதைக் காரைக்குடி 'ஸ்டூடண்ட்ஸ் ஜெராக்ஸ்'-ல் கொடுத்துக் காப்பிகளாக்கி, புத்தகமாய் மாற்றி வெளியிட்டு வந்தோம்.

மனசு இதழில் முத்தாய்ப்பாய், அப்போதைக்கு எது மிக முக்கியமான விவாதமாக இருக்குமோ அதை வைத்து ஒரு கருத்துக் கணிப்பு போல நடத்த ஆரம்பித்தோம். மாணவர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் என எல்லாரிடமும் அந்தக் கேள்வியைக் கேட்டு அவர்களின் கருத்தை வாங்கி அதை இதழில் அவர்களின் போட்டோவுடன் கொண்டு வந்தது பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்தக் கருத்துக் கணிப்பில் என்னிடம் ஏன் கேள்வி கேட்கவில்லை என்ற கேள்விகளை எல்லாம் எதிர்கொண்டோம், அப்போதுதான் எங்கள் இதழ் எப்படி மற்றவர்களின் மனதில் இடம் பிடித்துள்ளது என்பதை உணர முடிந்தது.

நானும் முருகனும் அதே கல்லூரியில் பணி புரிந்த போது (முருகன் இப்போதும் அங்குதான் பணி புரிகிறார்) எங்களுக்குப் பேராசியராய் இருந்தவர்கள் 'மனசு' இதழை நினைவு கூர்ந்து இப்போது கையெழுத்துப் பிரதிகள் எதுவும் வருவதில்லை... நீங்கள் ஏன் மாணவர்களை வைத்து மீண்டும் மனசு இதழைக் கொண்டு வரக்கூடாது என்று கேட்டார்கள்... இதுதான் எங்களின் இதழுக்குக் கிடைத்த வெற்றி என்றாலும் மீண்டும் கொண்டு வருதல் என்பது நடக்கவில்லை.

மாணவர்களாய் எங்கள் மன ஆசைகளை எல்லாம் ஒரு இதழாய் ஆக்கியபோது இணைந்து பயணித்த நட்புகள் இல்லாத நிலையில் மாணவர்களை வைத்து நடத்துதல் என்பது எப்படிச் சாத்தியப்படும் என்ற நினைப்பே இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். இரண்டாயிரங்களுக்குப் பின்னான மாணவர்கள் பெரும்பாலும் இணையத்துக்குள் இயங்க ஆரம்பித்தார்கள் என்பதால் பெரும்பாலானோருக்கு இந்தச் சிற்றிதழ்கள் மீதான ஆர்வம் இல்லை என்பதும் அந்த முயற்சியில் இறங்காமல் போகக் காரணமாக இருந்திருக்கலாம்.

நாங்கள் கல்லூரியில் 'மனசு' இதழ் நடத்திய போது, 'நீ..!' நடத்தியவர்கள் அங்கிருந்து வெளியேறிய நிலையில் எனது சகோதரன் பழனி அவரின் நண்பர்கள் பார்த்தீபன் உள்ளிட்ட சிலருடன் இணைந்து 'ரோஜா' என்றொரு கையெழுத்துப் பிரதியைக் கொண்டு வந்தார். நாங்கள் எல்லாம் இப்போது வரும் வார இதழ்களின் அளவில்தான் புத்தகத்தை வடிவமைத்தோம். அவர்களோ கட்டுரை நோட்டு அளவில் கொண்டு வந்தார்கள். 'நீ..!'யைப் போல் 'ரோஜா'விலும் முழுக்க முழுக்க கவிதைகள்... அதிகம் ஹைக்கூ கவிதைகளுக்கு வாய்ப்புக் கொடுத்தார்கள்.

நாங்கள் மூன்றாம் ஆண்டு படித்த போது இரண்டாம் ஆண்டு படித்த பரக்கத் அலி, கவி'தா' என்ற பெயரில் ஒரு கையெழுத்துப் பிரதி கொண்டு வந்தார். கவிதைகள் என்னும் இடத்தில் இருந்து கதைகளுக்கான இதழாக அது வெளிவந்தது. நாங்கள் ஆறு பேர் சேர்ந்து ஆரம்பித்து மூவரில் வந்து நின்ற போதும் எங்களின் இதழ் தொடர்ந்து கொண்டிருந்தது. அதற்கான மெனக்கெடல் என்பது மாதாமாதம் சில நாட்களைத் தின்று கொண்டிருக்கிறதே என்ற எண்ணத்தை எங்களுக்குள் விதைத்த போது தனி ஒருவனாய் கவி'தா'வை நடத்திய பரக்கத் அலியைப் பார்த்து எங்கள் மன அயற்சியைத் தூக்கி எறிந்தோம் என்பதே உண்மை.

பரக்கத் அலி தனது இதழ் சார்பாக, தமிழய்யா தேனப்பன் அவர்களின் உதவியுடன் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு சிறுகதைப் போட்டி நடத்தினார். நிறையப் பேர் கலந்து கொண்டார்கள்... இதற்கான பரிசளிப்பு விழாவை, கல்லூரிக் கலையரங்கில் நடத்தியதுடன் பரிசு பெற்ற கதைகளுடன் தேர்ந்தெடுத்த சிறுகதைளையும் சேர்ந்து ஒரு புத்தகமாகக் கொண்டு வந்தார்.

கல்லூரி வாழ்வில் தனி ஒருவனாய் எழுத்துக்கு அவர் செய்த சேவை இன்னும் மனசுக்குள் பசுமையாய். இப்போது அவர் எங்கிருக்கிறார்..? எழுதிக் கொண்டிருக்கிறாரா... இல்லையா... என்பதெல்லாம் தெரியவில்லை என்றாலும் அன்றைய நிலையில் அவரின் செயல்பாடு பாராட்டுக்குரியது. தனி ஒருவனாய் போட்டிகள் வைத்து சொந்தப் பணத்தைச் செலவு செய்து பரிசுகள் கொடுத்து விழா வைத்து எங்களின் முன்னே பரக்கத் இமயமாய் உயர்ந்து நின்றார்.

நாங்கள் எல்லாம் இப்படியான முயற்சி எடுக்கவில்லை என்றாலும் மற்ற இதழ்கள் கல்லூரி மாணவர்கள் மத்தியில் மட்டுமே நின்று போக, எங்கள் புத்தகம் வெளிவட்டாரங்களிலும் பரவலாகி இருந்ததால் மட்டுமே இன்று வரை பேசப்படுகிறது. அதில் மரம் என்றொரு கவிதை எழுதிய கலை இலக்கியப் பெருமன்றச் செயலாளராக இருந்து சென்ற ஆண்டு கொரோனாவுக்குப் பலியான அண்ணன் முருகன் அவர்களை சிறந்த கவிஞர் என மற்றவர்கள் அறிய வைத்தது. அதன் பின் அவரிடம் பலர் கவிதைகள் எழுதச் சொல்வதாய்ச் சொல்லிச் சிரிப்பார்.

எங்களுக்குப் பின் சில இதழ்களைச் சிலர் கொண்டு வந்து ஓரிரு மாதங்கள் மட்டும் நடத்தி நிறுத்தி விட்டார்கள். இப்போது எங்கள் கல்லூரியில் யாரேனும் கையெழுத்துப் பிரதி நடத்துகிறார்களா என்பது தெரியவில்லை. அப்படி நடத்தினால் அவர்களுக்கு ஒரு பூங்கொத்து.

பழனி ஐயா பார்'தீ' என்னும் கையெழுத்துப் பிரதி நடத்தினார்... இது சிறிய நாலாய் மடிக்கப்பட்ட ஒற்றைப் பேப்பர் புத்தகம்தான் என்றாலும் அச்சுப் பிரதியாய் வந்ததுடன் அவருடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு எல்லாம் தபாலில் அனுப்பி வந்தார். நிறையச் செய்திகள்... சிறப்பான செய்திகள்... நாம் அறியாத விஷயங்கள் என நிறைவாய்க் கொடுத்தார். நீண்ட நாட்கள் அவர் அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்.

அபுதாபி வந்த பின் எனக்குப் பிடித்த பெயரான 'மனசு'வை வைத்தே வலைப்பூ ஆரம்பித்து நிறைய எழுத, இரண்டு புத்தகங்கள் கொண்டு வர, கல்லூரியில் ஐயா விதைத்த விதையும் நாங்கள் நடத்திய கையெழுத்துப் பிரதியுமே காரணமாய் இருந்தது, இருக்கிறது என்பதே உண்மை.

சிற்றிதழ்கள் குறித்துப் பேசும் போது அமீரகத்தில் அலைனில் இருந்த ஐயா கிரீஷ் ராமதாஸ் அவர்கள் சிற்றிதழ்கள் உலகம் என்றொரு புத்தகம் கொண்டு வந்ததை, அதைத் தமிழகத்தில் அவரின் மகள் மூலமாக பலரிடம் கொண்டு சென்றதைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. மிகச் சிறந்த உழைப்பு... எல்லாரையும் அழைத்து எழுதி வாங்கி, இதழை ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தன் நட்புக்கள் மூலமாக வெளியிட்டு சிற்றிதழ்களைப் பிரபலமாக்கணும் எனப் பேசியவரை காலன் ஏனோ இங்கிருந்து அழைத்துக் கொண்டான்.

கையெழுத்துப் பிரதிகள் - சிற்றிதழ்கள் இப்போதும் சில இடங்களில் இருக்கத்தான் செய்கின்றன என்றாலும் இணையம் இன்று எழுத நிறைய வாய்ப்புக்களைக் கொடுக்கிறது என்பதால் பெரிய பத்திரிக்கைகள் இன்னும் பிரபலங்களின் பின்னால் பயணிப்பதால், மிகச் சிறந்த எழுத்தாளர்கள் எல்லாம் இணையங்களில் தங்கள் எழுத்துக்களை பகிர்ந்து கொண்டு பயணிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள்.

சிற்றிதழ்களை இழந்து விடாமல் யாரோ ஒருவர் அதன் விதையை ஊன்றிக் கொண்டே இருப்பது மகிழ்ச்சி... அது தொடரட்டும்.

என்.செல்வராஜா
(நூலகவியலாளர், லண்டன்)




# ‘நூலகவியல்’’ ஈழத்தில் நூலகவியல் துறைசார்ந்த முதலாவது தமிழ் சிற்றிதழ்

### இலங்கையில் நூலகக் கல்வி

இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் நூலகவியல் துறையின் வளர்ச்சிப்போக்கில் முக்கியமானதொரு காலகட்டமாக எழுபதுகளின் நடுப்பகுதி கருதப்படுகின்றது. அக்காலகட்டம் வரையில் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ளூராட்சி சேவையில் நூலகர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு கல்வித் தரம் அக்கறையுடன் எதிர்பார்க்கப்படவில்லை. பெருமளவில் கிராமசபை, நகரசபை சிற்றூழியர்களாக இருந்தவர்கள் பதவி உயர்வு கண்டு நூலகப்பொறுப்பாளர்களாக நியமனம் பெற்றார்கள். கிராமசபை நிர்வாக ஊழியர்கள்

சுயவிருப்பின் அடிப்படையில் நூலகத்தையும் மேற்பார்வை செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். உயர்தர பாடசாலைகள் தவிர்ந்த பெருவாரியான தமிழ்ப் பாடசாலைகளில் நூலகச் சிந்தனை அக்கால கட்டங்களில் முகிழ்த்திருக்கவில்லை. நூலகரின் கடமையை நூலகம் பற்றிய எவ்வித தொழில்நுட்ப பயிற்சியோ, அனுபவமோ அற்ற ஆசிரியர்களும், வசதிக் கட்டணத்தில் நியமிக்கப்படும் பழைய மாணவர்களுமே பூர்த்திசெய்து வந்திருந்தார்கள்.

இலங்கை உள்ளூராட்சி சேவைகள் நூலகர் தரம் 3 என்ற பதவியை உருவாக்கிய பின்னர் தான் 1976களுக்குப் பின்னர் படிப்படியாக உள்ளூராட்சி சேவைகளுக்குட்பட்ட நூலகர் பதவிகளுக்கு நூலகவியல் கல்வி கற்றவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். பாடசாலைகளிலும், பாடத்திட்டங்களின் மாற்றங்களால் பாடநூல்களுக்கு அப்பால் பரந்த வாசிப்பிற்கான அறிவுத்தேடலுக்கு மாணவர்கள் ஊக்கமளிக்கப்பட்டார்கள். கல்வித்துறையில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்கள் ஈழத்தின் நூலகவியல் துறைக்கு சாதகமானவையாக அமைந்தன.

எழுபதுகளின் நடுப்பகுதிகள் வரையில் இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகவியல் கல்விச்சேவை தமிழ்ப் பிரதேசங்களில் பாரிய விஸ்தரிப்பு எதனையும் மேற்கொள்ள முயற்சிக்கவில்லை. கொழும்பு, பின்னர் கண்டி என குறுகிய வட்டத்துக்குள்ளேயே நூலகவியல் சங்கத்தின் பயிற்சிகளும் பரீட்சைகளும் மட்டுப்பட்டிருந்தன. 70களின் நடுப்பகுதியில் உள்ளூராட்சி சேவையில் ஆட்சேர்ப்பிற்காக நூலகக்கல்வி பெற்றவர்களுக்குத் தான் முன்னுரிமை கிட்டியது. அதன் பின்னர் நூலகக் கல்வியில் இளைஞர்களிடையே படிப்படியாக ஆர்வம் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் பாரம்பரியக் கல்வியமைப்பில் ஊறியிருந்த இளைஞர்கள் இத்துறையில் படிப்படியாக ஈர்க்கப்பட்டதால் ஆண்டுதோறும் இலங்கை நூலகச் சங்கத்தின் முதலாம் இரண்டாம் வகுப்புகளிற்கான பயிற்சிநெறிகள் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் விரிவுரையாளர்கள் வந்து இந்த வகுப்புகளை நடத்தினார்கள். வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலிருந்தும் மாணவர்களும், இளம் நூலகர்களும் யாழ்ப்பாணத்திற்கு வந்து நூலகக் கல்வியைக் கற்றார்கள். எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து 80களின் ஆரம்பம் வரை இந்த வளர்ச்சி மிக ஆரோக்கியமானதாக இருந்தது.

### அயோத்தி நூலக சேவைகள்

தமிழ்ப் பிரதேசங்களில் நூலகங்களும் நூலகர்களும் எதிர்நோக்கிய தொழில்சார் பிரச்சினைகளுக்கு அறிவியல், தொழில்நுட்ப ரீதியில் தாய்மொழியில் உரையாடி உதவிகளையும் ஆலோசனைகளும் வழங்குவதற்கு அக்கால கட்டத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பு எதுவும் தமிழர் தாயக மண்ணில் இருந்திருக்கவில்லை.

இப்பிரச்சினையை எதிர்கொள்ளும் வகையில், நூலகத்துறை அறிஞர்களின் ஆசியுடன் 1985இல் அயோத்தி நூலக சேவைகள் என்ற நிறுவனம் அவ்வேளையில் யாழ்ப்பாணம் ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவன நூலகராகவிருந்த என்.செல்வராஜா அவர்களால் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் நூலகவியல் கல்வியை தமிழில் பரவலாக்குவதும், தமிழ் பிரதேச நூலகங்கள் எதிர்நோக்கும் பல்வேறு தொழில்சார் பிரச்சினைகளுக்குரிய தீர்வுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை நிறுவனரீதியில் வழங்குவதும், சிறு நூலகங்களின் வரையறுக்கப்பட்ட நிதிவசதிக்கேற்ப கூட்டுக் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் காகிதாதிகளை பெற்றுவழங்குவதுமாகும்.

## நூலகவியல் சஞ்சிகை

*இத்திட்டத்திற்கு அடிப்படையான தொடர்பாடலையும், நூலகர்களுக்கான அறிவூட்டலையும் மேற்கொள்ளும் முகமாக 'நூலகவியல்" என்ற காலாண்டு சஞ்சிகை செப்டெம்பர் 1985இல் அயோத்தி நூலக சேவைகள் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கும் அனைத்து நூலகங்களுக்கும், தமிழ் நூலகர்களுக்கும் நூலகவியல் பிரதிகள் காலாண்டுக்கு ஒரு முறை அனுப்பிவைக்கப்பட்டன. யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம், யாழ் மாவட்ட உள்ளூராட்சி சேவைகள் அலுவலகம், யாழ் மாவட்ட கல்வி நிறுவனங்கள் என்பன ஆர்வத்துடன் இவற்றை விநியோகிக்க முன்வந்திருந்தன. தமிழ்மூலம் நூலகவியல் கல்வியைக் கற்கும் மாணவர்களுக்கும், சுயம்புவாக நூலகத்துறையில் ஈடுபட்டுவந்த பல தராதரப் பத்திரமற்ற நூலகர்களுக்கும் நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகை தமது துறைசார் அறிவை விருத்தி செய்துகொள்ள வரப்பிரசாதமாக அமைந்தது.*

*நூலகவியல் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் திரு சி.முருகவேள், வே.இ.பாக்கியநாதன், கலாநிதி இ.பாலசுந்தரம், திருமதி ரூபா நடராஜா, திருமதி ரோ.பரராஜசிங்கம், திரு. எஸ்.எம். கமால்தீன், திரு.செ.கிருஷ்ணராஜா, திருமதி வி.பாலசுந்தரம் ஆகியோர் பணியாற்றினார்கள். ஏழாவது (இறுதி) தொகுதியின் நிர்வாக ஆசிரியராக திருமதி கல்பனா சந்திரசேகர் பணியாற்றினார்.*

## நூலகவியலில் தமது படைப்புகளை இடம்பெறச் செய்தோர் பின்வருமாறு:

*அமரதாச, கே.ஜி. (எழுத்தாளர்), அருள்நந்தி, தவமணிதேவி (பதில் நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம்), அருளானந்தம், செல்வி. ஸ்ரீ.(உதவி நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), இஸ்மாயில், சுல்பிகா ஆதம் (தேசிய கல்வி நிலையம், மஹரகம), உத்திரன், சு. (எழுத்தாளர்), கமலாம்பிகை, க.( உதவி நூலகர், இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை, கொழும்பு), கமால்தீன், எஸ்.எம்.(முன்னாள் உதவி நெறியாளர், இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை), கருணானந்தராஜா, திருமதி. அ. (உதவி நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கிருஷ்ணராஜா, செ. (விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), குலரத்தினம், க.சி.(எழுத்தாளர்), கைலாசபதி, க.(பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கொறயா, ஈஸ்வரி(முன்னாள் நூலகர், கொழும்பு பொது நூலகம்), சண்முகதாஸ், மனோன்மணி (விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சந்திரசேகர், திருமதி. கல்பனா (சிரேஷ்ட உதவி நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சாரல் நாடன் (எழுத்தாளர்), செந்தில்நாதன், இ. (எழுத்தாளர்), செல்வராஜா, என்.(நூலகர், இவ்லின் இரத்தினம் நிறுவனம்), செல்வராஜா, ஜோன் (நூலகர், பொது நூலகம், மட்டக்களப்பு), தங்கராசா, க. (எழுத்தாளர்), தம்பையா, ஆர்.எஸ்.(முன்னாள் நூலகர், யாழ்ப்பாணக் கல்லூரி), தனபாலசிங்கம், ச. (பிரதம நூலகர், யாழ்ப்பாணப் பொது நூலகம்), தில்லை நாதன், எஸ். (இயக்குநர், பொருத்தமான தொழில் நுட்ப சேவைகள் நிறுவனம், நல்லூர்), நவசோதி, க. (உதவிச் சுவடிக் காப்பாளர், தேசிய சுவடிக்கூடத் திணைக்களம், கொழும்பு), நித்தியானந்தன், மு. (திறனாய்வாளர், தீபம் தொலைக்காட்சி, இலண்டன்), பரசுராமன், அ. (எழுத்தாளர்), பாக்கியநாதன், திருமதி. ந. (உதவி நூலகர் ஃ மருத்துவபீடம், யாழ், பல்கலைக்கழகம்), பாக்கியநாதன், கலாநிதி வே.இ. (விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்), பாலசுந்தரம், திருமதி விமலா(உதவி நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), பைரூஸ், எம்.எம்.பீ.எம். (பிரதான நூலகர், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்), மாணிக்கவாசகர், கா. (நூலகர், யாழ். மத்திய கல்லூரி),*

முருகவேள், சி. (நூலகர், யாழ். பல்கலைக்கழகம்), மைக்கல், அ.றெ. (மாகாண பொப்லெப் () மேற்பார்வையாளர், திருக்கோணமலை), லோகராணி, செல்வி. ப. (நூலகர், சர்வோதய மத்திய நூலகம், புங்குடுதீவு), விசாகரூபன், திருமதி மைதிலி (உதவி நூலகர், உதவி நூலகர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), விவேகானந்தன், வே. (முன்னாள் நூலகப் பொறுப்பாளர், இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்), ஐவாத், ஏ. ஏல். (ஸாகிறாக் கல்லூரி, கொழும்பு), ஜீவன், சிவனையா (முன்னைநாள் உதவி நூலகர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), ஜெயகாந்தன், ஆ. (நூலக உதவியாளர், இலங்கை தேசிய நூலகம், கொழும்பு), ஜெயரத்தினம், வா. (கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி), ஜெயராசா, கலாநிதி சபா. (விரிவுரையாளர், கல்வித்துறை, யாழ். பல்கலைக்கழகம்), ஸ்ரீபிரியா, எஸ். (எழுத்தாளர்), ஹாசீம், எம். அஜ்வத் (விரிவுரையாளர், அவுஸ்திரேலியா).

நூலகவியல் சஞ்சிகையானது, நூல் வெளியீட்டுப் பணியையும் இக்காலகட்டத்தில் மேற்கொண்டு வடக்கு, கிழக்கு, மலையகத்திலிருந்து நூலகவியல்துறையிலும், நூலியல் துறையிலும் அக்கறைகொண்ட பலரை ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்திருந்தது. இதனால் அயோத்தி நூலகசேவை, அக்கால கட்டத்து போர்க்காலச் சூழலிலும் சக்திமிக்கதொரு நூலக அமைப்பாகத் தேசிய ரீதியில் வளர்ச்சிகண்டது.

நூலகவியல் சஞ்சிகையின் விலை தனிப்பிரதி ரூபா 7.50 ஆகவும், ஆண்டுச் சந்தா ரூபா 30.00ஆகவும் ஆரம்பத்தில் இருந்தது. காலக்கிரமத்தில் நூலகத்துறையில் ஈடுபடாத பிறதுறைசார்ந்தோரும் நூலகவியல் சஞ்சிகைகளில் ஈடுபாடு காட்டிவந்தனர். அவர்கள் சந்தாதாரராகாமல், புத்தகசாலைகளில் நூல்தேட்டத்தை தனிப்பிரதிகளாக கொள்வனவுசெய்து வந்தனர். சிலகாலங்களில் தனிப்பிரதியின் விலை ரூபா 10.00ஆக உயர்த்தப்பட்டது. ஆண்டு சந்தா ரூபா 30.00 ஆகவே மாற்றமின்றி இருந்தது.

நூலகவியல் சஞ்சிகையின் விடயப் பரப்பு விசாலமானது. வெளியாகியுள்ள 27 இதழ்களிலும் நூலக வரலாறு (6 கட்டுரைகள்), நூலகக் கல்வி (2 கட்டுரைகள்), நூற் பகுப்பாக்கம் (7 கட்டுரைகள்), பட்டியலாக்கம்(12 கட்டுரைகள்), நூலகமும் கணனியும் (3 கட்டுரைகள்), நூலகமும் சமூகமும் (12 கட்டுரைகள்), நூலகமும் இளையோரும் (3 கட்டுரைகள்), நூலகமும் கல்வியும் (6 கட்டுரைகள்), நூலக முகாமைத்துவம்(4 கட்டுரைகள்), நூலகக் கூட்டுறவு(3 கட்டுரைகள்), நூலீட்டல், நூற்பாதுகாப்பு (7 கட்டுரைகள்), தேசிய நூலகமும் ஆவணக்காப்பகமும்(6 கட்டுரைகள்), நமது நூலகங்கள் (8 கட்டுரைகள்), நமது நூலகர்கள் (6 கட்டுரைகள்), எழுத்தும் அச்சுக்கலையும் (3 கட்டுரைகள்), நூலியல், நூல்கள், பதிப்புத்துறை (6 கட்டுரைகள்), நூல்விபரப்பட்டியல், சுட்டிகள் (2 கட்டுரைகள்), கருத்தரங்குகள், ஒன்றுகூடல்கள் (3 கட்டுரைகள்) ஆகிய 18 பிரிவுகளின் கீழ் 99 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

1985 முதல் 1991வரை ஆறாண்டுகள் தடங்கலின்றி வெளிவந்த நூலகவியல் சஞ்சிகை, அதன் ஆசிரியர் புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்துக்குச் சென்றதோடு வெளிவராது நின்றுபோயிற்று. தபால் போக்குவரத்து, மற்றும் போர்ச்சூழல் காரணமாக நூலகவியல் மீண்டும் வெளிவருவது நீண்டகாலம் தடைப்பட்டிருந்தது. இருப்பினும் பெருஞ்சிரமத்தின் மத்தியில் டிசம்பர் 2005, ஏப்ரல் 2006 மற்றும் ஏப்ரல் 2007 ஆகிய காலகட்டங்களில் நூலகவியலின் ஏழாவது தொகுதியின் மூன்று இதழ்கள் குமரன் புத்தக இல்லத்தால் கொழும்பில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன. விநியோகப் பிரச்சினைகள் காரணமாக நூலகவியல் சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவரமுடியாது போயிற்று.

*நூலகவியல் சஞ்சிகையில் வெளிவந்திருந்த ஆக்கங்களை அவ்வப்போது அவற்றின் படைப்பாளிகளின் உதவியுடன் தொகுத்தும் புதுக்கியும் தனி நூல்களாகவும் வெளியிடப்பட்டன. இவை இன்றும் ஈழத்தின் தமிழ் நூலகவியல் துறையின் முன்னோடி தமிழ் நூல்களாக பயன்பாட்டில் இருக்கின்றன. அயோத்தி நூலகசேவை அக்காலகட்டப் போர்ச்சூழலில் மிக முக்கிய சமூகத் தேவையாகவிருந்த முதல் உதவிச் சிகிச்சைக் கைநூல் ஒன்றுடன் தன் வெளியீட்டுப் பணியை 1985இல் ஆரம்பித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூக மருத்துவபீட விரிவுரையாளராகவிருந்த வைத்திய கலாநிதி ந.சிவராஜா அவர்கள் எழுதிய 'முதல் உதவி" என்ற நூலே அயோத்தி நூலகசேவையின் முதல் வெளியீடாயிற்று.*

*காலக்கிரமத்தில் நூலகத்துறை, மற்றும் நூலியல் துறைகளுக்கான வெளியீட்டுப் பணிகளில் அயோத்தி நூலக சேவைகள் நிறுவனம் ஈடுபடலாயிற்று. நூலகவியல் துறையின் முதலாவது நூலாக 'நூற்பகுப்பாக்கம்: நூலகர்களுக்கான கைநூல்" அமைந்தது. நூலகவியல்துறை விரிவுரையாளராகவிருந்த கலாநிதி வே.இ.பாக்கியநாதன் அவர்களால் எழுதப்பட்டு ஜூலை 1986இல் இந்நூல் வெளியாயிற்று. நூலகங்களில் நூல்களைப் பகுப்பாக்கம் செய்வதற்குப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் டூவி தசாம்சப் பகுப்பு முறையின் 19ம் பதிப்பின் சுருக்கப் பிரிவினை இந்நூல் தமிழில் உள்ளடக்கியிருந்தது. டூவி தசாம்சப் பகுப்பு முறையில் பகுப்பாய்வு செய்வதற்குப் பயிற்சி பெற்றிராத தமிழ் நூலக ஊழியர்களுக்கு ஏற்ற வகையில் எளிய உதாரண விளக்கங்களும் இந்நூலில் காணப்பட்டிருந்தது. இந்நூலின் முக்கியத்துவம் கருதி இரண்டாவது பதிப்பு ஆகஸ்ட் 1989இல் வெளியிடப்பட்டது. இடையில் நூலாசிரியரால் தமிழ்நாட்டில் இயங்கிவந்த காந்தளகம் வெளியீட்டகத்தின் வாயிலாகவும் இந்நூல் மீள்பிரசுரம் கண்டிருந்தது.*

*நூலகவியலில் வெளிவந்த தனது கட்டுரைகளைத் தொகுத்து, சில புதிய கட்டுரைகளுடன் 'கல்வி நிறுவன நூலகங்கள்" என்ற நூலை, நூலகர் திருமதி விமலா பாலசுந்தரம் அவர்கள் 1987இல் எழுதி வழங்கியிருந்தார்.*

*1989இல் விமலாம்பிகை பாலசுந்தரம் தொகுத்த மற்றொரு நூல் "கலைச்சொற்றொகுதி: நூலகமும் தகவல் விஞ்ஞானமும்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. அயோத்தி வெளியீட்டின் 3வது நூலாக அமைந்த இது நூலக, தகவல் விஞ்ஞானத்துறையில் பயன்படுத்தப்படும் சுமார் 1500 ஆங்கில கலைச்சொற்களுக்குரிய தமிழ்ப் பதங்களைக் கொண்டிருந்தன. இலங்கையில் நூலகவியல்துறையில் தமிழில் வெளிவந்துள்ள முதலாவது கலைச்சொற்றொகுதி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*1989இலேயே 'கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும்" என்ற பெயரில் நான்காவது நூல் அயோத்தி நூலக சேவைகள் நிறுவனத்தின் இயக்குநரான என்.செல்வராஜா அவர்களினால் எழுதி வெளியிடப்பட்டது. தமிழ்ப் பிரதேசங்களை மையப்படுத்தி கிராம நூலக இயக்கம், சிறுவர் நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பாலர்களுக்கான நூல்களைக் கிராமமட்டத்தில் தயாரித்தல், சனசமூக நிலையங்களின் நூலக நடவடிக்கைகள், நூல் கொள்வனவு போன்ற விடயங்களை விளக்கும் கட்டுரைகளைக் கொண்டதே இந்நூலாகும். இவையும் நூலகவியல் சஞ்சிகையில் முன்னர் பிரசுரமானவையே.*

*என்.செல்வராஜாவின் மற்றொரு நூலான "ஆரம்ப நூலகர் கைந்நூல்" செப்டெம்பர் 1991இல் கொழும்பிலிருந்து வெளியிடப்பட்டிருந்தது. சிறு நூலகமொன்றின் செயற்பாடுகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இந்நூலில் நூலகத்துறையைத் தேர்ந்தெடுக்கும் ஒருவருக்கு நூலகமொன்றின் அன்றாட நடவடிக்கைகள், மற்றும் நிர்வாக அறிவுரைகள் விரிவாக வழங்கப்பட்டிருந்தன.*

இலங்கை தேசிய நூலக சேவைகள் சபையின் உதவி இயக்குநராகவிருந்த நூலகவியலாளர் எஸ்.எம்.கமால்தீன் அவர்களது நூலகவியல் கட்டுரைகளைத் தாங்கிய 'நூலும் நூலகமும்" என்ற நூல் செப்டெம்பர் **1992**இல் கொழும்பில் வெளியிடப்பட்டது.

"யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு" என்ற நூல் என்.செல்வராஜா அவர்களால் ஐக்கிய இராச்சியத்திலிருந்து அயோத்தி நூலகசேவைகளின் வாயிலாக ஜுன் **2001** இல் வெளியிடப்பட்டிருந்தது.

அயோத்தி நூலக சேவையின் மிக முக்கியமான நூலியல் பங்களிப்பாக அமைவது 'நூல்தேட்டம்" என்ற பாரிய தொகுப்பு முயற்சியாகும். தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான குறிப்புரையுடனானதொரு நூல்விபரப்பட்டியல் நூல்தேட்டமாகும். ஒவ்வொரு தொகுதியிலும் **1000** நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவிதசாம்சப் பகுப்புமுறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவும் தொடர் இலக்கமிடப்பட்டுள்ளது. நூல் தலைப்பு




வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பன நூலின் சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது. **15** தொகுதிகளைக் கண்டு **16**ஆவது தொகுதிக்கான பணிகளைத் தொடரும் நூல்தேட்டம், இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழர்களின் வெளியீட்டு முயற்சிகளை பரந்த அளவில் பதிவுசெய்து வைக்கும் முன்னோடி முயற்சியினை மேற்கொண்டிருக்கிறது.


அயோத்தி நூலகசேவைகள் அமைப்பு ஒரு தனிமனித நிறுவனமாக இயங்கியபோதிலும், அதன் பணிகளில் ஈழத்துத் தமிழ் நூலகர்களில் பலர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டனர். இலங்கை நூலகவியல் வரலாற்றில் அயோத்தி நூலகசேவையினதும், நூலகவியல் சஞ்சிகையினதும் இயக்கம் இன்று ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து எழுதப்பட்ட அத்தியாயங்களாகிவிட்டன.

எல். வஸீம் அக்ரம்
(படிகள் இதழாசிரியர்)

# படைப்பாக்க ஊக்குவிப்பில் சிற்றேடுகளின் பங்களிப்பு பற்றிய மேல் நிலை நோக்கு

சிற்றிதழ்கள் என்பன இலக்கிய ரீதியான ஒரு இயங்குதளத்தில் குறித்த வாசகர் வட்டத்தை இலக்காக கொண்டு அல்லது குறித்த படைப்பாளர்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற இலக்கிய ஏடுகள் என வரையறை செய்யலாம்.

சிற்றிதழ் என்ற சொல்லை மாற்றுக்கருத்தியலுக்கான ஒரு செயற்பாடாகவே ஆரம்பத்தில் பார்க்கப்பட்டது. அது நுன் அரசியல் சார்ந்தும், சமூக பொருளாதாரம் சார்ந்ததுமான ஒரு பொறிமுறையொன்றையே காட்சிப்படுத்திக்கொண்டு வளர்ந்தது என்றே குறிப்பிடப்படுகின்றது.




பேராசிரியர் வீ அரசு 'சிற்றிதழ் என்பது அடிப்படையில் மாற்றுக்கான இயக்கம். மாற்றுக்களை அறிமுகம் செய்து உரையாடல் முறைமையை நிகழ்த்திய இதழ்கள்" என்று குறிப்பிடப்படுகின்றார்.


வல்லிக்கண்ணன் அவர்கள் சிறு சஞ்சிகைகள் பற்றிக் கூறும் போது அவை 'இலட்சியப்பிடிப்பும் கொள்கை உறுதியும் கொண்டவை" என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

புதிய தலைமுறையினரின் இலக்கிய வளர்ச்சிக்கு சிறுசஞ்சிகைகள் வழிவகுக்கின்றன. என மல்லிகை டொமினிக் ஜீவா குறிப்பிடுகின்றார்.

இலக்கியத்தாகமும் ஈடுபாடும் அர்ப்பணிப்பு உணர்வும் கொண்டவர்களால் இலக்கிய சஞ்சிகைகள் கொண்டுவரப்படுகின்றன என்று ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன் குறிப்பிடுகின்றார்.

தீவிரமான கருத்தாக்கங்களையும் விமரிசனங்களையும் புத்தாக்கங்களையும் வெளிப்படுத்திக் கொண்டு பெறுமானங்களையும் பெறுமதிகளையும் வரையறுத்துக்கொண்டு சிற்றிதழ்கள் இயங்க முனைகின்றன. இதுவே சிற்றிதழ்களின் முறைமை என்பதை இங்கு அறிமுகமாக சொல்ல வேண்டும்.

வரலாற்று நெடுகிலும் சிற்றிதழ்கள் படைப்பாளர்களுக்கும் கருத்தாக்குனர்களும் வளமாக வழியை சமைத்துள்ளன என நிறுவிக்கொள்வது இங்குள்ள பணியாகும்.




சிறுசஞ்சிகைகள் என்பது ஆய்வின்படி காலத்தின் அடையாளம் அகும். தமிழகத்தில் மணிக்கொடி காலம், சரஸ்வதி காலம், என குறிப்பிடும் அளவிற்கு அவை வரலாற்றில் பதிவாகியுள்ளன. அது போல் ஈழத்தில் ஈழகேசரி காலம், மறுமலர்ச்சிக் காலம், கலைச் செல்விக் காலம் போன்ற இதழ்களின் காலங்களில் வரலாறு எழுந்து வந்துள்ளது.

இந்த விடயத்தில் படைப்பாக்க ஊக்குவிப்பில் சிற்றிதழ்களின் பங்களிப்பு என்ற விடயத்தை நின்று ஆய்வு செய்யும் போது, வெகுஜன இதழ்கள் ஊடாக அடையாளமற்ற சீர்படுத்தப்படாத எழுத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வந்ததுடன் அவை சமூக அளவில் வரலாற்றைப் பதிவு செய்யத் தவறியிருந்தன. என்ற அடிப்படையில் அவற்றுக்கு மாற்றீடாகவே சிற்றிதழ்கள் தமது எழுத்துக்களை முன்னெடுத்துள் ளன.

சிற்றிதழ்கள் பொதுவாக படைப்பின் வகைத்தன்மைக்கேற்ப வேறுபடத்தக்கது. சில சஞ்சிகைகள் கவிதைக்கென்றும், சில சஞ்சிகைகள் உரைநடைக்கென்றும், சில சிஞ்சிகைகள் சிறுகதைகளுக்கென்றும், சில சஞ்சிகைகள் பொதுமைப்பாடகவும் கட்டியெழுப்பட்டுள்ளன.

படைப்பாக்க ஊக்குவிப்பில் ஈழத்து சிற்றிதழ்களை பிரதானமாக எடுத்து நோக்கின், மறுமலர்;ச்சி காலமே அதன் அடிகோல் ஈழத்து இலக்;கியத்தின் முதுகை எழுப்பி முன்னிறுத்திய பெறுமை மறுமலர்ச்சி இதழையே சாரும். அதன் பின் சிற்பியின் கலைச்செல்வி தனது பங்கை விரிவு படுத்தியிருந்தது. அச்சஞ்சிகை தொடர்ச்சியாக தரம்வாய்ந்த படைப்புகளை வெளிப்படுத்தியிருந்தது. ஈழத்து தமிழ் இலக்கியத்துறையைச் செழுமைப்படுத்திவரும் ஒரு பிரபல்லியமான எழுத்தாளர் பட்டாளத்தை உருவாக்கியிருந்தது.

மல்லிகை 1966ல் மலர்ந்து அரசியல் சார்ந்த ஒரு பின்னணியில் வளர்ந்தது. இருப்பினும் அச்சஞ்சிகை ஈழத்து இலக்கியத்திற்கு ஆயிரக்கணக்கான எழுத்தாளர்களை உருவாக்கியிருக்கின்றது. கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் வெளிவந்த ஒரு சிற்றிதழ் என்ற முறையில் அச்சஞ்சிகையில் எழுதியவர்களை ஈழத்து எழுத்துத் துறைக்கு கோலோச்சி வருகின்றனர்.

ஞானம் சஞ்சிகையை எடுத்து நோக்கின் அது புதிய தலைமுறைப்படைப்பாளிகளை அறிமுகம் செய்து வைப்பதில் கணிசமான பங்களிப்பை செலுத்தி வருகின்றது.

தமிழில் வெளிவரும் சிறுபத்திரிகைகள் பொதுவான ஓர் இடைவெளியை நிரப்பும் பொருட்டு உருவானவை. அதாவது செய்திகள், அரசியலாய்வுகள், சமூக ஆய்வுகள் ஆகியவற்றை வெளியிடவும் விவாதிக்கவும் வேறு இதழ்கள் உள்ளன. தமிழில் வெளிவரும் பத்திரிகைகள் கடந்த 70 வருடங்களாக அப்பணியை ஆற்றி வருகிறது. இன்றும் அதன் நடுப்பக்கம் சாதாரண பொதுமக்களை ஆகர்சிக்கும் சினிமா நடிகைகளின் அரை நிர்வாணத்தை படமெடுக்கும் மேடையாக உள்ளது. குடிநீர், சுற்றுசூழல் ஆய்வு முதல் மருத்துவம் அணு ஆராய்ச்சி, துணுக்குகள், குறுஞ்செய்திகள், பெண்கள் பகுதி வரை அதில் எழுதப்படுகின்றன. அவை தேறிய பதிவுகளை வழங்க மறுத்துள்ளன. பிரதிகளை மீளப் பதிவு செய்வது வெகுஜன ஊடகங்களின் பணியாக இருக்கின்றதை அவதானிக்க இயலும். ஆனால் சிற்றிதழ்கள் படைப்பாளிகளை கணம் பண்ணி புத்தாக்கப்படைப்புகளையும் புனைவுகளையும்; வளர்க்கின்றன. இவற்றில் இலக்கியத்துக்கு அளிக்கப்படும் இடத்துக்கு அளவே இல்லை.

2000ம் ஆண்டு ஆரம்பத்தில் சில ஈழத்து இதழ்கள் நவீன இலக்கியத்துக்காக மட்டுமே வெளிவந்தன. உதாரணம் கலைமுகம், மூன்றாவது மனிதன். பின்பு இலக்கியத்துக்குத் தொடர்புள்ள திரைப்படம் நாடகம் நாட்டரியல் வரலாற்றாய்வு போன்ற துறைகள் சேர்ந்தன. யாத்ரா. மறுபாதி, கவிஞன் போன்றன கவிதைகளை முன்னிறுத்தி வெளிவந்தன. சர்வதேச மொழிபெயர்ப்புக்கவிதைகள் இவற்றில் அச்சேறி கவிதைத்துறைக்கு வலுச்சேர்த்தன.

தமிழகத்தில் எழுபதுகளின் பிற்பகுதியில் இடதுசாரி தீவிரக்குழுக்கள் பல உருவாகி மார்க்ஸியத்தின் உள்வழிகள் பல அடையாளம் காணப்பட்டபோது அரசியல்கோட்பாட்டிதழ்கள் உருவாயின. உதாரணம் பரிமாணம், புதிய தலைமுறை, நிகழ். இக்காலத்தில்தான் தமிழாய்வுக்கான சிற்றிதழ்கள் பல உருவாயின. உதாரணம் தெசிணி, வள்ளுவம். சிற்றிதழின் முகங்கள் ஏராளமானவை. அவற்றை பொதுவாக ஒரே வகையாகப் புரிந்துகொள்வது பிழை. இன்றும் பொதுவாக இம்மூன்றுவகையான சிற்றிதழ்களும் வருகின்றன.

இக்காலச் சிற்றிதழ்களில் சமகால அரசியல் சமூகவியல் நிகழ்வுகள் ஏராளமாகவே விவாதிக்கப்படுகின்றன. உதாரணமாக காலச்சுவடு. சொல் புதிது அதிகமாக தத்துவத்துகே இடமளித்தது. உயிர்மெய், உயிர்நிழல், காலம் போன்ற சஞ்சிகைகள் நவீன இலக்கியங்களை முன்னிறுத்தி வாசிப்புச் செய்ககின்றன. இவை புலம் தாண்டிய பிரதிகளாக இருப்பினும் அவை படைப்பாக்கத்தை புதிய திசைநோக்கி வழிநடத்தி வருகின்றன.

கடந்த பத்தாண்டுகளில் தமிழில் வெளிவந்த படைப்ளார்கள் பற்றிய சிறப்பான நீண்ட பேட்டிகள் எல்லாமே சிற்றிதழ்களில் வெளிவந்தவையே. ஈழத்தில் ஞானம், யாத்ரா, மூன்றாவது மனிதன், ஜீவநதி, படிகள், போன்ற சஞ்சிகைகளில் அதிகமதிகம் தரமான நேர்காணல்கள் வெளிவந்துள்ளதை அவதானிக்க இயலும். புடிகள் சஞ்சிகையில் சிங்கள படைப்பளார்களின் அதிகமான நேர்கணால்கள் வந்துள்ளன. இவை புதிய கருத்தாடல்களை பதியத்துணிவதை விதந்து குறிப்பிடலாம். இன்றும் தமிழின் முக்கியமான இலக்கிய ஆக்கங்கள் அனைத்துமே சிற்றிதழ்களில்தான் வெளிவருகின்றன. விவாதிக்கவும் படுகின்றன. மார்க்ஸியம், சர்ரியலிசம், அமைப்புவாதம், பின் அமைப்புவாதம், பின் நவீனத்துவம் போன்ற நவீனயுகச் சிந்தனைகள் முழுக்க தமிழில் சிற்றிதழ்கள் மூலமே அறிமுகமாயின. அவற்றின் தமிழ்க்கலாசாரம் சார்ந்த குரல்கள் சிற்றிதழ்களில்தான் உருவாயின. அத்தனை கலைச்சொற்களும் சிற்றிதழ் தளத்தில்

உருவானவையே. கீழைமார்க்ஸியம் எஸ்.என். நாகராஜன், மெய்முதல்வாதம் மு.தளையசிங்கம் ஆகிய தமிழுக்கே உரிய தனிச்சிந்தனைகள் உருவானதும் சிற்றிதழ்ச் சூழலிலேயே. தமிழில் தலித்தியம் இன்றும் முழுக்கமுழுக்க சிற்றிதழ் சார்ந்தே உள்ளது என்ற விடயங்கள் அவதானிக்கத்தக்கவை. இந்த இடத்தில் இலக்கியத்திற்கு தர்க்கரீதியான ஆக்கங்களை அதிகம் வெளியிட்ட பெருமை அலை இதழுக்கு உண்டு.



சிற்றிதழ்களில் எல்லாம் காத்திரமாக ஆக்கங்கள் வெளிவருகின்றன என்று சொல்ல முடியாது. ஆனால் பயில்களங்களாகவும் சில பிரதிகளை ஆசிரியர்கள் அச்சில் சேர்க்கின்றனர். அவை சிற்றிதழ்களின் பண்புகளுக்கு நேர்மாறானவை. இருப்பினும் அதுவே காலத்தின் தேவையாகவுள்ளது. ஏனெனில் புதிய தலைமுறைப்படைப்பாளிகளை அறிமுகம் செய்யும் போது, எதிர்;காலத்தில் சிறந்த படைப்பாளர்களை உருவாக்க முடியும். இவ்வாறான சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஆட்பட நேர்கின்றது. எழுத்தின் காத்திரத்தை முழுமையாக வரையறை செய்வது விமர்சகர்களின் பங்கு. அதனை செய்ய வேண்டும் எனில் எல்லாவகையான எழுத்துக்களுக்கும் களம் அமைக்க சிற்றிதழ்கள் கடமைப்படுகின்றன. அதனால் சில சிற்றிதழ்கள் காத்திரத்தை இழக்க நேரிடுகின்றது. சில நல்ல படைப்பாளிகள் பல சிற்றிதழ்களை தவிர்ந்துகொள்கின்றனர். இதுவும் சில சிற்றிதழ்களின் ஆக்கப்பங்களிப்பை கேள்விக்குட்படுத்துவன.




இணைய இதழ்களின் வருகை, முகநூல் பக்கங்களின் வியாபகம் என்பன சிற்றிதழ்களின் ஆக்க இலக்கியப் பங்களிப்பை மேலும் தகர்த்து வருகின்றன. கிரமமான பின்னூட்டங்கள் சிற்றிதழ்களின் அரிது என்பதனால் இந்த தகர்வுக்கான நகர்வாக காணலாம்.

தமது மக்களுடைய அரசியல், கலாசாரத் தேவைகள் சார்ந்தே சிற்றிதழ்களின் உள்ளடக்கம் தீர்மானமாகிறது. அவர்களின் வெளிப்பாடாகவே சிற்றிதழ்களும் உள்ளன. அதாவது சிற்றிதழ் இயக்கம் ஒரு கருவி. அது எதற்குப் பயன்படுகிறதோ அதனை ஒட்டித்தான் அதன் வடிவம் அமையும். ஓலை, தாயகம், தாயக ஒலி, பெருவெளி போன்ற சில சஞ்சிகைகவீளும் தேசிய இலக்கியத்தில் பல்வேறு தடங்களைப் பதிந்துள்ளதை காண முடியும். வேறு

சில சஞ்சிகைகள் பிரதேச மையங்களை முன்னிறுத்தி வந்துள்ளன. அவற்றை முழுமையான ஆய்வுக்குட்படுத்த முடியாதுள்ளது. ஆனால் வட்டார வழக்காறுகளை அவ்விதழ்களில் உள்ள படைப்புகள் பதிவுசெய்தள்ளதை அவதானிக்க முடியும்.

மல்லிகை ஜீவா கூறும் போது மல்லிகை சஞ்சிகையல்ல. அது இலக்கிய இயக்கம் என்பார். வெறுமனே காலத்தை நகர்த்துகின்ற இதழாக அல்லாமல் அதனை இலக்கியச் செயன்முறையாக காண விளைகின்றார். அதன் பரிமாணங்களாக ஞானத்தையும், ஜீவநதியையும் குறிப்பிட வேண்டும்.

சிற்றிதழ்களின் உள்ளடக்கங்களாக, சிறந்த இலக்கியப் படைப்புகளை வெளியிடுதல், சிறந்த இலக்கிய ஆளுமைகளின் அறிமுகம். மொழிபெயர்ப்புப்படைப்புகள், நேர்காணல்கள், கலை இலக்கிய நிகழ்வுகள் குறித்த பதிவுகள், புதிய நூல்கள்பற்றிய அறிமுகங்கள் என அமையும்.

ஆனாலும்; சிற்றிதழ்கள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட இந்த அளவுகோல்களின்படி உள்ளனவா? இது மிகப்பெரிய கேள்விக்குறியாகவே உள்ளது. மேலும் இன்று எமக்குக் கிடைக்கும் தொழில்நுட்ப வசதிகள் மேற்குறிப்பிட்ட அளவுகோல்கள் சிலவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்ற கருத்தை ஞானம் ஆசிரியர் தனது கட்டுரை ஒன்றில் பதிவு செய்கின்றார்.

ஈழத்தில் வெளிவருகின்ற மல்லிகை, ஞானம், ஜீவநதி, மகுடம் போன்ற இதழ்கள் தமது இலக்கிய பரிவர்த்தணையை மேலும் வலுவூட்டி பல்வேறுபட்ட சிறப்பிதழ்களை கொண்டு வந்தள்ளன. அவற்றின் ஒருங்கணைப்புகளை நோக்கும் போது ஏனை முயற்சிகளுக்கு அப்பால் சென்றுள்ளதை மகிழ்வுடன் குறிப்பிட்டாகவேண்டும்.

சில இதழ்கள் ஈழத்து இலக்கியத்தின் வளர்ச்சிப்போக்கில் சில கால கட்டத்தின் இலக்கியப் போக்கினை கூர்மைப்படுத்தி வளம் படுத்தியுள்ளன.

அவற்றை பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

ஈழத்தின் முதலாவது இதழான மறுமலர்ச்சி ஈழத்து நவீன இலக்கியத்தின கருக்கட்டடல், கலைச்செல்வி இதழ் ஈழத்து நவீன இலக்கியத்தின் தனித்துவத்தை முதன்முதலில் கூர்மைப்படுத்தி நுண்மைப்படுத்தியது. மல்லிகை இதழ் மார்க்சியக் கோட்பாட்டை ஈழத்து நவீன இலக்கியத்தில் அறிமுகப்படுத்தி கருத்தியல் ரீதியல் கூர்மைப்படுத்தி நுண்மைப்படுத்தியது. போர்க்காலத்தில் தோன்றிய ஞானம் இதழ் ஈழத்து நவீன இலக்கியத்தில் தமிழ்த் தேசிய உணர்வை கூர்மைப்படுத்தி நுண்மைப்படுத்தியது. கொழுந்து மலைய இலக்கியத்தை முன்னிறுத்தி வருகின்றது. பூங்காவனம் பெண்களுக்கான இதழாக முன்னிலை பெறுகின்றது. மேலதிகமாக படிகள், ஜீவநதி போன்றன இளந்ததலைமுறையினருக்கான வாசிப்பு பிரதிகளை சேர்த்துச் செயற்படுகின்றன.

தொகுத்து நோக்கும்போது ஈழத்துச் சிற்றிதழ்கள் எல்லாமே தத்தம் நிலையில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிப்போக்கிற்கு சிறப்பான பணி ஆற்றிவந்துள்ளமையைக் காண முடிகிறது.

கொழும்பு தமிழ்ச் சங்க தலைவரும் தாயக ஒலியின் ஆசிரியருமான த. சிவசுப்பிரமணியம் குறிப்பிடுவது போன்று ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு சிற்றிதழ்களின் பங்ளிப்பை குறைத்து மதிப்பிடவே முடியாது. அவைதான் ஈழத்து எழுத்தாளர்களின் ஒளிவிளக்காக இருந்து வருகின்றன.

வளவ. துரையன்,
ஆசிரியர், சங்கு சிற்றிதழ்

# புலி வாலைப் பிடித்தது போல

இன்றும் என்றும் இலக்கியங்களை வளர்த்தெடுப்பது சிற்றிதழ்களே. இப்பொழுது வரும் இணைய இதழ்களும் சிற்றிதழ் வகையைச் சேர்ந்தவையே.

சிற்றிதழ் என்பது சிறிய இதழ் எனப் பொருள் கொள்ளும்படி இருக்கிறது. சிறிய என்பது பக்க அளவில் இருக்கலாம். ஆனால் அவற்றில் வரும் படைப்புகள் எல்லாமே நவீனதளத்தில் உலவுபவை. மிகக் கனமானவை. எழுத்து, கசடதபற போன்ற சிற்றிதழ்கள் பல படைப்பாளிகள் தோன்றக் காரணமாகி உள்ளன.

சிற்றிதழ் நடத்துவது என்பது நான் அடிக்கடிச் சொல்வது போலப் புலி வாலைப் பிடித்தது போலத்தான்.அதை விடவே முடியாது. நம்மை அது விடாது. ஆனால் எழுந்துவிழும் எண்ண அலைகள் போலில்லாமல் தொடர்ந்த செயல்பாடுகள் இருக்க வேண்டும். பொருள் இழப்புகள் சிற்றிதழ் நடத்துவோர்க்கு ஏற்படும். இவற்றைத் தாங்கும் மனம் கொண்டவர்தாம் சிற்றிதழ் நடத்த முடியும். ஓரளவிற்குக் குடும்பத்தார் ஒத்துழைப்பும் அவசியமாகும்.




நான் எட்டாம் வகுப்புப் படிக்கும்போதே கையெழுத்துப் பத்திரிக்கை மீது காதல் கொண்டு தொடங்கி நடத்தியவன். அப்பொழுது அந்த இதழுக்குக் கதைக்கொத்து என்று பெயர். எனக்கும் கதைப்பித்தன் என்று பெயர். உயர்நிலைப்பள்ளி சென்ற பின்னும் தொடர்ச்சியாக நடத்தவில்லை என்றாலும் அவ்வப்போது நடத்தி வந்தேன்.

1965-இல் பள்ளியிறுதி முடித்தபின்னர் அர.இராசாராமன் மூலம் திருக்குறட்கழகத் தொடர்பு ஏற்பட்டது. திருக்குறட்கழகத்தில் எல்லாருமே படைப்பாளிகள். பெரும்பாலும் கவிஞர்கள். எழுதும் படைப்பைப் பிறரிடம் காட்டவேண்டும் அல்லவா?

அதற்காகவே சங்கு இதழ் தொடங்கப்பட்டது. அந்தச் சூழலில் ந.க. காந்தி, சா.வே.இராமச்சந்திரன் போன்ற நண்பர்களும் கையெழுத்திதழ் தொடங்கினார்கள். படைப்புகளை வாங்கி அதைப் பிரதி எடுத்து எழுதுவது சற்று சிரமமாக இருந்ததால் தெளிவான அழகான கையெழுத்தில் எழுதச் சொல்லி அதை அப்படியே தைத்துத் தொகுத்தும் வந்தோம்.

சங்கு இதழுக்கு அட்டை மட்டும் அச்சடித்தது அடுத்த முன்னேற்றம். மொத்தமாக ஐம்பது அட்டைகள் மட்டும் அடித்து வைத்துக் கொண்டு அதை மேலே வைத்துத் தைத்து வெளியிட்டோம். அதன் இறுதியில் படித்தவர்கள் தத்தம் கருத்துகளை எழுத இடம் விட்டிருந்தோம். வளவனூர் நூலகத்திலும் அதை அனைவரும் படிக்க வாய்ப்பளித்தோம். நூலகத்தில் சில நாள்கள் இருந்தபின் அது பக்கத்துக் கிராமங்களுக்கும் நண்பர்கள் மூலம் சென்றது.

நான் பணியாற்றும் பள்ளியில் உடன் பணியாற்றிய சிவலிங்கம் இலக்கிய ஆர்வமுள்ளவர். நன்றாக ஓவியம் வரைவார். சில இதழ்களை அவரே அவர் கைப்பட ஓவியங்களுடன் தயாரித்தார். சங்கு 80–ஆம் இதழையும், அர.இராசாராமன் நினைவு மலர் ஒன்றையும் அவர் தயாரித்தது குறிப்பிடத்தகது.

ஒரே நேரத்தில் பல பேர்க்கு இதழைப் படிக்கக் கொடுக்கவேண்டும் எனும் எண்ணம் ஏற்பட்டது. எனவே உருட்டச்சு [சைகோள்ஸ்டைல்] இதழாக ஐம்பது படிகள் வரை எடுத்து வெளியிட்டோம் அடுத்து ஒளிஅச்சு [ஜெராக்ஸ்] இதழாக வெளியிட்டோம்.

இச்சூழலில் நான் கடலூர் குடிபுகுந்தேன். அங்குப் பல இலக்கிய நண்பர்கள் தொடர்பு ஏற்பட்டது. அவர்களில் குறிப்பிடத்தக்கவர் தொலைப்பேசித் துறையில் பணியாற்றிய எஸ்ஸார்சி எனும் எஸ். ராமச்சந்திரன். இவர் சிறந்த படைப்பாளரும் கூட. அவர் துறையின் தொழிற்சங்க இதழ் அச்சடிக்கும் சிதம்பரம் கஜேந்திரா அச்சகத்தில் அச்சடிக்கலாம் என்று ஆற்றுப்படுத்தினார்.


நான் அகலக் கால் வைக்க விரும்பாதவன். எனவே 12 பக்கங்கள் 300 பிரதிகள் என்று அச்சடித்தோம். கடலூரில் இலக்கிய நிகழ்ச்சிகளில் இலவசமாகவே கொண்டுபோய்க் கொடுத்தேன்.

கையெழுத்திதழ், பின் ஒளிஅச்சு இதழ், பின் உருட்டச்சு இதழ் என்று தன் பயணத்தை தொண்ணூற்று ஒன்பது இதழ்கள் நடந்து நூறாவது இதலிருந்து அச்சிதழாக வருகிறது. அச்சகங்களும் சிதம்பரம், கடலூர், தஞ்சை என மாறி இப்பொழுது நிலையாகக் கடலூரிலிருந்து வருகிறது. இப்பொழுது 40 பக்கங்கள் 300 பிரதிகள் என ஓவியப்பாவலர் ரமேஷ் தன் அச்சகத்தில் அடித்து உதவி செய்கிறார். இந்த ஜூலை இதழோடு 178 இதழ்கள் வெளிவந்துள்ளன. அதில் எழுதிய படைப்பாளிகள் என்று பாவண்ணன், நாஞ்சில்நாடன், தேவதேவன், அன்பாதவன், தேவதேவன், ஹரணி, பழமலய், எஸ்ஸார்சி, முருகேச பாண்டியன், எஸ். சங்கரநாராயணன் போன்றோரைச் சொல்லலாம். கேட்டவுடன் கவிதை அனுப்பிய நீல. பத்மநாபன், கலாப்ரியா ஆகியோரையும் சொல்ல வேண்டும். இவர்களின் படைப்புகள் எல்லாமே முக்கியமானவை.

மேலும் பொன்னீலன், சி. மகேந்திரன், பேராசிரியர் சற்குணம், முனைவர் தமிழரசி, முனைவர் ஹரணி, முருகேசபாண்டியன் போன்றோரின் நேர்காணல்கள் அதில் வெளிவந்துள்ளன.

ஆகச் சிற்றிதழ்கள் என்பவை இலக்கியத்தை மட்டுமே வளர்ப்பவை. சிலவற்றில் குழுமனப்பான்மை முன்பு இருந்திருக்கலாம். இப்பொழுது இணைய இதழ்கள் நிறைய வந்துவிட்டன. விளம்பரங்கள் வாங்கிப் பெரிய அளவில் இலக்கிய இதழ்கள் வருகின்றன. இவை மீச்சிற்றிதழ்கள் எனும் பெயரையும் பெறுகின்றன.

எல்லாக் காலத்திலும் சிற்றிதழ்களின் பங்கை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.




# சிற்றிதழ்கள் வரிசையில் வெளிச்சம் சஞ்சிகை

தமிழீழ விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினால் மிகவும் தரம்வாய்ந்ததொரு மாதாந்தச் சிற்றிதழாக வெளிச்சம் வெளியிடப்பட்டது.

எழுத்துத் துறையில் புகழ்பெற்றவர்களோடு.. புதிய எழுத்தாளர்களையும் ஒருங்கே அரவணைத்து ஊக்குவித்து வளர்த்தபெருமைக்குரிய அந்த வெளிச்சம் இதழை நன்றியுணர்வோடு எண்ணிப்பார்க்கிறேன்.




தேடல்களையும் ஆய்வுகளையும் பிறமொழி ஆக்கங்களின் மொழிபெயர்ப்புகளையும் போர்கொண்டெழுந்து நிலம் வென்ற நாடுகளின் வரலாறுகளையும் பிரசுரித்து வாசகர்களின் அறிவுத்தேடலை அது விசாலிக்க வைத்தது.

இராஜதந்திர அணுகுமுறையில் கைதேர்ந்த வல்லரசுகளின் பிடிக்குள் அகப்பட்டுள்ள சிங்கள அரசின் ஆட்சிநிர்வாகம் சீர்குலைந்த நிலைமையில் வருவதை அன்று தனது தலையங்களில் வெளிச்சம் தெளிவுறக்கூறியது. (இன்று தாயக அரசின் அந்தத்தவறான பொறிமுறையானது பெருத்துவளர்ந்து சர்வதேசச் சிக்கல்ளைத் தோற்றுவித்துள்ளது.)




ஈழத்தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையானது உக்கிரமடைவதைக் கண்டித்து அரசியல் ஆய்வில் வல்லவர்கள் எழுதிய கட்டுரைகளைப் பிரசுரித்தது.

தொல்தமிழர் தேசத்தின் கலைபண்பாட்டு விழுமியங்களை எடுத்துக்கூறும் அத்துறைசார்ந்த வல்லவர்களின் பேட்டிகளையும்.. எழுத்தாக்கங்களையும் வெளியிட்டது.

தொல்லியல் ஆய்வுகளில் கிடைத்த மண்தாழிகளையும் அதில் எழுதப்பட்டிருந்த தமிழ் எழுத்துக்களையும் உள்ளடக்கிய புகைப்படங்களைப் பிரசுரித்து அவைசம்பந்தமான தகவல்களையும் அதன் காலப்பகுதியையும் எடுத்துக்கூறும் அத்துறை சார்ந்த பேரறிவாளர்களின் விபரணக் குறிப்புகளை வெளிச்சம் தந்தது.

ஈழத்தமிழரின் சுதந்திர எழுச்சியையும் அதன் அத்தியாவசியத்தையும் வலியுறுத்தும் எழுத்து வடிவங்களோடு பிரசாரத்தொனியற்ற கவிதைகளையும் கதைகளையும் கட்டுரைகளையும்.. நிதர்சன வாழ்வோட்டத்தோடு சங்கமித்த பாடல்களின் எழுத்துப் பதிவுகளையும் அதுதாங்கி வெளிவந்தது.

தமிழீழதேசத்தின் விடியலுக்கு இடர்செய்யும் போக்குடைய அரசுகளின் பல்முக ஊட்டத்தால் சடைத்துவந்த சிங்களப் பேரினவாத அரசையெதிர்த்து களங்கள்கண்டுமோதி உயிரீந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களையும்.. போராளிகளின் ஆக்கங்களையும் பிரசுரித்தது.

அதில் வெளிவந்த உயிர்த்துவமான பொருள்தொனிக்கும் கைவண்ண ஓவியங்களையும் அதன் கருத்தியல் விளக்கங்களையும் வாசகர்கள் பெரிதும் வியந்து இரசித்தனர்.

தாயகக்கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் எழுச்சிமிகு வரிகளையும்.. சாதாரணமக்களின் வாழ்க்கைமுறைச் சிந்திப்பினையும்.. அவர்களின் மனக்கிளர்வினையும் துயர வெளிப்பாடுகளையும்.. இயல்வு வாழ்வியலையும் எடுத்துக்கூறிய கவிதை வார்ப்புக்களையும்..

பிறகவிஞர்களின் உணர்ச்சிமிகு உள்ளக்கிழற்சியால் முறுக்கேறிய வார்த்தைப் படிமங்களாக எழுதப்பட்ட கவிதைகளையும் கட்டுரைகளையும்

போராளிகளின் போர்க்கள அனுபவங்களையும்.. அவர்கள் கூர்ப்புமிகு வார்த்தைகளால் கூறப்பட்ட படைப்புகளையும் பிரசுரித்த வெளிச்சத்தின் வரவை மக்கள் எதிர்பார்த்த காலத்தை எண்ணுகின்றேன்.

இந்தச் சிற்றிதழில் உயரரும் அரசியல் ஆலோசகரும் தத்துவமேதையும் வரலாற்று வல்லுனருமான உயர்திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள்.. பிரமஞானி என்ற புனைபெயரில் தொடர்ச்சியாக எழுதிவந்த பெருளியல்.. மெய்யியல்.. வரலாற்றியல்.. மானிடவியல் முதலான வாழ்வியற் துறைகளின் ஆய்வுயர்விளக்கக் கட்டுரைகளை வெளியிட்ட வெளிச்சத்தின் வரவுக்காக வாசகர்கள் காத்திருந்த அந்தக்காலத்தை மறக்கமுடியாது.

நடைமுறைச் சாத்தியமான ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் எமது பெண்களும் எழுச்சிகொண்டு தேசவிழிப்புணர்வோடு செயலாற்ற முன்வரவேண்டும் என்ற பொருள்தொனிக்க திருமதி. அடேல் பாலசிங்கம் எழுதிவந்த விளக்கக் கட்டுரைகளையும் வெளிச்சம் இதழ்கள் தாங்கி வெளிவந்தன.

தமிழர்களுக்கு எதிரான அரசின் ஒடுக்குமுறையானது தாங்கொண்ணா அளவுக்கு உக்கிரமடைந்த காலத்தில்..

வடபிராந்தியம் முழுவதிலும் மின்வலு இருக்கவில்லை. அதன் காரணமாக மின்னியக்க ஊடகங்களோ உபாதைகள் சுமந்த நிலைமை. ஊடகக் கருவிகளுக்கான உபகரணங்கள் வாங்கமுடியாதநிலை. இத்தகுமுதலான வாழ்க்கையின் அன்றாடத்தேவைகள் யாவும் தட்டுப்பாடுற்ற காலமது.


மானுடநேயத்தை மறுத்து.. பல்துறை அழிப்புகளிலும் பேரினவாதம் முனைப்புக்காட்டிய மூற்கமிகு கட்டத்தில்.. முழுமையான பொருளாதாரத் தடைகளையும் புறம்தள்ளி.. அழகிய அச்சுப்பதிப்போடு வெள்ளிவந்த அந்த வெளிச்சம் சிற்றிதழை யார்தான் மறப்பார்.

யாழ் ராகவன்

# காற்றை செதுக்கிய வண்ணச் சிறகுகள்

தொண்ணூறுகளின் இறுதியில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பொழுது வணிக இதழ்களே அதிகம் என் மூளையில் ஆக்கிரமித்திருந்தன. அதிலும் குறிப்பாக சினிமா சார்ந்தவர்கள், நட்சத்திர எழுத்தாளர்களுடைய வசீகர எழுத்துக்கள், கவிதைகள் மட்டுமே என்னை மேலும்படிக்க தூண்டின. பொழுதுபோக்கு அம்சங்களேஅதிகமாக பாதித்து இருந்தது. அதில் இடம்பெறும் சிறுகதைகள், சினிமாசார்ந்த செய்திகள்,பேட்டிகள் அவற்றுக்கு அருகாமையில் போடப்படும், புகைப்படங்கள் நடிகைகளின் படங்கள்குளிர்ச்சியூட்டி கவர்ச்சி காட்டும்இந்த தன்மையே என்னை அந்த காலத்தில் போதை போல தொடர்ந்து வாசிக்க வைத்தது.அப்பொழுது எங்களுக்கு சீனியர் அண்ணன்மார்களை காணும் போதெல்லாம் அவர்கள் கைகளில் புதிய புதிய இதழ்வைத்திருப்பார் அவற்றை எப்போதாவது பார்க்கும் போது வரும் எழுத்துக்களை அதிகமாக இருக்கும் படங்கள் குறைவாகத்தான் இருக்கும்.

சிலர் மறைவாக வைத்து படிப்பார்கள் சிலர்பார்ப்பதற்குக் கூட மாட்டார்கள் ஒரு நாள்அவர்கள் தங்கியிருக்கும் அறைக்கு செல்ல வாய்ப்பு கிடைத்தது.அங்கேகொஞ்ச நேரம் காத்திருந்து அவர் கிளம்பிய உடன் நானும் அவரும் வெளியே செல்வதாய்ஏற்பாடானது அந்த காத்திருந்த கொஞ்ச நேரத்தில் அந்த அறையில் சிற்றிதழ்கள் கிடந்தன. அவற்றை எடுத்தபொழுது அவை என்னை புரட்டின.காலச்சுவடு.உயிர்மை.உயிர் எழுத்து.கவிதாசரண்.வல்லினம்.புதிய கலாச்சாரம். புதிய பார்வை.புதிய காற்று.தீராநதி.திசை எட்டும்.போன்ற இதழ்களின் பெயர்கள் எல்லாம் பரிச்சயம் ஆயின.




சில இதழ்களை கல்லூரி பேராசிரியர்களிடம் சொல்லி நூலகத்தில் இடம் பெறச் செய்தோம். சில இதழ்களுக்கு சந்தா கட்டிவரவழைத்தோம்.சில பேருந்து நிலையத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் போதுஒவ்வொரு மாதமும் ஓடி ஓடி அதன்புதுமண சுவையுடன் கையோடு வாங்கி வந்ததும் உண்டு. இப்படியாக சிற்றிதழ்கள் உலகத்திற்குள் மெல்ல நுழைந்தேன்.

சிற்றிதழ்களை வாசிப்பதுஎன்பது,புத்தகம் படிப்பதை விட மிகவும் சுவாரசியமாக அமைந்தது.அது ஒரு அழகிய காலம்.செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி,

கதைசொல்லி.கசடதபற.எத்தனையோ சிற்றிதழ்களைநண்பர்கள் எங்களுக்குள் வாங்கி பரிமாறிக் கொள்வோம்.பேருந்து பயணங்களையும் இரவுநேரத்தையும்அழகானதாகமாற்றியது சிற்றிதழ்களே என்று சொன்னால் மிகையில்லை.எழுத்தாளர் கி ராஜநாராயணன் சொல்வது போல உலகத்தில் எல்லாம் தான் இருக்கிறது நமக்கு எது தேவையோ அதை மட்டும் தேர்ந்தெடுக்க பழகிக்கொள்ளவேண்டும் என்பது மெல்ல மெல்ல புரிய தொடங்கியது.

தமிழகம் தாண்டி, இந்தியா இல்லைதாண்டி,உலக நாடுகளில் நடைபெறும் செய்திகளை எல்லாம் அறிந்து கொள்ளும் பொன்னான வாய்ப்பு சிற்றிதழ்கள் படிக்கும்போது கிடைத்தது.

ஈழத்தின் போர் உச்சநிலை அப்போது ஏற்பட்ட இலக்கியங்கள்புலம்பெயர்ந்தவர்களின் உடைய புலம்பல்கள் வேதனைகள் அவர்கள்எந்த நாட்டுக்குப் போனாலும் அங்கே சிற்றிதழ்கள் தொடங்கி பல்வேறு சிரமங்களுக்கிடையே நடத்தி வருகின்ற பங்கு அத்தனையும் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு இதழ்கள் மூலமே கிடைத்தது.

மொழியின் நவீனத்துவத்தை அறிந்துகொள்வதற்குபல்வேறு புதிய சிந்தனைகளை தெரிந்து கொள்வதற்குபுதிய ஆராய்ச்சி நெறிமுறைகளை உணர்ந்து கொள்வதற்குசிற்றிதழ்கள் செய்யும் பணிமகத்தானது.பல்வேறுஇசங்கள்பல்வேறுவரலாறுகள்கோட்பாடுகளையும்சிற்றிதழ்களின் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்பெரிதினும் பெரிது கேள் என்று பாரதி சொல்வதை புதிதினும் புதிது கேள் என்றும் கூட வகைப்படுத்திக் கொள்ளலாம்.

புனைவுகளின் உச்சத்தையும்கருத்தியல்களின் வலிமையையும்மொழியின் கூர்மையையும் ஆய்வின் பல பரிமாணங்களையும்கொண்டுவந்து அள்ளித் தந்தவைசிற்றிதழ்களே என்று சொன்னால் மிகையில்லை


இலக்கியங்களின் தரத்தை உயர்த்தும் உந்து சக்தியாக சிற்றிதழ்கள்ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேலாக தமிழ் இலக்கியப் பரப்பில்பயணம் செய்து கொண்டிருக்கிறது.

சமூக,பண்பாட்டு, கலாச்சார,அறிவியல் சார்ந்தஜாதிய போராட்டவடிவங்கள் அரசியல்என்று எல்லாவிதமானகருத்தியல் தளத்திலும் சிற்றிதழ்கள் தனித்துவத்தோடு இயங்குகின்றன. ஒரு கட்டற்ற சுதந்திர வீச்சுஉண்மையை உரக்கப் பேசும் ஆளுமை.விரிந்த ஆய்வுக்கான களம்நிர்ப்பந்தமும் இல்லாத செயல்பாடுஆகியவை சிற்றிதழ்களை தொடர்ந்து இயங்க வைக்கக்கூடியசிறப்புத் தன்மையை பெற்று தந்திருக்கின்றன.

கணையாழியின் கடைசிப் பக்கம்தீராநதியில் இறுதி பக்கக் கவிதைஎண்ணற்ற புதிய புதிய படைப்பாளிகள் உருவாவதற்கு காரணமாக அமைகின்றன.என் சிற்றறிவுக்கு எட்டியசில இதழ்களை மட்டும் தான் கட்டுரைகளை சொல்லுகிறேன் ஆனால் எண்ணிக்கையில்அடக்க முடியாத எத்தனையோ உள்ளன.ஒரு இதழ் நடத்துவது என்பது சாதாரண விடயமல்ல.

எத்தனையோ ஆர்வலர்கள் வணிக நோக்கம் சிறிதும் இல்லாமல் இலக்கியத்தின் மீது கொண்ட தாகத்தினால் பல பொருளாதார சுமையை சுமந்து கொண்டு கடனில் முதல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்கைவிடப்பட்ட எத்தனை இதழ்கள் உண்டு வழமையான வருமானத்தோடுபதிப்பகமாக மாறி இயங்கும் இதழ்கள்மிகக் குறைவு

எழுத்தாளர்களை அறிஞர்களை விமர்சகர்களை கவிஞர்களைஉருவாக்கிய பல்வேறு சிற்றதழ்கள் உண்டு.வியக்கத்தக்க கட்டமைப்பிலும் உலகளாவிய தன்மையிலும்வரும் சிற்றிதழ்கள்உண்மையிலேயே படைப்பின் செழுமை நிறைந்தது.




அந்தந்த வட்டாரங்களுக்கு மட்டும் செயல்படும் இதழ்கள் உண்டு.மாநிலம் தழுவிய நாடுதழுவிய இதழ்கள் உலகளாவிய பார்வை கொண்ட இதழ்கள் உண்டு

இணையதளத்தில் வருகைக்குப் பின்னர் அவை பன்மடங்காகப் பெருகின உலகத்தில்அதிகமான இணைய இதழ்களைக் கொண்ட மொழி தமிழ் மொழி ஆகத்தான் இருக்கிறது காரணம் ஈழத்தமிழர்கள்.

இணைய இதழ்கள் பெருகிய பின்பு அச்சில் படிப்பது குறைந்துவிட்டது. மொழிபெயர்ப்புக்கு என்று தனி இதழ்.வந்து கொண்டே இருக்கிறது.பழமையான இலக்கியங்கள் உள்ள புதியகருத்துக்களைஎடுத்துச் சொல்லும் பாங்கு புதிய வடிவங்களை புதிய உத்திகளை அறிமுகப்படுத்தும் நோக்கம்தேடித்தேடி உலகின் பல்வேறு மூலையிலுள்ள மனிதர்களுடைய சிறந்த ஆக்கங்களை எல்லாம் வெளிக்கொண்டு வரும் எண்ணம்இவையெல்லாம்தான் சிற்றிதழ்களை உயிர்ப்போடு இயங்க வைக்கிறது மேலும்ஆற்றலோடு செயல்பட வைக்கிறது

ஒரு படைப்பு பொதுவெளியில் பேசப்பட்டும் விவாதிக்கப்பட்டும் அதிலுள்ள சாதக பாதகங்களை அலசி ஆராயும் வாய்ப்புத் தருவதாக சிற்றிதழ்கள்இருக்கின்றன.நேர்மை ஒன்றே குறிக்கோளாக காய்தல் உவத்தல் இன்றிஎல்லோரையும் சமமாகப்மதிக்கிற பண்பு உண்மையான இலக்கியத்தை போற்றுகிற பண்புஇதழ்களின்வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம்.ஈழத்து எழுத்தாளர்கள் பலரைஅறிமுகம் செய்து ஊக்குவித்தது சிற்றிதழ்கள்.

எனக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களையும்அகரமுதல்வன், தீபம் செல்வன்பெண் எழுத்தாளர்கள்அனார்

செல்வி சிவரமணிதமிழ்நதிஇன்னும் இன்னும் எத்தனையோ கவிஞர்களை சிறுகதை ஆசிரியர்கள் ஆய்வு எழுத்தாளர்களை எல்லாம்சிற்றிதழ்களே தமிழகத்தில் அறிமுகப்படுத்தியது.தட்டையான கெட்டி தட்டிப் போன பழமைமிகுந்த கருத்துக்களை தாண்டிநவீனத்துவ தோடு எழுதுவதற்குநம்மை பழக்கப்படுத்துங்கள் வேலையை சிற்றிதழ்கள் செய்கின்றன.சுவை ஊட்டுவது ஒரு வகை அறிவு ஒரு வகை ஆழ்ந்து சிந்திக்க வைப்பது மற்றொரு வகைஇப்படி எல்லா வகையிலும் சிற்றிதழ்கள் பயணித்தன.

விளிம்பு நிலையில் உள்ள ஒடுக்கப்பட்டோர்பற்றியபொதுப்புத்தியில் இருந்த பல்வேறு சிந்தனைகள் உடைவதற்கு சிற்றிதழ்கள் காரணமாக இருந்தன.குறிப்பாக அரவாணிகள் பாலியல் தொழிலாளர்கள்மாற்றுத்திறனாளிகளைப் பற்றிய புதிய சித்திரம் உருவாவதற்கு சிற்றிதழ்களே காரணமாய் இருக்கின்றன.புலம்பெயர்ந்தோரின் மிகப் பெரிய ஆறுதலாக சிற்றிதழ்கள் பணியாற்றுகின்றன பலரைஇணைக்கும் மையப்புள்ளியாக வேதனையை தீர்க்கும் வடிகாலாகசிற்றிதழ்கள் இயங்குகின்றன.




# கொல்லிப்பாவை என்னுமொரு சிற்றிதழ்

தமிழில் சிற்றிதழ்களின் பங்கு தன்னிகரற்றது. சிற்றிதழ்கள் மட்டுமே சமூகத்தை முன்னெடுத்துச் செல்வதுடன் இலக்கியத்தை வளர்ப்பதிலும் சிறப்பான பணியாற்றி வருகின்றன. சிற்றிதழ்கள் என்பது குழு சார்ந்து, கொள்கை சார்ந்து, இயக்கம் சார்ந்து, இலக்கியம் சார்ந்து தொடங்கப்படுகின்றன. குறுகிய காலத்தியே நின்று விடுகின்றன. ஒரு சில மட்டுமே தொடர்கின்றன. தொடர்ந்து வருகின்றன. நின்று போன சிற்றிதழ்களே சிற்றிதழ் வரலாற்றிலும் நிற்கின்றன. நின்று போனவைகளில் மனதில் மறையாமல் நிற்கும் ஓர் இதழ் ' கொல்லிப்பாவை'. கொல்லிப்பாவை இதழ்களைத் தொகுத்து ' கொல்லிப் பாவை இதழ் தொகுப்பு' என்னும் பெயரில் ஒரு தொகுப்பாக்கித் தந்துள்ளனர் அதன் ஆசிரியர்களான அ.

ராஜமார்த்தாண்டன் மற்றும் ஆர்.கே. ராஜகோபாலன். இருவருமே ஒத்த சிந்தனையுடையவர்கள். குமரியைச் சேர்ந்தவர்கள். வெளியீடு மருதா.

“ 1976 தொடக்கத்தில் அ. திருமாலிந்திரசிங்குடன் நானும் மற்றும் பிஎச்.டி. ஆய்வு மாணவர்களும் திருவனந்தபுரத்திலிருந்து நடத்திவந்த' கோகயம்' மாதம் இருமுறை வெளியீடு கருத்து வேறுபாடுகள் காரணமாக 4 இதழ்களுடன் நிறுத்தப்பட்டது.

அவ்வேளையில் உமாபதி நாகர்கோவிலில் 'தெறிகள்' காலாண்டிதழின் 2-வது இதழுக்கான வேலைகள் மும்முரமாக நடந்து வந்தன. அப்போது நெருக்கடி நிலை அமலில் இருந்த காலம். முதல் இதழ் தொடர்பாக அவருக்கு போலீஸார் மூலமும், அவர் வேலை பார்த்த நிறுவனத்தின் மூலமும் பல தொந்தரவுகள் நேர்ந்தன. எனவே தெறிகள் பெயரை மாற்றி 'கலி' என்ற பெயரில் ஓவியர் சக்தி கணபதியை ஆசிரியராகக் கொண்டு 2-வது இதழ் தாயாராகிக் கொண்டிருந்தது. 40 பக்கங்கள் அச்சாகி சுந்தர ராமசாமியின் சிறுகதை, நகுலனின் நீண்ட

கவிதை, கிருஷ்ணன் நம்பி கட்டுரை, சு.ரா.வின் கடிதத்துடன்

அட்டையும் தயாரான நிலையில் அப்படியே முடங்கியிருந்தது.

உமாபதி என்னிடம் 'கலி'க்காக அச்சடிக்கப்பட்டவற்றைக் கோகயத்துடன் இணைத்து

வெளியிடச் சொன்னார். ஆனால் 'கோகயம்' மீண்டும் வெளிவரும் உத்தேசமில்லை. இந்நிலையில் 'கலி' யை நான் திருவனந்தபுரத்திலிருந்து கொண்டு வருவது என்ற முடிவுடன் அச்சடித்த பக்கங்களை எடுத்துச் சென்றேன். புதிதாக சில விஷயங்களைச் சேர்க்கும் எண்ணத்துடன் தர்மூ சிவராமூவிற்கு எழுதினேன். அவர் 'கலைஞனும் கோட்பாடும்' என்ற கட்டுரையுடன் பத்திரிகையின் பெயரைக் 'கொல்லிப்பாவை' என்று வைக்கும் படியும் அதற்கான டிசைனும் செய்து அனுப்பி வைத்தார். அவர் கட்டுரையுடன் உமாபதி, ராஜமார்த்தாண்டன் கவிதைகளுடன் அக்டோபர் 76-ல் கொல்லிப்பாவை முதல் இதழகாக வெளிவந்தது" என கொல்லிப்பாவைத் தொடங்கப் பட்டதற்கான சூழ்நிலையையும் காரணத்தையும் ஆசிரியர்களில் ஒருவரான அ. ராஜமார்த்தாண்டன் கொல்லிப் பாவை இதழ் 18இல் தெரிவித்துள்ளார். 1976களின் மத்தியில் புற்றீசல்கள் போல சிற்றிதழ்கள் வெளியாகி ஒரு தேக்கம் ஏற்பட்ட காலத்தில்தான் கொல்லிப்பாவை தொடங்கப் பட்டது என்றும் அதற்கு ' எழுத்து' இதழும் ஒரு காரணம் என்றும் கொல்லிப்பாவையை ' எழுத்து' இதழ் மரபின் தொடர்ச்சி என்றும் தெரிவித்துள்ளார்.

1976இல் அக்டோபரில் முதல் இதழ் வந்தது. அவ்வவ்போது இடைவெளி விட்டு 1988 ஜீன் வரை 20 இதழ்கள் வந்துள்ளன. தொடர்ந்து கொண்டு வர வேண்டும் என்னும் தீர்மானம் இருந்தாலும் தீராத வேட்கை இருந்தாலும் 40 இதழ்கள் வரவேண்டிய இடத்தில் 20 இதழ்களே வந்துள்ளன. அ. ராஜமார்த்தாண்டனும் ஆர். கே. ராஜகோபாலனும் இணைந்து நடத்தவில்லை. முதல் பனிரெண்டு இதழ்களை தொடங்கிய அ. ராஜமார்த்தாண்டனும் பின் எட்டு இதழ்களை ஆர். கே. ராஜகோபாலனும் கொண்டு வந்துள்ளார்கள். இருவருமே தொடர வேண்டும் என்று முயற்சித்தும் தொடர முடியாமல் போனது சிற்றிதழுக்கே உரிய ஒரு நிலை. சாபம். சோகம்.

கொல்லிப்பாவையின் இலக்கியப் பங்களிப்பில் முக்கியமானது மற்ற படைப்புகளை விட கவிதையே ஆகும். பிரமிள், பசுவய்யா, தேவதேவன், தேவதச்சன், எஸ். வைதீஸ்வரன், கலாப்ரியா, பாதசாரி, விக்ரமாதித்யன், சுகுமாரன், வண்ணநிலவன், நகுலன் உள்பட இன்று பிரபலமாக உள்ள, வெகுவாக அறியப்பட்ட பலரின் கவிதைகள் கொல்லிப்பாவையில் வெளியாகியுள்ளன. இக்கவிஞர்களின் முன்னேற்றத்தில் கொல்லிப்பாவையின் பங்களிப்பு கணிசமானது. இன்று எழுத்தாளர் ஜெயமோகன் உரை நடையின் உச்சத்தில் உள்ளார். அவரின் முதல் கவிதை கொல்லிப்பாவையில் வெளியாகியுள்ளது. இத்தொகுப்பில் காணப்படும் எழுத்தாளர் ஜெயமோகனின் கவிதை ஒன்று. தலைப்பு 'கைதி'.

என் அறை சிறியது
நிறைய ஜன்னல்கள்.
என் புத்தகங்கள் கலைந்து கிடக்கின்றன
மேஜைக்கு கீழ் காகித குப்பை
கறை படிந்த காபி கோப்பை
அறுந்து துடிக்கும் கவிதை வரிகள்
கோடையில் சூடான தென்றல்
உள்ளே வருகிறது
இரவில் நிலவும்
தூரத்து சங்கீதமும்
கனவும்.
எனக்கு அலுத்து விட்டது.

என் ஜன்னல் பார்வைகளுக் கெல்லாம்
ஒரே கோணம்
வெளியே போக விரும்புகிறேன்
உடை மாற்றி செருப்பணிந்து
தேடினால்
வாசல் இல்லை.
நாற்புறமும் சுவர்கள்
ஜன்னல்கள்
வெளிக்காற்று உள்ளே வருகிறது
இதற்குள் என் உடல் சூடு
புழுங்குகிறது
இந்த ஜன்னல் வழியாக
நான் வீறிட்டு அலறினால்
எத்தனை பேருக்கு கேட்கும்?
ஒரு துண்டு வெள்ளைத்தாளில்
என் துயரை ஏற்றி
தெருவுக்கு விட்டெறிகிறேன்
இதயத்துடிப்புடன் காத்திருக்கிறேன்
அவற்றின்மேல் மனித காலடிகள்
இரக்கமின்றி நடந்து போகக்கூடும்.

இடம் பெற்ற இதழ் கொல்லிப்பாவை 18. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகளில் கவிஞர் கலாப்ரியா எழுதியதும் ஒன்று. ‘ கைம்மை’ அதன் தலைப்பு.

விடுமுறையை
இரவோடு
மறுத்து விடுகிறேன்.
ஆயத்த விடியலில்
அது வெற்றாய் முடிந்த
சோர்வைச் சாடுகிறேன்.
மீசை நறுக்கும் போது
அடுப்படி மனைவியின்
‘அந்தத் தொட்டிலைக் கொஞ்சம்
இழுத்து விடுங்களே’னில்
எரிந்து விழுகிறேன்.
ஆபிஸ்க்கு சுமந்து போகிற
ஸ்டாப்பில் நிற்காத
பஸ்களுக்காய்
பல் கடித்து
கோபம் முழுங்கி

நாட்டைச் சலிப்புடன்
சபிக்கிறேன்.
மலையை
பூமியாய் உணர
மறுக்கிறேன்.

இடம் பெற்ற இதழ்: கொல்லிப்பாவை 10. இவ்விரண்டு கவிதைகளும் எடுத்துக்காட்டுகளே.

மொழிபெயர்ப்பு கவிதைகளுக்கும் வாய்ப்பளித்து வெளியிட்டது ‘ கொல்லிப்பாவை’. பசுவய்யா, கி. அ. சச்சிதானந்தம், சுகுமாரன், பிரம்மராஜன் ஆகியோர்கள் மொழிபெயர்ப்புக் கவிதைகளை எழுதியுள்ளனர். ‘ வசந்த காலத்தின் சங்கீதம்‘ தலைப்பில் கவிஞர் பிரம்மராஜன் ஆங்கிலத்தில் இருந்து கிரிஸ்டோபர் மிடில்டன் என்பவரின் மொழிபெயர்த்த கவிதை..

1. இப்போது நான் கோடைக்காகக் காத்திருக்கிறேன் இளைஞர்களே

2. நாம் ரம் வாங்கிவிட்டோம். கிட்டாருக்கு புதிய தந்திகள் போட்டுவிட்டோம். வெள்ளைச் சட்டைகள் இனிமேல்தான் வாங்கப்பட வேண்டும்.

3. ஜூன் மாதத்தில் புற்கள் போல நமது கால்கள் வளர்கின்றன. ஆகஸ்டின் மத்தியில் கன்னிப் பெண்கள் காணாமல் போகின்றனர். இது எல்லைகளற்ற பெரும் சந்தோஷக் காலம்.

4. ஒவ்வொரு நாள் செல்லச் செல்ல வானம் மென்மையான ஒளிர்தலை நிரப்புகிறது. மேலும் அதன் இரவுகள் உம் உறக்கத்தைக் களவாடி விடுகின்றன.

இடம் பெற்ற இதழ் எண். 19.

கொல்லிப்பாவையில் கவிதைகள் வெளியான அளவிற்கு சிறுகதைகள் வெளியாகவில்லை. மொத்தம் வெளியான இருபது இதழ்களில் தமிழ்ச்சிறுகதைகள் ஆறும் மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் நான்கும் ஆக பத்து சிறுகதைகள் மட்டுமே வெளியாகியுள்ளன. சிறுகதைகளை எழுதியவர்கள் சாமான்யர்கள் அல்ல. சுந்தர ராமசாமி, வண்ணநிலவன், சுரேஷ் குமார் இந்திரஜித், உமாபதி ஆகியோர் ஆவர். நால்வரும் இன்று நாடறிந்த நல்ல எழுத்தாளர்கள்.

கொல்லிப்பாவை இதழ் இருபது இதழ்கள் வந்த போதிலும் ஒரே ஒரு நாடகத்தை மட்டும் வெளியிட்டுள்ளது. பெயர் உடல். எழுதியவர் சுந்தரராமசாமி. இதழ் எண். 5. சுந்தரராமசாமி ஒரு நாடக ஆசிரியர் என்பதற்கு உடல் ஒரு சான்றாக விளங்குகிறது.

சிற்றிதழ்களின் சிறப்புகளில் ஒன்று கட்டுரைகள் வெளியிடுதல். கொல்லிப் பாவையும் ஏராளமான கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. பிரக்ஞை, யாத்திரா, வைகை போன்ற சம கால சிற்றிதழ்களில் வந்த கட்டுரைகளுக்கு எதிர்வினையாற்றி விவாதங்களை வைத்துள்ளன. வெங்கட் சாமிநாதனின் ‘ இரண்டு தலைமுறைகளுக்கிடையில்’ கட்டுரை பெரும் விவாதத்தை எழுப்பியுள்ளது. கொல்லிப்பாவையிலேயே இக்கட்டுரைக்கு சுந்தரராமசாமி, பிரமிள், சி. மோகன், ராஜாராம் போன்றவர்கள் எதிர்வினையாற்றியுள்ளனர். கட்டுரைகளாலே கவனிப்பைப் பெற்றது கொல்லிப்பாவை.

வெளிவரும் ஒவ்வொரு தொகுப்புக்கும் விமர்சனம் முக்கியம். விமர்சனங்களே தொகுப்பை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்கின்றன. கொல்லிப்பாவையில் விமர்சனங்கள் நூல்களை

வாசிப்பாளருக்கு அறியச் செய்துள்ளன. பூமா ஈஸ்வரமூர்த்தியின் ' காதலைக் காதலென்றும் சொல்லலாம்' கவிதைத் தொகுப்பு அச்சுதன் அடுக்கா விமர்சித்துள்ளார். எம். ஏ. நுஃமான் எழுதிய ' பாரதியின் மொழிச் சிந்தனைகள் ஒரு மொழியல் நோக்கு' என்னும் ஒரு கட்டுரைத் தொகுப்பை விஷ்ணு ஸித்தன் விமர்சித்துள்ளார்.

உலக இலக்கியங்களை எல்லாம் தமிழுக்குக் கொண்டு வரும் முயற்சியில் தொடர்ந்து இலக்கியவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதழ்களும் பங்களிப்பைச் செய்து வருகின்றன. எழுத்தாளர் சுந்தர ராமசாமி உலகின் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்கள் சிலரைக் கொல்லிப்பாவையில் அறிமுகம் செய்துள்ளார். ஸ்வீடிஸ் தேசத்து இலக்கிய கர்த்தா பேர் லாகர் குவிஸ்டு. பாரபஸ் என்று இவர் எழுதிய நாவல் க. நா. சு. வால் மொழிபெயர்க்கப்பட்டது. ஜெர்மன் மொழியில் எழுதியவர் ஹெர்மன் ஹெஸே. இவருடைய நாவல் ஒன்றே தமிழில் சித்தார்த்தா. நார்வே நாட்டவர் நட்ஹாம்சன். நிலவளம் என்னும் நாவலுக்காக நோபல் பரிசு பெற்றவர். கிரேசியா டெலடா என்பவர் இத்தாலி நாட்டு பெண் நாவலாசிரியர். இவரின் தாயைத் தமிழில் தி. ஜானகிராமன் மொழிபெயர்த்துள்ளார். ஸெல்மா லாகர் லெவ் என்பவர் ஸ்வீடிஷ் நாட்டைச் சேர்ந்தவர். இவரின் நாவல் மதகுரு க. நா. சு. வால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கொல்லிப்பாவை இதழ் 1988உடன் நின்று விட்டது. கொல்லிப்பாவை என்னும் இத்தொகுப்பு 2004இல் வெளியாகியுள்ளது. கொல்லிப்பாவையில் வெளியாகி 2004 வரை தொகுப்புகள் எதிலும் இடம் பெறாத புதுமைப்பித்தனின் 'போலீசாரும் பாரதியும்' கட்டுரை,

கு.ப.ரா.வின் இரண்டு கவிதைகள், புதுமைப்பித்தன் பற்றிய எஸ். வையாபுரிப் பிள்ளையின் கட்டுரை, புதுமைப்பித்தனின் ஆற்றங்கரைப் பிள்ளையார் சிறுகதை ஆகியவை இத்தொகுப்பில் 'மறுபிரசுரம்' பகுதியில் இடம்பெறுள்ளன.

எம். வேதசகாய குமார் பத்திரிகைகளிலிருந்து பிரதியெடுத்த 'சர்மாவின் தவறு', 'நம்பிக்கை', 'சாளரம்', 'கண்ணன் குழல்' (சாந்தி 1934)ஆகிய புதுமைப்பித்தனின் படைப்புகளும் கொல்லிப்பாவை'யில் மறுபிரசுரம் பெற்றன. இவை' கொல்லிப் பாவை' யில் மறுபிரசுரம் செய்யப் பெற்ற பின்னரே ஐந்திணைப் பதிப்பகம் வெளியிட்ட புதுமைப் பித்தன் சிறுகதைத் தொகுப்புகளில் இடம் பெற்றுள்ளன.

இலக்கிய உலகில் நின்று போன இதழ்கள் தொகுத்து வெளியிடப்படுவது தொடர்கிறது. சுபமங்களா, காவரி, தீபம், கசடதபற, அஃ, வானம்பாடி, சக்தி என பல தொகுப்புகள் வந்துள்ளன. அவ்வகையில் கொல்லிப்பாவையும் வந்துள்ளது. நவீன இலக்கிய வட்டத்தில் கொல்லிப்பாவைக்கு என்று ஒரு தனியிடம் உண்டு. கொல்லிப் பாவை இதழில் பங்கேற்ற படைப்பாளர்களுக்கு நினைவுக்கூரும் விதமாகவும் ஏற்கனவே வாசகராக இருந்தவர்களுக்கு மறுவாசிப்பிற்கும் புதியதாக வாசிக்க விரும்புவர்களுக்கும் கொல்லிப்பாவை என்னும் இத்தொகுப்பு ஒரு நல்ல வாய்ப்பு. கொல்லிப்பாவை இருபது இதழ்களே வந்துள்ளன. தொகுப்பாக்கப்படும் போது சில படைப்புகள் விடுபட்டுள்ளன. இடப்பற்றாக் குறை காரணமாக விடுபட்டதாக அ. ராஜமார்த்தாண்டனும் ஆர். கே. ராஜகோபாலனும் தெரிவித்துள்ளனர். விடுபட்ட படைப்புகளையும் தொகுப்பில் இணைத்து வெளியிட்டிருந்தால் முழுமையான ஒரு தொகுப்பை வாசித்த உணர்வு ஏற்படும். 1970கள் மற்றும் 1988கள் ஆகிய காலங்களின் நவீன இலக்கிய உலகத்தை அறிந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பாக இருந்திருக்கும். எனினும் நின்று போன சிற்றிதழ்கள் தொகுப்பாக்க ஒரு முன்னோடியாக உள்ளது கொல்லிப்பாவை..




# சிற்றிதழ்கள்!

சிற்றிதழ்கள், சீரிதழ்கள் என்றே சொல்ல வேண்டும். சீரான கருத்துக்களை கவிதைகளை வலியுறுத்தும் இதழ்கள். தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் இலங்கையிலும் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் கனடாவிலும் நோர்வேயிலும் தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் சிற்றிதழ்கள் வந்தன, வருகின்றன, இன்னும் வரும். வெகுசில இதழ்களே, பல்லாண்டுகளாக தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. பல இதழ்கள் இடையிலேயே நின்றும் விடுகின்றன.

சிற்றிதழ் நடத்துவது என்பதே பெரிய போராட்டம் தான். மாத இதழ் என்றால் மாதம் பிறந்தவுடன் இதழ் கிடைத்தாக வேண்டும். அதற்காக ஆசிரியர் படைப்புகளைப் பெற்று, தொகுத்து, வகுத்து, பிழை திருத்தி, இதழைக் கொண்டு வருவது என்பது நெருப்பாற்றில் நீச்சலடிப்பதைப் போன்று தான். தனது வருமானத்தில் ஒரு பகுதியை

இதழுக்காக செலவிட வேண்டும், சந்தா என்று பெருமளவில் வரவும் வராது. படைப்பாளிகள் பலர் சந்தா செலுத்தி வாங்கிட விரும்புவதும் இல்லை. சன்மானம் வேண்டாம், சந்தாவும் தர இயலாது என்ற நிலையிலேயே பல படைப்பாளிகள் உள்ளனர். சில படைப்பாளிகள் மட்டுமே சந்தா செலுத்தி இதழ் பெறுவர்.

மதுரையிலிருந்து பல சிற்றிதழ்கள் வந்தன. “ஓ” பல்சுவை மாத இதழ், தேசிய வலிமைதேசிய வலிமை இதன் ஆசிரியர் இளைய நேதாஜி வே.சுவாமிநாதன். தமிழ்ப்பாவை ஆசிரியர் கருணை தாசன்.காலமாகி விட்டார்.இதழும் நின்று விட்டது, மனிதநேயம், நமது மண்வாசம் இப்படி வந்தன. ஆனால் தற்போது மனித நேயம்,நமது மண்வாசம் மட்டுமே தொடர்ந்து வந்துகொண்டு இருக்கின்றன.

மனிதநேயம் இதழாசிரியர் ஏ.எம். ஜேம்ஸ் அவர்கள மதுரை யாதவர் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். அவர் தனக்கு வரும் ஓய்வூதியத்திலிருந்து ஒரு பகுதியை ஒதுக்கி மனிதநேயம் மாத இதழை தொடர்ந்து நடத்தி வருகிறார்.நமது மண்வாசம் ஆசிரியர் திருமலை.இவர் குமுதம் உள்ளிட்ட வணிக இதழ்களில் பணியாற்றிய மூத்த பத்திரிகையாளர். கொரோனா தோற்று காலத்திலும் நமது மண்வாசம் மாத இதழ் அச்சிலும்,மின் அஞ்சலிலும் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கிறது.

சென்னையிலிருந்து கவிதை உறவு மாத இதழ் இதன் ஆசிரியர் கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதா கிருஷ்ணன். புதுகைத் தென்றல் மாத இதழ் இதன் ஆசிரியர் புதுகை மு.தருமராசன். புதுவையிலிருந்து வரும் இதழ் புதிய உறவு.இதன் ஆசிரியர் மஞ்சக்கல் உபேந்திரன். இப்படி பல இதழ்கள் இன்றும் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கின்றன. பெரும்பாலான ஆசிரியர்கள் தங்களது வருமானத்திலிருந்து ஒரு பகுதியை மாதாமாதம் இழந்து தான் சிற்றிதழ்களை நடத்தி வருகின்றனர்.பெரும்பாலான சிற்றிதழ் ஆசிரியரும், வெளியிடுபவரும் ஒரே நபராகவே இருக்கின்றனர்.

இலங்கை சிற்றிதழ்கள் குறித்து கனடாவில் வாழும் தமிழ்ஆதர்ஸ்டாட்காம் இணைய ஆசிரியர் அகில் கருத்தரங்கம் நடத்தினார். நானும் கலந்து கொண்டேன். இலங்கையில் ஆயிரக்கணக்கில் சிற்றிதழ்கள் ஆரம்பத்தில் வந்ததாக பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், குறிப்பிட்டனர். இப்போது பல இதழ்கள் நின்று விட்டன.

கொரோனா தொற்று காரணமாக முழு ஊரடங்கு காரணமாக அச்சகம் இயங்காத காரணத்தால் பல இதழ்கள் அச்சடிக்க முயலாததால் தொடர்ந்து இதழ் வருவது நின்று போனது.

இப்போது மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வருகின்றனர். எனக்கு பல இதழ்கள் மின்னஞ் சல் மூலமாக வரும். அவற்றை பலருக்கும் அனுப்பி வருகிறேன். தம்பி புவனேந்திரன் ஜெர்மனியிலிருந்து வெற்றிமணி மாத இதழை அனுப்பி வருகிறார்.

இலண்டனிலிருந்து புதினம் இதழை அதன் ஆசிரியர் இராசகோபால் அனுப்பி வருகிறார். சில மாதங்களாக வரவில்லை. நோர்வேயிலிருந்து N.S. பிரபு என்பவர் நண்பர் அவர் சர்வதேசத் தமிழர் என்ற மாத இதழை அச்சிட்டு அனுப்பி வைப்பார். சில காரணங்களால் அந்த இதழும் நின்று விட்டது. ஞானம், முல்லை என பல இதழ்கள் மின்னஞ்சலில் இன்றும் வருகின்றனர

சிற்றிதழ்கள் தொற்று காலத்திலும் நவீன ஊடகமான இணையத்தில் சிங்க நடையிட்டு சிகரத்தில் ஏறி வருகின்றன. அறநெறி கருத்துக்களை வலியுறுத்துவது மனிதநேயம் கற்பிப்பது

இவை தான் சிற்றிதழ் நோக்கமாகும்.

சிற்றிதழ்களின் சிறப்பு என்னவென்றால் ஆபாசம் இருக்காது. குறிப்பாக சினிமா நடிகை செய்திகள் இருக்காது, வணிக விளம்பரங்களும் இருக்காது. வளரும் கவிஞர்கள், எழுத்தாளர்கள் பலருக்கு வாய்ப்புகள் வழங்கி, குடத்து விளக்காக இருந்த அவர்கள் திறமையை, குன்றத்து விளக்காக ஒளிர்ந்திட செய்து வருகின்றனர். திருச்சியிலிருந்து இனிய நந்தவனம் தொடர்ந்து வருகின்றது.இதன் ஆசிரியர் நந்தவனம் சந்திர சேகரன் கவிஓவியா என்ற இதழ் சென்னையிலிருந்து வந்தது. சில மாதங்களாக வரவில்லை.இதன் ஆசிரியர் மயிலாடுதுறை இளையபாரதி. புதுக்கோட்டையிலிருந்து ஏழைதாசன் பல ஆண்டுகளாக தொடர்ந்து வருகின்றது. இதன் ஆசிரியர் எஸ்.விஜயகுமார்.தொற்று காலத்திலும் இந்த மாதமும் இதழ் வந்தது.




வத்தலக்குண்டிலிருந்து வதிலை பிரபா, மகாகவி என்ற மாத இதழை நடத்தி வந்தார். தற்போது தொற்று காரணமாக இணைய இதழ் தொடங்கி விட்டார்.

சிற்றிதழ்கள் அச்சு வடிவில் வருவது குறைந்துவிட்ட போதிலும் இணைய வடிவில் வந்துகொண்டே இருக்கின்றன. கவிச்சூரியன், கவியரசு போன்ற இதழ்களும் இணையத்தில் வருகின்றன. இவற்றின் ஆசிரியர் கண்ணன் சேகர்.

நான் வளர்வதற்கு காரணமாக அமைந்தவை சிற்றிதழ்கள். எனது படைப்புகள் பெரும்பாலானவை சிற்றிதழ்கள் மட்டுமே பிரசுரமாகின.பிரபல வணிக இதழ்களுக்கு நான் படைப்புக்களை அனுப்புவதே இல்லை.அவர்கள் குறிப்பிட்ட நபர்களின் படைப்புகளையே பிரசுரம் செய்வார்கள்.அவர்கள் என்ன எழுதினாலும் பிரசுரம் செய்வார்கள்.

எழுத்தாளர் சுஜாதா ஒரு முறை சொல்லி இருந்தார்."என் விட்டு சலவை குறிப்பை அனுப்பினாலும் பிரசுரம் செய்து விடுவார்கள்." அந்த அளவிலேயே வணிக இதழ்கள் பிரபல இதழ்கள் இருந்தன.குறிப்பாக நடிகைகளின் அங்கத்தின் படம் போட்டு எந்த நடிகையின் அங்கம் என்று கேள்வி கேட்டு பரிசு வழங்குவார்கள்.இதுபோன்ற செயல்கள் சிற்றிதழ்கள் செய்வதில்லை.ஒரு சில வணிக இதழ்கள் மட்டுமே தரமாக வருகின்றன.பெரும்பாலான பிரபல இதழ்கள் நடிகைகளின் ஆபாசம் தாங்கியே வருகின்றன.

சிற்றிதழ்கள் நோக்கத்தோடு வரும்.இலக்கியம் வளர்க்க வேண்டும்.விழிப்புணர்வு விதைக்க வேண்டும்.சமநீதி வேண்டும்.அநீதி அழிய வேண்டும்.பெண்ணுரிமை வேண்டும்.உழைப்பாளி மதிக்க வேண்டும். திருநங்கைகளை மதிக்க வேண்டும்.மாற்றுத் திறனாளிகளை மதிக்க வேண்டும். பகுத்தறிவு வளர வேண்டும்.மூட நம்பிக்கை ஒழிய வேண்டும்.இப்படி பல்வேறு நோக்கத்தோடு வருபவை சிற்றிதழ்கள்..

வாசகர்கள் சிற்றிதழ்களின் உயிர் நாடியான சந்தா செலுத்தி, சிற்றிதழ்கள் பெற்று, வாங்கி, வாசித்து, மடல் எழுதி ஊக்கப்படுத்திட முன்வர வேண்டும்.




# தளம் சிற்றிதழ் – பார்வை, சொல், செயல்களின் ஒத்திசைந்த இலக்கிய விழைவு

சிற்றிதழ்கள் என்ற விஷயம் இல்லாவிட்டால், நாம் இன்று காணும் தீவிர நல்லிலக்கியம் இல்லை. ஜனரஞ்சக இதழ்கள், வாசிப்புப் பழக்கத்தை ஒருகாலத்தில் பரவலாக்கியது. ஆனால் வாசகர்கள், தரமான விஷயங்களும், சிந்தனையம்சங்களும் பெறமுடியாமல், தொடர்கள், சிறுகதைகள் கேளிக்கையம்சம் கொண்ட பெருவணிக இதழ்களின் போதையில் இருந்தனர். ஆனால் தொலைக்காட்சி மற்றும் இணையம் இல்லாத அந்த காலகட்டத்தில் குறைந்தபட்சம் வாசிப்பு என்ற ஒன்றை அவை உருவாக்கியிருந்தன.

பத்திரிகைகளும், வாங்கும் வசதி/விருப்பம் இருந்த குறிப்பிட்டதட்டு மக்களை மட்டுமே அடைந்திருந்தது. குறிப்பாக படித்த குடும்ப பெண்கள் வாராந்திரிகள் மூலமாகவே வெளியுலகை தரிசித்தனர். புதிய குரலுடன் பிரபலமான சிறுகதைகள் பல

இந்த பெருஇதழ்களில்தான் வெளிவந்தன என்பதையும் நாம் மறக்க முடியாது.




எழுத்து, மணிக்கொடி போன்ற காத்திரமான இலக்கிய இதழ்களும் பிறகு அப்போதைய கணையாழி, வானம்பாடி இயக்கம் வரை, நடை, ழ, கவனகம், கசடதபற, பிரக்ஞை, முன்றில், நிறப்பிரிகை, என தீவிர இலக்கிய அம்சம் கொண்ட சிற்றிதழ்கள் வந்தன. பலவும் நின்றுபோயின.

அதெல்லாம் பழங்கதை. வாசிப்பவர்கள் பன்மடங்கு பெருகியிருக்கும் இன்றைய சூழல் மிகவும் சிக்கலான, பல விதமாக பிரிந்து கிடக்கும் ஒன்று. இணையம் வந்தபின், அச்சடித்தல் எளிமையான பின், இதழ்கள் பல்கிப் பெருகின. சொந்த காசில், கடன் வாங்கி, நண்பர்களிடம் பணம் சேர்த்து, கையேந்தி - பலவிதமாக கஷ்டப்பட்டு ஒரு சிற்றிதழை கொண்டுவரும் நோக்கம், இலக்கிய விழைவு மட்டுமே. சி.சு. செல்லப்பாவும், எம்.வி. வெங்கட்ராமனும் ரத்தமும் சதையுமான உதாரணங்கள்.

இந்த நிலையில், சிற்றிதழ்களில் குழுமனப்பான்மை மற்றும் பிடிவாத தன்மையும், பெரு வணிக இதழ்களின் கேளிக்கை மற்றும் நீர்த்துப்போன இலக்கியமும் நிலவின. இவ்விரண்டைத் தவிர்த்தும், எளிமையை நோக்கியபடியும் மிடில் மேகஜின்ஸ் என்ற வகைமை ஒன்று உருவானது. அதன் ஒரே ஆரோக்யமான இதழ், புதிய கதவு ஒன்றை திறந்துவிட்ட, கோமல் சுவாமிநாதனின் சுபமங்களா என்று சொல்லலாம். அதில் வெளியான நேர்காணல்கள் இன்றளவும் பேசப்படுபவை.

பிறகுவந்த பல 'மிடில் மேகஜின்கள்' குறுநில மன்னர்களின் தோரணையோடு இருக்க, வணிக இதழ்கள் விற்பனையை நோக்கி நகர்ந்து மேலும் நீர்த்துவிட, சிற்றிதழ்கள் குழு மனப்பான்மையின் சங்கேத வெளிப்பாடுகளாக மலிந்துவிட, பெருவணிக இதழ்களும் சிற்றிதழின் இடத்திற்கு ஆசைப்பட்ட சூழலில், சிற்றிதழ் என்பதன் உண்மையான ஆன்மாவை மீட்கும் நியாயமான கவலை பலருக்கும் தோன்றியது. இணைய வெளியில் பலர் அப்படி செயல்பட ஆரம்பித்தனர். இந்த இடத்தில்தான் 'தளம்' கலை இலக்கிய காலாண்டு சிற்றிதழ் சென்னையிலிருந்து பாரவியின் முன்னெடுப்பில் பிறந்தது. சில பத்தாண்டுகளாக இலக்கிய பரப்பை தொடர்ந்து கவனித்து வருபவரும், பிரக்ஞை இதழாக்கத்தில் பங்காற்றியவரும், ஆராவாரங்களில் தொலைந்துபோய் விடாமல் தொடர்ந்து தன்னளவில் செயல்பட்டவருமான பாரவியின் முயற்சியில் தளம் - முரண்படுதலுக்கான காரணங்களைக் காட்டிலும், ஒன்றுபடுதலுக்கான, ஒன்றுபட்டு செயல்படுவதற்கான காரணங்கள் வலுவானவை. தீவிர வாசகத் தேடலுடைய அனைத்து நண்பர்களையும் தளம் வரவேற்கிறது என்ற அறிவிப்புடன் ஜனவரி 2013-ல் துவங்கியது.

நெடிய வரலாறு கொண்ட சிற்றிதழ் சூழலின் பல்வேறு அம்சங்களையும், தளைகளையும், மாற்றங்களையும், நிகழின் சிடுக்குகளையும் அறிந்தவர் ஆதலால், தளம் என்னவாக இருக்க வேண்டும் என்ற தெளிவுடன் இயங்குகிறார்.

இதன் முக்கிய இரண்டு அம்சங்கள் வேறெந்த சிற்றிதழும் தைரியமாக வெளிப்படையாக சொல்லாதவை. முதலாவதாக, வேறுபாடுகள் இருப்பினும், நாம் ஒன்றுபட்டு செயல்பட காரணங்கள் வலுவானவை என்ற நம்பிக்கை. அடுத்ததாக, இது தனிப்பட்ட ஒருவரின் நிறுவனத் தன்மை கொண்ட இதழ் அல்ல. இதன் நோக்கச் சிறப்பை அறிந்த, நம்பும் வேறு யாரும் இதை மேலேடுத்து நடத்திச் செல்லலாம். இதை வாசிக்கும் நீங்கள் கூட!

எவ்வித விளம்பர வருமானத்தையும் தவிர்த்து, இலக்கியத்தை நேசிப்பவர்களின் நன்கொடைகளை மட்டுமே நம்பி ஆரம்பிக்கப்பட்ட தனிச்சுற்றுக்கான தளம் முதல் இதழை சி சு செல்லப்பாவின் சிறப்பிதழாக, ஜேகேவின் முகப்பு ஓவியத்துடன் கொண்டுவந்தது மிகவும் பொருத்தம்.

“இரண்டாயிரம் பிரதிகளுக்கு மேல் அச்சாகாது, சந்தாரர்களுக்கு மட்டும்தான் கிடைக்கும; இலக்கிய வாசகர்களை தேடித் பிடிப்பதுவே இதன் நோக்கம்; பிடித்திருக்கிறது என்பதற்காக பொது வாசகர்களை திருப்திப் படுத்தும் வழிகளை கையாளும் உத்தேசம் இல்லை என்று தனது முதல் எழுத்து இதழில் சொன்ன செல்லப்பாவை, தளம் தனது முதல் இதழில் சிறப்பித்தது யதேச்சையானது அல்ல.

2013 புத்தக கண்காட்சியில் முதல் இதழுக்கு கிடைத்த வரவேற்பு குறிப்பிடத்தக்கது. மிகவும் விரும்பி வாசிக்கப்பட்ட அந்த பிரதி இன்று அச்சில் கிடைப்பது அரிது என்றே சொல்லலாம். ஒவ்வொரு தளம் இதழும் ஒரே மூச்சில் வாசித்து முடித்துவிட முடியாத செறிவு கொண்ட, கருப்பு வெள்ளை, பைண்டிங் இதழ். சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், ஓவியங்கள், நேர்காணல்கள், புத்தக அறிமுகங்கள், எதிர்வினைகள் என்று பலவற்றைக் கொண்ட தளம் இதழுக்கு, ‘கிரா’வின் சிற்றிதழ்களுக்கான கரிசல் விருது, இலக்கியவீதி அன்னம் விருது இரண்டும் பெருமை சேர்த்தன.

இதன் மற்றொரு முக்கிய அம்சம், இது, எழுதுபவர்கள் மற்றும் வாசிப்பவர்களுக்கு ஒரு தளமாகவும், இவர்களுக்கு இடையேயான ஒரு ஊடகப் பாலமாக மட்டும் இருந்து விடாமல், வாசகர்கள், நண்பர்கள், ஆர்வலர்கள் முன்னெடுப்பில் பல இடங்களில் அசம்பிரதாயமாக கூடிப்பேசி, விவாதித்து, புதிய ஆற்றலைப் பாய்ச்ச முனைந்தது. மேலும் தனது கருத்தை ஆழமாகவும், விரிவாகவும், நேர்மையாகவும் முன்வைக்க விரும்பும் எவருக்கும் இங்கே இடமுண்டு. இந்த இரண்டு அம்சங்களின் மூலம் தளம் ஒரு இலக்கிய சஞ்சிகை என்ற பரிமாணத்தை தாண்டி மேலெழும் ஒன்று. ஆனால் அதற்கு வேறெந்த குழு நோக்கமும் கிடையாது. ஒரு தேன்கூட்டைப் போல் பலரின் முயற்சி மற்றும் ஆக்கங்களால் உருவாகிய ஒன்று. இந்த இதழ்கள் இலக்கியம் குறித்த பல விஷயங்களுக்கு ஒரு ஆவணமாக கொள்ளத்தக்க செறிவு கொண்டவை. அச்சு மற்றும் தபால் செலவுகளைக்கூட மீட்கப் போதுமானதாக இல்லாத நிதிச் சுமையுடந்தான் நடக்கிறது என்பது, சொல்லி தெரிய வேண்டியதில்லை.

சிறுபத்திரிகைகள், தனித்துவமான கலை இலக்கிய செயல்பாடுகள் உயிரோட்டமாக இருப்பதற்கான முனைப்பில் எழுந்தவை. தனித்துவம் என்பது குழு என்பதாக சுருங்கிவிடும் அபாயங்களை தவிர்த்து இயங்க வேண்டியதன் அவசியத்தை தளம் உணர்ந்திருக்கிறது.

தளம் இதழ்களில் வெளியானவை குறித்த உத்தேசமான பொருளடக்கங்களாக சொல் வேண்டுமெனில் - சிறப்பிதழகளாக - சி சு செல்லப்பா சிறப்பிதழ், மொழி சிறப்பிதழ், உளவியல் சிறப்பிதழ், சினிமா சிறப்பிதழ், சார்வாகன் சிறப்பிதழ்; கல்வி சிறப்பிதழ் (இன்றைய கல்வி





குறித்த குழப்பங்களுக்கு வெகு முன்பே கல்வி பற்றி தளம் பேசியது) போன்ற தலைப்புச் செறிவு கொண்ட சிறப்பிதழ்களாக வந்தன. லாசராவின் இதுவரை வெளியாகாத படைப்பு "நீ" அவரது கையெழுத்து வடிவிலேயே வெளியானது.

உரையாடல்களாக - சிற்பி தட்சிணாமூர்த்தி, இயக்குனர் கோவிந்த் நிஹாலனி, சிற்பி ராஜன், கவிஞர் விஷ்ணுநாகர், மகாஸ்வேதாதேவி, ருத்ரன், போன்றவர்கள் பற்றியும் -

நினைவு கூறல்களாக - மா அரங்கநாதன், இராவதம் மகாதேவன், மூவலூர் ராமாமிருதம் அம்மையார், எஸ்.பொ, வெங்கட் சாமிநாதன், மார்க்வெஸ், திகசி,

ஞானக்கூத்தன், வே. சபாநாயகம், நா.முத்துக்குமார், சே.ராமானுஜம், மா வே சிவக்குமார், கே ஏ குணசேகரன், ஓவியர் ராஜவேலு, எம் எஸ் எஸ் பாண்டியன், ஜெயகாந்தன், விந்தன், அசோகமித்திரன், கடலூர் அஞ்சலையம்மாள், தெலுங்கின், ஜி.சிரஞ்சீவி ம இல தங்கப்பா, கவிஞர் மணிமுடி, ஞாநி போன்றவர்களைப் பற்றியும்,

விட்டால் ராவ், மா அரங்கநாதன் மற்றும் கிராவின் எண்ணக் கட்டுரைகளும் வெளியாயின.

மருது, செல்வம், விஸ்வம், ஜேகே, ரவி, அரசு, வசந்தரூபன், மாணிக்கம் ஜெயராமன், செனாமா அஹ்மதி, அருணகிரி, முருகேசன், ராசவேலு,ராஜராஜன், போன்றோர் ஓவியத்தில் பங்களித்தனர். சி சு செல்லப்பா, ஜெயகாந்தன், இன்குலாப், அஸ்கர் அலி எஞ்சினீர்,சார்வாகன் போன்ற ஆளுமைகள் அட்டைப் படங்களுடன் சிறப்பு கவனம் பெற்றிருந்தனர்..

வருபவனவற்றில், தரமான படைப்புகளை பரிசீலித்து வெளியிட்டது. தளம் வாசக ஆர்வலர்களிடையே தனிப்பட்ட பேச்சு, விவாதங்கள், சந்திப்புகளில் தளம் இதழ் பங்களிப்பு, செய்ய வேண்டியவை, தவிர்க்க வேண்டியவை போன்றவை பேசப்பட்டன. சிறு பெரு நகரங்களில், சிறு கூடுகைகள் பல நடந்தன.

மனிதனின் அடிப்படையான விழைவு சுமுகமான வாழ்க்கைதான். அதை இலக்கியம் நெறிப்படுத்த வேண்டுமே தவிர, கருத்தியலின் முரண்கள் அவற்றை பிரித்து சிதற வைக்கக் கூடாது. இலக்கியத்தின் பேரால் நிகழும் கருத்தியல் பிரிவினைகள் மற்றும் இருண்மைகள் இலக்கியத்தின் தோல்வி.

அசோகமித்திரன் ஒரு எளிய கூட்டமொன்றில் பேசும்போது " இந்த வாசிப்பு, இலக்கியம் போன்ற இதெல்லாம் எதுவுமே தெரியாம நம்மைவிட சந்தோஷமாக இருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்" என்று சொன்னபோது கூட்டத்தில் மெல்லிய சிரிப்பொலி எழுந்தது. ஆனால் அது யோசிக்க வேண்டிய ஒன்று கூட. அப்படியென்றால் இலக்கியம் என்பது மேலான நிம்மதியைத் தரவேண்டுமே தவிர சிதைக்க கூடாது. தளம் இதை நோக்கித்தான் செல்கிறது.

புத்தகக்கட்டுகளை சுமந்து ஊர் ஊராக சுற்றிய செல்லப்பாவிடம் அது பற்றி கேட்டபோது 'எனது சிலுவையை நான் தானே சுமக்க வேண்டும்' என்றார். சிற்றிதழாளர்கள் அனைவருமே அப்படி சுமப்பவர்கள்தான். இன்றைக்கும். சிலுவைகள் சுயத்தின் பொருட்டு சுமக்கப்படுபவை அல்ல என்றுணர்ந்த வாசகர்களின் ஆதரவு, சுமப்பதின் சோர்வை போக்கவல்லது. பொருளாதார மந்தமும் தற்போதைய பெருந்தொற்றின் தீவிரமும் தளம் அச்சு இதழை தற்காலிக நிறுத்தத்தில் நிறுத்தி இருக்கிறது. அது மறுபடி தனது பயணத்தை விரைவில் தொடங்க, அனைவருடனும் கைகோர்க்கக் காத்திருக்கிறது.

# சீரிதழ்களே சிற்றிதழ்கள்

*மணிக்கொடியாம் காலமென்றே இன்றும் பேச*
*மணியாக இலக்கியத்தை வளர்த்தார் அன்று*
*அணியாகத் தமிழுக்கே ஆக்கம் சேர்க்க*
*அருங்குயிலைப் பாவேந்தர் அளித்தா ரன்று*
*தணியாத தாகத்தால் புதுமை செய்யத்*
*தந்தார்கள் கசடதபற எழுத்தாம் ஏட்டை*
*பிணிபோக்கும் அமுதமெனக் கடிதம் தென்றல்*
*பின்னாளில் கண்ணதாசன் வந்த திங்கே!*

*கவிதையெனும் கவியேட்டை தெசிணி நல்க*
*காவியப்பா வையைக்கபில வாணன் நல்க*
*கவியமுது கனிச்சோலை புன்ன கையும்*
*கருத்தாழத் தேனமுது வானம் பாடி*
*புவிவியந்த தமிழ்ப்பாவை யாதும் ஊரே*
*பூக்காடு பூஞ்சோலை தும்பை என்றே*
*நவில்கின்ற படியிங்கே இலக்கி யத்தை*
*நன்றாக வளர்த்தனவே சிற்றி தழ்கள்!*

*தென்மொழியும் தமிழ்ப்பணியும் முல்லைச் சரமும்*
*தெளிதமிழும் கண்ணியமும் கவிதை உறவும்*
*இன்னமுதாய் செந்தமிழாம் செல்வி யோடு*
*இலக்கியப்பீடம் கணையாழி தமிழின் ஓசை*
*கன்னலென இலக்கியத்தை வளர்த்து நம்மின்*
*கண்ணான தமிழ்மொழியை தமிழப் பண்பை*
*நன்முறையில் சிற்றிதழ்கள் வளர்ப்ப தாலே*
*நல்லொழுக்கம் அறிவுதனில் திகழ்கின் றோம்நாம்!*








# முனைப்பு இதழ்கள் ஒரு அவதானிப்பு

நவீனத்துவத்தின் உந்துதல் மூலமாக தமிழில் புதிய பரிமாணங்களுடன் உருவாக்கம் பெற்றதே சஞ்சிகை அல்லது சிற்றிதழ் ஆகும். பேராசிரியர் கா.சிவத்தம்பியின் சொற்களை கடன்பெற்று சொல்வதென்றால், 'புதிய சவால்கள், புதிய பிரக்ஞைகள், புதிய எழுத்துக்கள்' என்ற தாரக மந்திரத்துடன் சிற்றிதழ்கள் தோன்றின. ஆங்கிலயரின் வருகையும், ஆங்கில கல்வியும், ஜனநாயக கல்வி முறைமையும், படித்தவர்களின் தொகை அதிகரித்தமையும், அச்சு இயந்திரங்களின் வருகையும், புதிய தேடல்களின் முகிழ்ப்பும் சிற்றிதழ்களை பிரசவித்தன. தமிழகத்தில் மணிக்கொடி, எழுத்து இதழ்கள் ஈழத்தில் பாரதி, மறுமலர்ச்சி இதழ்கள் இவ்வாறுதான் வெளிக்கொணரப்பட்டன.

அச்சு இயந்திரங்களின் வருகையுடன் அமெரிக்காவில் பேரிதழ்கள் எழுத்துச் சூழலை முழுமையாக ஆக்கிரமித்திருந்தன. இதற்கு எதிராக ஒரு கருத்தியலின் தேவை உணரப்பட்டு, ஒரு மாற்று ஊடகமாக சிற்றிதழ்கள் தோன்றின. வீல்லியம் ஃபிலிப்ஸ், ஃபிலிப் ரெவ் ஆகியோரை ஆசிரியர்களாக கொண்டு *1934* முதல் வெளிவரத்தொடங்கிய




"பார்ட்டிஸன் ரிவ்யூ" என்னும் இதழ்தான் முதலாவது சிற்றிதழ் என குறிக்கப்படுகின்றது. ஸ்டீபன் ஸ்பெண்டர் 1953ல் ஆரம்பித்த 'என்கவுன்டர்' உலகளாவிய கவனத்தைக் ஈர்த்த சிற்றிதழ். 1953ல் ஹெரால்ட் ஹ்யூம் மற்றும் பீட்டர் மாடிசன் ஆரம்பித்த 'பாரீஸ் ரிவியூ' அமெரிக்காவிலும் உலகமெங்கும் குறிப்பிடத்தக்க வாசகர்களைக்கொண்ட முன்னுதாரணமான சிற்றிதழாக கவனிப்புக்குள்ளானது. சிற்றிதழ்கள் தனக்கென தனித்துவங்களையும், தனியான வாசகர் கூட்டத்தையும் கொண்டிருந்தன. பேரிதழ்களுக்குரிய கவர்ச்சிகளோ, ஆக்கங்களோ, ஜனரஞ்சகத் தனமோ இல்லாமல், தீவிர வாசகர்களை சார்ந்து நிற்கும் படைப்புகளையும் கலைத்துவமான அல்லது அழகியல் ரசனையையும் கொண்டதாகவும் ஒரு குறுகிய வட்டம் சார்ந்ததாகவும் அமையப் பெற்றிருந்தது. இவ்விதழ்களை மாதிரியாகக் கொண்டு இந்திய மொழிகள் அனைத்திலும் சிற்றிதழ் இயக்கம் 1950களில் உருவானது. தமிழில் சிற்றிதழ் என்ற பிரக்ஞையுடன் வெளியடப்பட்ட முதல் இதழ் எழுத்து. இதற்கு முன்னர் மணிக்கொடி வந்திருந்தாலும் அது ஆரம்பத்தில் முழுமையாக சிறுகதைகளை மாத்திரமே உள்வாங்கியிருந்தது. ஆனால் எழுத்து இதழ்தான் தன்னை சிற்றிதழ் என பிரகடனப்படுத்திக்கொண்டது. 'எழுத்து' இதழுக்கு முன்னர் பல சிறிய இதழ்கள் தமிழில் வெளிவந்துள்ளன. பாரதியாரின் 'இந்தியா'வும் 'விஜயா'வும் சிறிய இதழ்கள். 'மணிக்கொடி'யும் 'கிராம ஊழியனு'ம் சிறிய இதழ்கள். ஆனால் அவை அன்றைய சூழலால் சிறிய அளவில் நடத்தப்பட்டவை மட்டுமே. சிற்றிதழ் என்ற பிரக்ஞைக்குரியனவாக அமைந்திருக்கவில்லை. 'எழுத்து' இதழைத்தான் தமிழின் முதல் சிற்றிதழ் என அழைப்பது வழக்காயிற்று.

ஈழத்தில் முதல் சிற்றிதழாக குறிக்கப்படுவது 'பாரதி' (1946 ஜனவரி) இதழ்தான். கே.கணேஷ், கே.இராமநாதன் இணைந்து பாரதி இதழை வெளியிட்டார்கள். பாரதி ஏழு இதழ்களுடன் நின்றுவிட்டது. 'பாரதி' என்ற பெயரில் இன்னுமொரு சிற்றிதழ் கிழக்கிலங்கை மண்டூரிலிருந்து இருந்து 1948இல் வெளிவந்துள்ளது. பண்டிதர் ம. நாகலிங்கம், அமரர் கு. தட்சணாமூர்த்தி திரு. த. சபாரத்தினம் ஆகியோர் இதன் கூட்டாசிரியர்கள். இச்சஞ்சிகை 36 இதழ்களை வெளிக்கொணர்ந்துள்ளது..

1915ஆம் ஆண்டு மங்களாம்பாள் என்பவர் யாழ்பாணத்திலிருந்து "தமிழ்மகள்" என்னும் பெண்ணிய இதழை வெளியிட்டுள்ளார் என்பதும், 1927ஆம் ஆண்டு தையலம்மா என்பவர் திருகோணமலையிலிருந்து "மாதர்மதிமாலிகை" என்னும் சஞ்சிகையை வெளியிட்டுள்ளார் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. நவீன இலக்கிய தோற்றப்பாடுகளுடன் ஈழத்தில் வெளிக்கொணரப்பட்ட முதல் சிற்றிதழ் 'மறுமலர்ச்சி' (1946 மார்ச் - 1948 ஒக்டோபர்) ஆகும். "மறுமலர்ச்சி சஞ்சிகையின் வருகையும் மறுமலர்ச்சியின் போக்கும்; எனக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கிய காலகட்டமாகபடுகிறது" என நேர்காணல் (ஞானம் சஞ் சிகை) ஒன்றில், பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது. 'மறுமலர்ச்சி' 24 இதழ்களுடன் நின்று விட்டது.

'ஈழத்தில் இதுவரை காலத்தில் நூற்றுக்கும்; மேற்பட்ட சிற்றிதழ்கள் தோன்றியுள்ளன. பாரதி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி மல்லிகை, குமரன், இளம்பிறை, சிரித்திரன், விவேகி, மரகதம்,

தேனருவி, மலர், மாலை முரசு, நதி, அலை, திர்த்தக்கரை, அஞ்சலி, கொழுந்து, நந்தலாலா, பூரணி, சுடர் புதுசு, தோழி, நிவேதினி, பெண், புதுமை இலக்கியம், வசந்தம் அஞ்சலி, நதி, களனி, அக்னி, நோக்கு, வாகை, மாருதம், கீற்று, மாற்று, ஊற்று, பாடும்மீன், ரோஜாப்பூ, கதம்பம், பூமாலை, தமிழமுதம், தமிழின்பம், மாணிக்கம் குன்றின்குரல், தாரகை, பொதுமக்கள் பூமி, சுவர், சமர், களம், சுவைத்திரள், கலகலப்பு, அக்கினிக்குஞ்சு, தாயகம், வசந்தம், எழில்,. நாவேந்தன், குங்குமம், கற்பகம், சிலம்பொலி தமிழமுது, வைகறை பொய்கை, காவலன், களனி, கலை, பொன்மடல், களன், விருத்தம், கிருதாயுகம், தேன் மொழி, கவிஞன், க-வி-தை, பொறிகள், சுவடுகள், விடிவெள்ளிகள், பூபாளம், பொன்மடல், முனைப்பு, பெருவெளி, தாகம், விளக்கு, வெளிச்சம் சுதந்திரப்பறவைகள், வியூகம், மூன்றாவது மனிதன், முனைப்பு, பூவிழி, ஆகவே, யாத்திரா, இருப்பு, மறுகா, மறுபாதி, எதுவரை, செங்கதிர், நீங்களும் எழுதலாம் போன்ற இன்னும் பல சிற்றிதழ்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து ஜீவநதி, கலைமுகம் மட்டக்களப்பிலிருந்து மகுடம், அனுராதபுரத்திலிருந்து படிகள், கொழும்பிலிருந்து ஞானம், தாயக ஒலி, புன்னகை போன்ற இதழ்கள் வெளிவருகின்றன' (ஞானம் ஆசிரியர். தி. ஞானசேகரன்).

கிழக்கிழங்கையின் மருதமுனை என்ற ஊரிலிருந்து 'கார்த்திகை 1988' இல் மருதூர்பாரி, எம்.ஐ.எம்.றஊப் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு "முனைப்பு" என்ற மகுடத்தில் சிற்றிதழ் வெளிவந்தது. முனைப்பு முதல் இதழின் அட்டையில் 'கார்த்திகை 88' என குறிக்கப்பட்டிருந்தாலும் அதன் இரண்டாவது இதழின் ஆசிரியர் குறிப்பு பின்வருமாறு குறிப்பிடுகின்றது: " "கார்த்திகை 88" என தேதியிட்ட முதலாம் இதழ் மாசி 89இல்தான் வெளிக்கொணரமுடிந்தது. காரணம் அக்கால கட்டத்தில் மின்சாரம் தடைப்பட்டிருந்தமையே யாகும்." ஆக, மாசி 1989இல்தான் முனைப்பின் முதழ் இதழ் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

முனைப்பு முதல் இதழின் பக்கங்கள் 28. அதில் ஒரு பக்கத்தில் (26) விளம்பரம். வாசகர் கூப்பனும் சண்முகம் சிவலிங்கம் மஹாகவியின் கோடை நூலில் எழுதிய ஆய்விலிருந்து 9 வரிகளும் 27ஆம் பக்கத்தில். கடைசிப்பக்கத்தில் (28) சுந்தரராமசாமியின் "ஜே.ஜே.சில குறிப்புகள்" நாவலிலிருந்து இருபந்திகள் தரப்பட்டுள்ளன. முதல் பக்கத்தில் ஆசிரியர் குறிப்பு. மிகுதிப் பக்கங்களிலேயே (24) ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. ஆறு கவிதைகள், இரு சிறுகதைகள், இரு விமர்சனங்கள், ஒரு கடிதம், பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் மஹாகவியின் கோடை நாடகத்திற்கு எழுதிய முன்னுரை குறிப்பிலிருந்து சில வரிகள் என்பன முனைப்பின் முதலிதழில் பதிவாகியுள்ளன.

முனைப்பின் ஆசிரியர் குறிப்பு அவதானிக்கத்தக்கது: "இலக்கியப் பத்திரிகை ஒன்று வெளியிட நீண்ட நாட்களாகவே ஆசை. அதனை கல்முனைப் பிரதேசத்தின் சமகால இலக்கியப் பரபரப்பு செயலூக்கப்படுத்திவிட்டது. அதன் விளைவே முனைப்பு. சிறுபத்திரிகை வெளியிட்டு வெற்றிகரமாக நடத்துவதன் நுட்பங்கள் எமக்குத் தெரியா. இலக்கிய நெஞ்சங்கள் இம்முயற்சிக்கு ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை மட்டும் இருக்கிறது. பெண்களை அட்டையில் தாங்கிவரும் இந்தியப் பத்திரிகைகளக்கு இருக்கும் சந்தை வாய்ப்பு இலங்கைப் பத்திரிகைளுக்கு இல்லாமலிருப்பது வேதனையோடு எண்ணிப்பார்க்க வேண்டிய ஒரு அம்சமாகும். இதனால் எத்தனையோ முயற்சிகள் விபர்த்தமாகிவிட்டன. மேலும் இந்நிலையை நீடிக்க விடாமல் செய்வது நமது கைகளில்தான் இருக்கிறது.." என ஆசிரியர் குறிப்பு தொடர்கிறது.

இவ்விதழின் ஆறுகவிதைகளும் சிறப்பாக அமைந்துள்ளன. மு.சடாட்சரம் எழுதியுள்ள "ஒளி

பிறக்கும்" சிறுகதை ஒரு நல்ல சிறுகதையாகும். செஹபாவின் 'ஊரடங்காத வேளை' என்ற சிறுகதையின் சித்தரிப்பும் அமைப்பும் சொற்செறிவைப் பெற்றுள்ளது.

இம்முனைப்பில் இரு விமர்சன கட்டுரைகள் காணப்படுகின்றன. இரண்டும் உமா வரத ராஜனின் "உள்ளமன யாத்திரை" சிறுகதைத் தொகுதியைப்பற்றி பேசுகின்றன. அறநிலா எழுதியுள்ள 'ஒரு வாசகனின் குறிப்பு' இத்தொகுதியில் உள்ள கதைகளைப்பற்றிய குறிப்புகளை நேர்த்தியாக முன்வைக்கின்றது. எம்.ஐ.எம்.றஊப் எழுதியுள்ள "ஸ்வாமியம்" நல்லதோர் விமர்சனமாகும். இதழின் ஒரு பக்கத்தில் (20) எழுத்தாளர் சுஜாதா உமா வரதராஜனுக்கு எழுதிய கடிதத்திலிருந்து சில பகுதிகள் தரப்பட்டுள்ளன. கடிதத்தை சுஜாதா இப்படி முடிக்கின்றார்: "நிறைய எழுதுங்கள். சுந்தரராமசாமியின் பாதிப்பை நடையில் தவிர்க்க முயலுங்கள்."

முனைப்பு முதலிதழ் முனைப்புள்ளதாய் உயிர்ப்புடன் வெளிவந்து, அதன் தனித்தன்மையை நம்பிக்கையை ஊட்டிற்று.

முனைப்பு இரண்டாவது இதழ் 1989 சித்திரை என முன்அட்டைக் குறித்தாலும், அசிரியர் குறிப்பு வைகாசியில் வெளிவந்துள்ளதாக குறிப்பிடுகின்றது. இவ்விதழ் முன்னைய இதழை விட முனைப்பாய் தெரிகின்றது. இதற்கு முதற்காரணம் சண்முகம் சிவலிங்கம் எழுதியுள்ள 'மனிதநேயமும் மண்ணாங்கட்டியும்' என்ற சிறுகதையாகும். முனைப்பு ஐந்தில் (1990 மார்கழி) "கன்னிகா" என்ற சிறுகதையை எழுதியுள்ள சண்முகம் சிவலிங்கம், இதழ் ஏழில் (1992 வைகாசி) "கள்ளிப் பூ" கதையையும், இதழ் 12இல் (செப்டம்பர் 2004) துருவப் பறவைகள்" என்ற கதையையும் எழுதியுள்ளார். சண்முகம் சிவலிங்கம் நவீன கவிஞராக பரவலாக அறியப்பட்டவர். அவரொரு ஆற்றல்மிக்க விமர்சகர் மட்டுமல்ல, மிகச்சிறப்பான நவீன சிறுகதைகளை எழுதியுள்ள சிற்பி என்பதற்கு முனைப்பில் அவரெழுதியுள்ள இக்கதைகள் சான்றாகின்றன. இச்சிறுகதைகளை வெளியிட்ட ஒன்றேபோதும் முனைப்பு இதழை என்றும் பேசுவதற்கு!

முனைப்பு 12 இதழ்களிலும் 75க்கு மேற்பட்ட கவிதைகள் வெளிவந்துள்ளன. உமா வரதராஜனின் 'ஏக்கத்துக்குரிய கிராமம்' (இதழ்1); வாசுதேவன் (ஒரு கவிதை), ஏ.கே.கலீலுர்றஹீம் (மன்னிக்கப்பட்டமரணம்), சோலைக்கிளி (குழம்பிச் சண்டையிட்டு பிறகு புன்னகைத்து) (இதழ் 2); செஹபா (மூன்று கவிதைகள்), எஸ்.கருணாகரன் (நேர் கோட்டுப் பயணம்), அறநிலா (நேற்றைகளை நோக்கிய யாத்திரை) (இதழ் 3); ஸ்வாமி (இருகவிதைகள்), வெலிமடை றபீக் (நான்கு கவிதைகள்) (இதழ் 4); ஈழக்கவி (சூரியனில் எழுதுதல்), கருணாகரன் (நாளைய திகதி), (இதழ்5); டீன்கபூர் (அந்தி வேளை), சபீனா அபூபக்கர் (கண்ணீரைக் காணவில்லை!) (இதழ் 6); மருதூர் ஏ.ஹசன் (இரவு) (இதழ் 7); முகமட் அபார் (நெருப்புப் பூமியில் என் நினைவுகள்) (இதழ் 8); எம்.எம்.விஜிலி (மீளூதலின்றிய துயரம்), கல்லூரன் (ஒரு மழை நாளில்.., எனக்குள்ளே நான்..), சோலைக்கிளி (உச்சி விதைப்பு.., இரக்க நிலம்..) (இதழ் 12) முதலான கவிதைகள் என்றும் மனசுக்குள் நிறைந்திருப்பவை.

முனைப்பு இதழ்களில் 24 சிறுகதைகள் வெளிந்துள்ளன. அவற்றில் சண்முகம் சிவலிங்கத்தின் நான்கு கதைகளும், மு.இ.அ.ஜபார் 'வேறு ஒருநாள் இரவு', நற்பிட்டிமுனை பளீல் 'மறுபடியும் மறுபடியும்', எம்.ஐ.எம்.றஊப் 'இடையில் வெளிகள்', மாபசன் ( பிரஞ்சு சிறுகதை மன்னன்) 'பழைய நண்பர்கள்', எம்எம்.நௌபாத் ஒரு நாளும் - ஒவ்வொரு நாளும்', மருதூர் கொத்தன் 'வேலி' முதலான சிறுகதைகள் முனைப்புள்ளனவாய் உயிப்புடன் கட்டமைந்துள்ளன.

முனைப்பு இதழ்களில் தரமான கட்டுரைகள் மற்றும் ஆய்வுகள், விமர்சனங்கள்

இடம்பெற்றுள்ளன. கே.எஸ்.சிவகுமாரனின் 'திறனாய்வும் மதிப்புரையம்', எஸ்.ஏ.ஆர்.எம். செய்யது ஹஸன் மௌலானாவின் 'இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி அறிஞர் ஜே.எம்.எம். அப்துல் காதிர்' (இ..2); மருதூர் கொத்தனின் 'கவிஞர் நீலாவணன்', (இ.3); கே.எஸ். சிவகுமாரனின் 'ஸ்வீடன் திரைப்பட நெறியாளர் இங்மார் பேர்க்மன்', சாகித்யனின் 'ஜித்து கிருஜண மூர்த்தியின் சிந்தனைகள் சில குறிப்புகள்', ஈழமுரசு முல்லைமணியின் இஸ்லாமிய பண்பாட்டினை இலக்கியத்தில் வடிக்கும் அ.ஸ.அப்துஸ்ஸமது' (இ.4); மருதூர் கொத்தனின் 'தமிழ் இனிமைக்குச் சான்று பாரதிதாசன் கவிதைகள்', எஸ்.ஏ.ஆர்.எம்.செய்யது ஹஸன் மௌலானாவின் 'இலக்கியப்பணியால் இலக்கிய மாமணிப் பட்டம் பெற்ற புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்' (இ.5); புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் 'விபுலானந்த அடிகளாரின் கல்வித் தொண்டு' (இ.6); எஸ்.ஏ.ஆர்.எம்.செய்யது ஹஸன் மௌலானாவின் 'வெண்பாவில் புலவர்மணி' (இ.7) முதலான கட்டுரைகள் முக்கியமானவை. முனைப்பு இதழ் 12இல் (செ. 2004) வெளியான மூன்று விமர்சன கட்டுரைகளும் விவாதத்திற்குரிய கருத்துக்களை விமர்சனபூர்வமான முன்மொழிந்துள்ளன. சண்முகம் சிவலிங்கத்தின் "காலடி" குறுநாவலைப்பற்றி 'புதிரும், புனைவின் தர்க்கமும்' என தர்க்கப் பிரக்ஞையுடனும், விமர்சன அணுகலுடனும் எம்.ஐ.எம். றஊப் எழுதியுள்ளார். 16 பக்கங்களில் பதியமாகியுள்ள இந்த விமர்சனம் பின்வருமாறு முடிகின்றது:

"முடிவாக சண்முகம் சிவலிங்கம் அவர்கள் காலடிப்பிரதியில் வன்முறையின் அறம் பேசுகிறார். இன்னும் "துப்பாக்கி சூழலில் இருந்துதான் அரசியல் பிறக்கிறது" போலும் அவருக்கு.

துப்பாக்கிக்கு மூளை இல்லை
இதயமும் இல்லை
விரல் தன் விசை அழுத்த
வெடிக்கும்
உயிர் குடிக்கும்
கருவில் இருக்கும் குழந்தையின் எனினும்

விரலே என் விரலே
மூளையும் இதயமும் உள்ள என் விரலே
ஒரு கணம் யோசி
மீண்டும் ஒரு கணம்..
குறி சரியா என திரும்பவும் யோசி

இன்னும் நூறு ஆண்டுகள் போயினும்
உன்குறி சரி என மக்கள் கூறும்
திசையினில் மட்டுமே
விசையினை அழுத்து
அன்றேல்
நீயும் ஓர் கொலைகாரன் என
வரலாறு என் நெற்றியில் எழுதும்

என்று முடிகின்றது கவிஞர் எம்.ஏ.நுஃமானின் கவிதை ஒன்று" (பக்;.40, 41).

மு.பொன்னம்பலத்தின் "நோயில் இருத்தல்" நாவல் பற்றி "ஒப்புமைகளும் உருவகங்களும்.." என தரமான ஒரு நூல் விமர்சனத்தை ஏ.ஜே.கனகரெட்னம் எழுதியுள்ளார். "முஸ்லிம் இலக்கியம்" தமிழ் இலக்கியமா? தமிழில் இலக்கியமா? என்ற ஆய்வுத்தேடலைத்தூண்டும் வகையில் ஒரு கட்டுரையை அ.ல.றியலாஸ் எழுதியுள்ளார்.

முனைப்பு இரண்டாம் இதழில் இருந்து அதன் ஆசிரியர் மருதூர் பாரி "மறுகரையின் நிறம்.." என்ற தொடர்கதையை எழுதியுள்ளார். முனைப்பு 8இல் "உள்மன யாத்திரை உமா வரதராஜனுடன் ஒரு சந்திப்பு" என்ற நேர்காணல் தரப்பட்டுள்ளது. றகுமான் ஏ.ஜபார் நேர்கண்டுள்ளார்.

இறுதி கேள்வியும் பதிலும் முனைப்பு பற்றியதாக அமைந்துள்ளது.

ஜபார் : முனைப்பு சஞ்சிகையின் ஏழு இதழ்கள் இதுவரையில் வெளிவந்துள்ளன. இந்த இதழ்கள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

உமா : முனைப்பின் வளர்ச்சி எனக்கு மிகவும் சந்தோஷத்தைத் தருகின்றது. நமது பிரதேசத்தின் ஓர் இலக்கிய இதழ் தமக்கென ஓர் அச்சகத்தை அமைத்துக்கொண்டு தொடர்ந்து வெளிவருவது முக்கியமானதொரு விஷயம். அதேவேளை முனைப்பு கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. முனைப்பின் குரல் எதுவென்று எனக்குத் தெரியாமல் இருக்கிறது. மற்றவர்களடைய படைப்புக்களைப் பிரசுரித்து வெளியிடுவதுடன் தன் பணி முடிந்து விட்டதாக முனைப்பு கருதுகிறதா? பிரகடனம் வேண்டாம். தன் இலக்கியக் கொள்கை என்ன என்றாவது சில கருத்துக்களை முன்வைக்கக் கூடாதா? ஆண்டுக்கு ஒன்ற அல்லது இரண்டு இதழ்களைக் கொணரும் முனைப்புக்குத் தொடர்கதை பொருந்தாத ஒரு அம்சமாக எனக்குப் படுகிறது. நல்ல கதைகள் வந்துள்ளன. சண்முகம் சிவலிங்கத்தின் கதைகள், செஹபாவின் ஊரடங்காத வேளை சிறுகதை, மன்சூரின் சிறுகதை ஆகியவை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவை. வருகின்ற எல்லாக் கவிதைகளையும், கட்டுரைகளையும் பிரசுரித்தே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏதும் ஆசிரியருக்கு இருக்கிறதா? இவற்றைப் படிக்கும் போது அப்படித்தான் எண்ணத்தோன்றுகின்றது (பக். 215).

முனைப்பில் நல்ல பல மொழிபெயர்ப்பு ஆக்கங்களும் வெளிவந்துள்ளன. "மாயப்புல்லாங்குழல் என்னும் சீனச் சிறுவர் கதைத் தொகுதிக்கு ஜின்யுன்சியன் என்பவரால் எழுதப்பட்ட அறிமுகவுரையை" ஆங்கிலம் வழியாகத் தமிழில் சா.தட்சணாமூர்த்தி முனைப்பு இரண்டில் தமிழ்பெயர்த்துள்ளார். நீரங்க விக்கிரம சிங்ஹ சிங்களத்தில் எழுதிய சிறுகதையை "பாம்புகள்" என முனைப்பு நான்கில் தமிழ்படுத்தித் தந்துள்ளார் இப்னு அஸுமத். காலித் உமர் அஹ்மத் ரஹ்மி அரபு மூலத்தில் எழுதிய கவிதையை எம்கே.எம்.ஷகீப் "உயிரான என் தாய்க்கு" (முனைப்பு 7) தமிழ்பெயர்த்துள்ளார். மனசை தொட்ட கவிதையிலிருந்து சில வரிகள்,

"தாயே உன் சின்னஞ்சிறு பஞ்சிதயம் எப்போதும்
அன்பால் நிரம்பி வழிந்து கொண்டேயிருக்கிறது.

உன் உள்ளத்தில் பற்றிக் கொண்ட
நியாயமான ஆசையினாலும் கனிவான கருணையினாலும்
இந்த உலகத்தை நிரப்புகிறாய்"


*1989-2014 வரையான காலப்பகுதியில் முனைப்பு பன்னிரண்டு இதழ்களையே வெளிக்கொணர்ந்துள்ளது. முனைப்பு 12ஆவது இதழின் ஆசிரியர் அவதானம் 'அபத்தத்தின் தரிசனமாக.. முகிழ்த்துள்ளது. "மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் முனைப்பைக் கொண்டுவருவதில் பெருமகிழ்ச்சி. இனிமேல் தொடர்ச்சியாக வருவதற்கு நீங்களும் ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என்பதில் நம்பிக்கை. பழைய முனைப்பின் பிரதிகள், அவைகளைக் கொண்டு வருவதில் ஏற்பட்ட சிரமங்கள், பொருள் இழப்புகளை நினைக்கும்போது மனம் சிலிர்த்துக் கொள்கின்றது. ஈழத்தின் தமிழ்ச்சிற்றிதழ் வரலாற்றில் முனைப்புக்கு ஒரு இடமுண்டு. சிற்றிதழ் வரலாற்றினை ஆய்வு செய்யப் புகுந்துள்ள பல்கலைக்கழக மாணவர்கள் முனைப்பின் பழைய பிரதிகளையும், அதன் வெளியீட்டில் அடைந்த அனுபவங்களையும் கேட்டறிந்து கொள்வதிலிருந்து முனைப்பின் முக்கியத்துவத்தினை அறிந்து கொள்ள முடிகின்றது. ஆண்டுகளிலும், எண்ணிக்கையிலும் சில இதழ்களேதான் வெளியிட முடிந்திருந்தாலும், இன்றுவரை தொடர்ச்சியாக வெளிவருகின்ற ஏனைய சிற்றிதழ்களுடன் ஒப்பிடும்போது அவைகளைவிட முனைப்பு தாழ்ந்துவிடவில்லை என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும். பணம், நேரம், வாழ்க்கை நிர்ப்பந்தம் என்பவைகள் முனைப்பு தொடர்ச்சியாக வெளிவர தடங்கலாய் இருந்தன.."*

பொதுவாக பொருளாதார வசதியின்மையே ஈழத்து சிற்றிதழ்களின் ஆயுள்குறைவிற்கு மூலகாரணமாக அமைந்துள்ளது. அத்துடன் இதழாசிரியரின் சொந்தப்பணமே மூலதனமாகியள்ளமை கவனிக்கத்தக்கது. ஈழத்து முதல் சிற்றிதழான 'பாரதி'யை வெளியிட்ட கே.கணேஷ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "மகாகவி பாரதியின் பெயரிலேயே ஒரு ஏடு தோன்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் இச்சஞ்சிகையை தொடங்கினோம். பீற்றர் கெனமன் அவர்களது வீட்டையே செயலகமாகக் கொண்டு சஞ்சிகை வெளிவந்தது. இதற்கு மூலதனம் வேண்டியபோது என்பெயரில் எனது தந்தை எழுதிவைத்த தலாத்துஓயா - தற்போதைய தலாத்துஓயா மத்திய மகா வித்தியாலயம் அமைந்திருக்கும் இடத்தை விற்று சஞ்சிகையை ஆரம்பித்தோம்" *(காலம் 17; 2003 ஜனவரி; கே.கணேஷ் நேர்காணல், பக்.9).*

*"மறுமலர்ச்சிச் சங்கத்தினூடாக 'மறுமலர்ச்சி' என்ற சஞ்சிகையை வெளியிட பணம் தேவைப்பட்டபோது, சங்கத்தின் ஐந்து நண்பர்கள் (வரதர், அ. செ. முருகானந்தன், நாவற்குழியூர் நடராசன், பண்டிதர் பஞ்சாட்சர சர்மா) சேர்ந்து ஒவ்வொருவரும் ஐம்பது ரூபா முதல் போட்டு 250 ரூபா மூலதனத்தில் 'மறுமலர்ச்சி' சஞ்சிகையை அச்சிட்டார்கள்.."*

*மல்லிகை இதழ் 1966 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வெளியானது. இந்த இதழின் ஆசிரியர் டொமினிக் ஜீவா. இவர் மல்லிகையின் ஆரம்பம் பற்றி பின்வருமாறு குறிப்படுகிறார். 'மனைவியினுடைய காப்பை முன்னர் அடைவு வைத்திருந்தேன். அதை மீட்டு விற்றேன். 360 ரூபா கிடைத்தது. தோழர் அரியரத்தினம் 40 ரூபா அன்பளிப்புச் செய்தார். பூபாலசிங்கம் 25 ரூபா தந்துதவினார். அந்தப்பணத்தில் முதல் இதழை வெளிக் கொணர்ந்தேன்".*


*'ஈழத்து இலக்கியச் சிற்றிதழ்களின் வரலாற்றினை எடுத்து நோக்கினால் இத்தகைய ஒரு நிலைமை தொடர்வதைக்காண்கிறோம். அதாவது தாம் புதிதாக ஒரு சஞ்சிகையைத் தொடங்கி சிலகாலம் நடத்தி பொருளாதார ரீதியாக தாக்குப்பிடிக்க முடியாமல் நட்டமடைந்து சஞ் சிகையை நிறுத்திவிடும் போக்கினைக் காண்கிறோம். கடந்த 70 வருட சஞ்சிகை வரலாறு பெரும்பாலும் இத்தகையதாகத்தான் இருக்கிறது' என ஞானம் ஆசிரியர் தி.ஞானசேகரன் மிகச்சரியாக கணித்துள்ளார். இதுதான் முனைப்புக்கும் நேர்ந்திருக்கிறது.*




# புன்னகை இதழ்

கேட்பினும் பெரிது கேள் என்கிற பாரதியின் கூற்றை அடை மொழியோடு இருமாத இதழாக வெளியானது. கவிதை படிக்கும் வாசகனுக்குள் ஒரு கிளர்ச்சியை மூடிக்கிடந்த உணர்வுக் குவியலைத் தூண்டுதல். சமுதாய அவலங்களின் முகத்திரையை கிழிக்கும் விதமாக.. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு எழுச்சியை உருவாக்9கும் படியான கவிதைகளை வெளியிட்டு தனி முத்திரையோடு பவனி வந்தது புன்னகை.. கவிதைகளில்.முத்திரை கவிதைகள். என்கிற தலைப்பில் கவிதைகளை தனித்துவப்படுத்தியது மேலும் சிறப்பு கவிதைகளில் நவீன படைப்புக்களை வெளியிட்டதோடு புதிய கவிஞர்களுக்க ஒரு நல்ல முகவரியைக் கொடுத்து புன்னகை.

ஹைக்கூ. ஹைபுன். லிமரைக்கூ சென்ரியு. ஆகிய கவிதை வடிவங்களையும் வெளியிட்டு நீண்ட ஹைக்கூ பயணத்தில் தன்னையும் பதித்துக்கொண்டது புன்னகை. ஆசிரியர் குழுவில் க.அம்சப்ரியா.செ.ரமேஷ் குமார்.ஆகிய இருவரும் இணைந்து புன்னகையை வழி நடத்தினர். அலமாரி என்கிற தலைப்பில் ஹைக்கூ நூல் அறிமுகம் செய்யப்பட்டது நூல் விமர்சனம் பகுதியில் கவிதை நூல்கள் க்குறித்த செறிவான விமர்சனம் பதிவு செய்தது..



பூ வாசனை. என்ற பகுதியில் படைப்பாளிகளின் முகங்களை வெளிக்கொண்டு வந்தது. ஹைக்கூ படைப்பாளியான என் போன்றவர்களையும் வாசகர்கள் மத்தியில் நல்லதொரு அறிமுகத்தை கொடுக்க உறுதுணையாய் நின்றது புன்னகை.

ஹைக்கூ வனம் பகுதியில் சிறந்த ஹைக்கூக்கள் வெளியிட்டு வாசகர்களுக்குள் ஒரு புரிதலை புன்னகை ஏற்படுத்தியது பாராட்டுக்குரியது. மேலும் 2009 டிசம்பர் மாதத்தில் இரு மாத இதழாக புன்னகைக்கத் தொடங்கியது. புன்னகை இதழ் நாளடைவில் புன்னகை இலக்கிய அமைப்பாக பதிவு பெற்றது. இலக்கிய பணிகளோடு நில்லாமல் சமூக பணிகளிலும் தன்னை விரிவு படுத்திக்கொண்டது. 2016 வரை சிறந்த சிறந்த சிற்றிதழுக்கான விருதும் ரொக்கப் பரிசும்(2000) வழங்கி கவுரப்படுத்தியது. சிறந்த நூலாசியர்களுக்கான விருதும் ரொக்கப் பரிசும் வழங்கி பெருமை கொள்கிறது புன்னகை இலக்கிய அமைப்பு. மேலும் பில் சின்னாம் பாளையம் அறிவுச்சோலை கல்வி விழிப்புணர்வு மையம் குழந்தைகளுக்கு வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நூல்களை வழங்கி வருது போற்றுதலுக்குரியது..

சமூக பேரிடர் காலங்களில் புன்னகை இலக்கிய அமைப்பு நிதி உதவிகளை மக்களுக்கு நேரிடையாக வழங்கி உதவிக்கரம் நீட்டியுள்ளது. புன்னகை மற்றும் பில் சின்னம் பாளையம் அறிவுச்சோலை கல்வி விழிப்புணர்வு மையத்தோடு இணைந்து திருவள்ளுவர் தினத்தன்று வீட்டுத்தொரும் திருக்குறள் புத்தகம் வழங்கப்பட்டது. பொள்ளாச்சி இலக்கிய வட்டத்துடன் இணைந்து குழந்தைகள் கலை கொண்டாட்டம் நடத்தப்பட்டு.கலந்துகொண்ட பள்ளிக்குழந்தைகளுக்கு எழுது பொருள்கள் அடங்கிய பரிசுப் பெட்டகம் வழங்கப்பட்டதோடு ஊக்க சான்றிதழும் வழங்கி சிறப்பித்தது.

ஓவிய திறமையை வளர்க்க கூடுதலாக வரைதாளும் வ்ழங்கப்பட்டது. ஆனை மலை பகுதியில் உள்ள பள்ளிகளில் திருக் குறள் போட்டிகள் பி சி பாளையம் அறிவுச்சோலை கல்வி விழிப்புணர்வு மையத்தோடு இணைந்து நடப்பட்டது. திருக்குறள் புத்தகம் பரிசாக வழங்கி வாசிப்பு திறனை மேம்படுத்தும் முயற்சி கவனிக்கதக்கமீது.. ஹைக்கூ கவிதைகளின் வடிவ நுட்பத்தை நம்மோடு பகிர்கிறார். புன்னகை ஆசிரியர் க.அம்சப்ரியா..

கவிதையின் தோற்றம் எந்த நாட்டி லிருந்தும் உருவாகலாம்.. உள்ளடக்கம் என்பது மண்வாசனையோடு திகழ வேண்டும்.மண்வாசனை என்று நான் குறிப்பிடுவது,அந்த நாட்டின் இயற்கைச் செல்வங்கள்,மக்களின் பழக்க வழக்கங்கள்,வறுமை, போராட்டங்கள் இவை அடங்கிய கருப்பொருள்கள் கவிஞனை எழுத தூண்ட வேண்டும்..ஹைக்கூ குறுகிய வடிவத்தில் பிரம்மாண்டத்தைக் கட்டமைப்பது..அந்தக் கட்டமைப்பை உருவாக்க ஆழ்மனதில் இடைவிடாத மனப்போராட்டம்,வினாக்களின் ஆர்ப்பாட்டமெல்லாம் எழும்..யாவற்றையும் உள்வாங்கிக் கொண்டு மனதை அமைதிப்படுத்தி,சிந்தித்தால் காலத்திற்கான கவிதையை மனம் ஒப்படைத்துவிடும்..வார்த்தை ஜாலங்கள்,புத்திசாலிதரதனமான சொற்பிரயோகங்கள், விடுகதைகள் இவை எளிதில் நீண்டகால வாசகர் ஒருவர் அறிந்து கொள்வார்..

அழகியல் ஆழ்மனத்தின் தவ நிலையில் மேலெழும்பும்..சமூக கோபம் திரண்டு திரண்டு கவிதைக்குள் வந்து ஆர்ப்பரிக்கும்..அதனால்தான் சிறந்த ஹைக்கூ கவிதைகள் எப்போது வாசித்தாலும் புதுமை கொண்டு வசீகரிக்கிறது..எழுத எழுத எங்கிருந்தோ கருத்துகளை கொண்டு வந்து கொட்டுகிறது மனம்..மூன்று வரிகளில் எழுதப்படுவதெல்லாம் ஹைக்கூ இல்லையென்று கூறக்காரணம், மூன்று வரியிஎழுதினால் ஹைக்கூ என்று பொருத்தமற்றுப் புரிந்து கொள்வதின் விளைவே..ஒரே வரியில் எழுதிய கவிதை..இரண்டு வரியில் எழுதிய கவிதையெல்லாம் நிலைத்து நிற்க காரணம்,எழுதப்பட வேண்டிய காலத்தின் தேவையாகும்..தேவையறிந்து படைக்கப்படும் படைப்பு காலத்தால் நிலைக்கும்..இது ஹைக்கூவுக்கும் பொருந்தும்.. இனி படைப்புக்குள்..

புன்னகையின் ஹைக்கூ வனம்.

நகரங்களில் ஆறுமாதத்திற்கு ஒரு முறை வீடு மாறும் அவலம் இருந்து கொண்டேயிருக்கிறது கும்பஸ்த்தனுக்கு.. அங்கு வளர்த்த செடிகள் அனாதையாய் விட்டு புலம் பெயரும் சோகம் அவற்றின் கதறல் கவிஞரின் காதுகளில் ஒலித்திருக்கும்.அதுவே ஹைக்கூவாய்..

நட்டு வளர்த்த
பூச்செடிகள் கதறுக்கின்றன
நள்ளிரவில் வீடு மாற்றம்.
செடியில் கதறல்.

யோசிக்க வைக்கிறார். கவிஞர்.கார்த்திக் பிரகாஷ். பொள்ளாச்சி

புலம் பெயரும் நிலை கொடியது. பிறந்து வளர்ந்த ஊரை விட்டு வீடு வாசல் நிலம் மாடு கன்று என அனைத்தையும் இழந்து தாய் நாட்டை விட்டு வெளியேறும் மனிதனின் மனம் அழுகிறது. கண்களில் உப்புநீர் அருவியாய் உத்திரமாய் கொட்டும் தருணம்.கொடுமையிலும் மிகக் கொடுமை..

இத்தனை துயாரங்களை அறியாத பருவம் குழந்தைப் பருவம். குழந்தையின் மனசை படம்

பிடிக்கிறார். நட்புக் கவிஞர். முகவை முனீஸ்.

அகதிக் குழந்தை
மனசு முழுக்க
எடுக்க மறந்த பெம்மை..

குழந்தையின் பிரிவு துக்கத்தைக் கொடுத்திருக்கும் பொம்மைக்கு கண்டிப்பாக..

மரணம் என்பது இயற்கை அது வெளியில் நடக்கும் போது செய்தி. நம் வீட்டில் நடந்தால் துயரம்..

அது போலவே வெட்டியானின் மனதை படம்பிடிக்கிறார் நாணற்காடன்

தூங்கும் வெட்டியான்
இமைகள் மலர்கின்றன
தூரத்தில் ஒப்பாரி.


இறப்பு என்பது சோகம். ஆனால் தொழிலாளிக்கு.. கேள்விகள் நீள்கின்றன.. இது போன்று செறிவான ஹைக்கூக்களை புன்னகை வெளியிட்டு பல படைப்பாளிகளை வெளிக்கொண்டு வந்தது.

ஒரு ஹைபுன்

புழுதிப் படலத்தை கிளப்பிப் போகும் நகரக்காற்று.
அதிர்ந்து ஓடும் வாகன இரைச்சல்
இடைவிடாத வாகன ஒலிப்பானின் சங்கிதம்.
ரூபாய் நாணயங்கள் கை நிறைய
தொலைபேசியில் எண்களை சுழற்றும் விரல்கள்.
பட படக்கும் இதய துடிப்பு.
திமிறி ஓடும் புரவியாய் மனசு
இணைப்பு கிடைக்கும் வரை இடைவிடாத முயற்சி
பதற்றமாகி பட படக்கும் இதயம்.
கிடைத்துவிட்ட இணைப்பில் ஹாலோ குயிலாய் கூவும் குரல்
செவிப்பறைக்குள் அதிராமல் சங்கீதம்.
தொடரும் இருவரின் பேச்சு.
நொடிகளில் தொடங்கி மணிக்கணக்கில் நீள்கிறது
காதல் சம்பாசனைகள்.
கண் விழிக்கும் நட்சத்திரம். நிலவின் வருகையை முன்னறிப்பதாய்..

தொலைபேசியில் காதலி
முற்றுப் பெறுவதில்லை
கவிதைகள்..

- நிலாகிருஷ்ணமூர்த்தி




# என்றும் மணக்கும் மல்லிகை

இலக்கியத் துறைக்கு சிறுசஞ்சிகைகள் ஆற்றிவரும் பங்களிப்பு வியக்கத்தக்கது. மணிக்கொடி..எழுத்து..சாந்தி.. சரஸ்வதி..ஞானரதம்..இவ்வாறாக தமிழ் நாட்டின் பிரபல இலக்கிய சஞ்சிகைகள் ஞாபகம் வருகின்றன. இலக்கிய ஜாம்பவான்களான சி.சு.செல்லப்பா,சிதம்பர ரகுநாதன், ஜெயகாந்தன் போன்றோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளி வந்த சஞ்சிகைகளும் நீண்டகாலம் நிலைக்கவில்லை. வாழ்ந்த காலத்தினுள் அவை ஏற்படுத்திய தாக்கம் பாராட்டத்தக்கதே. இலங்கைச் சூழலில் மறுமலர்ச்சி..கலைச் செல்வி..மரகதம் போன்ற சிறுசஞ்சிகைகளின் பணியை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

ஒவ்வொரு இலக்கியச் சஞ்சிகையும் தன்னளவில் கருத்தியல் தனித்துவம் கொண்டவையே. அதுவே அவற்றை வாழவைக்கின்றன. வெளிவந்த இதழ்களின் எண்ணிக்கையோ, அச்சிட்ட பிரதிகளின் தொகையோ இங்கு முக்கியமானதல்ல.

இந்தப் புரிதலுடனேயே நாம் யாழ்ப்பாணத்திலிருந்தும்,1995 ன் பின் னர் கொழும்பிலிருந்தும் வெளிவந்த 'மல்லிகை' மாசிகையைப் பார்க்க வேண்டும்.

'யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதி என அழைக்கப்பட்ட வியாபாரப் பிரதேசத்தில் முக்கிய தெருவான, கஸ்தூரியார் வீதி யிலுள்ள 60- ம் எண்ணுள்ள 'ஜோஸப் சலூன்' என வழங்கப்பட்ட ஒரு பிரபல சவரக்கடையின் பின்பகுதியில் இருந் துதான் இச்சஞ்சிகை வெளிவர ஆரம்பித்தது..உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி இது. சிகை அலங்கரிக்கும் நிலையம் ஒன்றினுள் இருந்து வெளிவந்த ஒரேயொரு இலக்கிய சஞ்சிகை 'மல்லிகை' தான். சலுனில் தொழில் செய்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த சர்வதேசச் சஞ்சிகையும் 'மல்லிகை' தான்..அங்கு தொழில் செய்து வந்தவன்தான் இந்த' மல்லிகை 'ஆசிரியர். அதாவது டொமினிக் ஜீவா.' என்று வெளிப்படையாகவும் துணிச்சலுடனும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

*1966 ஆகஸ்ட் 15 - ல் முதல் இதழை வெளியிட்ட அவர் ஆசிரிய பீடத்தில் ஹாயாக அமர்ந்திருக்கவில்லை. 'மல்லிகை' யின் ஏக விநியோகத்தரும் அவரேதான். யாழ்ப்பாணத் தெருக்களில் வாசகர்களைத் தேடிச் சென்று கையளித்தார். காசு கொடுத்து வாங்கி, அதனைக் கிழித்து முகத்தில் எறிந்த அனுபவங்களையும் அவர் பதிவு செய்துள்ளார். "ம்.. நாலைந்து பிரதிகள் வரும் " என்று சொன்னவர்களையும் அவர் சந்தித்துள்ளார்.*

*பயணம் தொடர்ந்தது. நடைமுறைப் பிரச்சினைகள், யுத்த இடப்பெயர்வு போன்ற காரணங்களால் தற்காலிக இடைநிற்றல்கள் ஏற்பட துண்டுதான். 1966 முதல் 2012 வரை 47 ஆண்டுகள்400 இதழ்களை வெளியிட்ட கட்டத்தில், உடல்நிலைத் தளர்வு காரணமாக ' மல்லிகை' ஜீவா ஓய்ந்தார்.*

*' மல்லிகை 'கடைசிவரை தனது தனித்துவத்தைத் தக்கவைத்துக் கொண்டே பயணித்தது. எந்த சந்தர்ப்பத்திலும் அதனை விட்டுக் கொடுக்கவில்லை.*

*'மல்லிகை' க்கு நெருக்கமானவர்கள் 50 வருடம் வரையிலாவது முன்னெடுக்க ஆலோசித்தபோது " ஜீவா செய்தால்தான் அது மல்லிகை' என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டாராம்.*

*ஒரு சிறுசஞ்சிகை குறிப்பிட்ட காலம் தொடர்ந்து வெளிவருகின்றபோது, அதன்தனித் தன்மையினால் ஈர்க்கப்பட்டு வாசகர் வட்டமொன்று உருவாகிவிடுவது இயல்பு. அந்தப் பலத்தை மையமாகக் கொண்டு, இணைச் செயற்பாடாக நூல் வெளியீடுகளை ஆரம்பிப்பது வழக்கம்.*

*' மல்லிகைப் பந்தல்' அவ்வாறான ஒன்றுதான். அந்த வரிசையில் சுமார் நாற்பது நூல்கள் வெளியாகின. அவை அநேகமாக ' மல்லிகை' யின் அறுவடைகளாகவே அமைந்தது கவனிக்கத்தக்கது. சில உதாரணங்கள் வருமாறு..*

** 'மல்லிகை ' யின் சிறப்பான ஆசிரிய தலையங்கங்களின் தொகுப்பு - 'தலைப்பூக்கள் '*

**தெரிவு செய்யப்பட்ட சிறந்த கேள்வி- பதில் தொகுப்பு.- ' தூண்டில்'*

**இலக்கிய ஆளுமைகளின் உருவத்தை அட்டையில் பதித்து அவர்களைப் பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுப்புக்கள்*

*-- ' மல்லிகை முகங்கள்'*<br>
*--' முன் முகங்கள் '*<br>
*-- ' அட்டைப் படங்கள் '*<br>
**' மல்லிகை' யில் எழுதப்பட் சிறந்த சிறுகதைகளின் தொகுப்புக்கள்.*<br>
*( தொகுப்பு : செங்கையாழியான்.)*<br>
*-- ' மல்லிகை சிறுகதைகள்' 1-2 .*<br>
** சிங்கள மொழிபெயர்ப்புக் கதைகளின் தொகுப்பு.*<br>
*( தொகுப்பு: செங்கையாழியான்)*<br>
*-- ' சிங்களச் சிறுகதைகள்'*<br>
** தெரிவு செய்யப்பட்ட கவிதைகளின் தொகுப்பு.*<br>
*( தொகுப்பு : இ.முருகையன்)*<br>
*-- ' மல்லிகை கவிதைகள்'*<br>
**பட்ட ஆய்வுக்குள்ளான ' மல்லிகை' எழுத்துக்களின் நூலாக்கம்.*

-1980 களில் ' மல்லிகை' விமர்சனங்கள்.
என்.தேவகௌரி.
-1990 களில் ' மல்லிகை' சிறுகதைகள்.
மல்லிகா தேவி.

* ' மல்லிகைப் பந்தலின் கீழ் தமது பிரதிகளை வெளியிட விரும்பிய தனிப்பட்டவர்களின் நூல்கள்.

* நீர்கொழும்பு, கிளிநொச்சி, திக்குவல்லை போன்ற பிரதேசங்களுக்கான ' மல்லிகை' சிறப்பு மலர்கள்.

மேற்படி விடயங்களை அவதானிக்கும்போது ஓர் இலக்கிய சஞ்சிகையால் என்னதான் சாதிக்க முடியாதென்று கேட்கத் தோன்றுகிறது.

சிங்களப் பிரதேசங்களிலிருந்து வெளிப்படும் தமிழ் இலக்கிய முயற்சிகள்மீது அவர் விஷேட கவனம் செலுத்தினார்.அப்பகுதி இளம் எழுத்தாளர்களையும் அக்கறையுடன் ஊக்குவித்தார்.இதே கண்ணோட்டத்துடன்தான் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத எழுத்தாளர்களையும் கவனித்தார்.

'மல்லிகை' ஆசிரியர் ஆரம்ப இதழ்களிலிருந்தே சிங்கள இலக்கியங்களை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தி வந்தார்.சிங்களப் படைப்பாளிகளை அட்டையில் பதித்தார்.சிரேஷ்ட எழுத்தாளர் மாட்டின் விக்ரமசிங்ஹவுக்கு சிறப்பு மலர் வெளியிட்டார். தமிழ் -சிங்களப் பரிவர்த் தனையை வலியுறுத்தியதோடு, அது ஒருவழிப் பாதையாக இருக்கக் கூடாதென்றும் சொன்னார்.

சிங்கள எழுத்தாளர்களும் வாசகர்களும் அதிகம் அறிந்துவைத்துள்ள தமிழ் எழுத்தாளரென்றால் அது ஜீவாதான்.'கொடகே' உள்ளிட்ட பல நிறுவனங்கள் அவரை கௌரவித்தன.ஜீவாவின் ' பத்தர பிரசுதிய'( பத்திரிகைப் பிரசவம்) சிங்கள சிறுகதை நூல் வெளிவந்தபோது அதனைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.'ஈழத்து மாக்ஸிம் கோக்கி' என்று பாராட்டினர்.



ஒரு சிகை அலங்காரத் தொழிலாளியாலும் சரித்திரம் படைக்க முடியும் என்பதை நிரூபித்தார்.சவரக் கடையே என் சர்வ கலாசாலை என்பதை மெய்ப்பித்தார்.

தனது 93 ம் வயதில் (2021) டொமினிக் ஜீவா நிரந்தரமாகவே எம்மிடமிருந்து விடைபெற்றார்.சர்வதேசமெங்கும் பரவலாகப் பேசப்பட்டார்.


'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறுகதைத் தொகுதிக்காக முதன்முதலில் அரச சாகித்திய மண்டல விருது பெற்ற படைப்பாளி ஜீவாவைவிட, ' மல்லிகை' ஆசிரியர் ஜீவா மேலானவர் என்பதை கடும் முயற்சியின் மூலம் ஒப்புவித்துச் சென்றார்.

சூரன்.ஏ.ரவிவர்மா

# கால ஓட்டத்தில் கரைந்துபோன சிற்றிதழ்கள்

இலங்கையில் வெளியான சிற்றிதழ்களைப் பட்டியலிட்டால் அதன் எண்ணிக்கை நூற்றுக்கும் அதிகமாக இருக்கும். இன்று வெளியாகும் சிற்றிதழ்களைப் பட்டியலிட முடியாத நிலை உள்ளது. மல்லிகை,சிரித்திரன்,சுடர் போன்ற சஞ்சிகைகள் பத்திரிகைக் கடைகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இன்றைய சஞ்சிகைகள் சந்தாரருடன் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டன. ஆகையால் தொடர்ச்சியாக வெளியாகும் சிற்றிதழ்களை இனம் காண முடியாத நிலை உள்ளது.

ஞானம், ஜீவநதி ஆகிய இரண்டும் வாசகர்களுடன் தொடர்பில் இருப்பதால் தமது இருப்பை தக்கவைத்துள்ளன. கலைமுகம்,தாயகம், படிகள்,மகுடம் ஆகியனவும் வெளியாகின்றன. இவை தவிர புதிய சஞ் சிகைகள் வெளியாவதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகும் தகவலின் மூலம் தெரிய வருகின்றது. பாரதி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி மல்லிகை, குமரன், இளம்பிறை, சிரித்திரன், விவேகி, மரகதம், தேனருவி, மலர், மாலை முரசு, நதி, அலை, திர்த்தக்கரை, அஞ்சலி, கொழுந்து, நந்தலாலா, பூரணி, சுடர் புதுசு, தோழி, நிவேதினி, பெண், புதுமை இலக்கியம், வசந்தம் அஞ் சலி, நதி, களனி, அக்னி, நோக்கு, வாகை, மாருதம், கீற்று, மாற்று, ஊற்று, பாடும்மீன், ரோஜாப்பூ, கதம்பம், பூமாலை, தமிழமுதம், தமிழின்பம், மாணிக்கம் குன்றின்குரல், தாரகை, பொதுமக்கள் பூமி, சுவர், சமர், களம், சுவைத்திரள், கலகலப்பு, அக்கினிக்குஞ்சு, தாயகம், வசந்தம், எழில்,. நாவேந்தன், குங்குமம், கற்பகம், சிலம்பொலி தமிழமுது, வைகறை பொய்கை, காவலன், களனி, கலை, பொன்மடல், களன், விருத்தம், கிருதாயுகம், தேன் மொழி, கவிஞன், க-வி-தை, பொறிகள், சுவடுகள், விடிவெள்ளிகள், பூபாளம், பொன்மடல்,



முனைப்பு, பெருவெளி, தாகம், விளக்கு, வெளிச்சம் சுதந்திரப்பறவைகள், வியூகம், மூன்றாவது மனிதன், முனைப்பு, பூவிழி, ஆகவே, யாத்திரா, இருப்பு, மறுகா, மறுபாதி, எதுவரை, செங்கதிர், நீங்களும் எழுதலாம்,காலத்தில் கமத்தொழில் விளக்கம்,சமூகஜோதி நா.முத்தையாவினால் வெளியிடப்பட்ட ஆத்மஜோதி,சிவத்தொண்டன் நிலையம் வெளியிட்ட சிவத்தொண்டன்,, மில்க்வைற் செய்தி,மாற்றம்,ஆண்டு கொம்பியூட்டர் ருடே,

கொம்பியூட்டர் இருக்கிறம்,அமுதம்,இலங்கை விகடன் ,அர்ஜுணா, புதுயுகம், கலைக்கேசரி, சமகாலம், ஆனந்தம், அழகி, செங்கதிர், கொளுந்து,சுகவாழ்வு, காயத்திரி சித்தம், தின மகுடி

ரைம்ஸ்,வெளிச்சம்,நங்கூரம், அறிவுக்களஞ்சியம்,சாளரம், சோதிடகேசரி, அருள், ஃபிளட்ஸ்கைட்ஸ், கொட்டாஞ்சேனை அன்ட் யுனைட்,, அலை ஓசை,வெள்ளவத்தை கைட் என்பன கால ஓட்டத்தில் கரைந்து போன சிற்றிதழ்கள். இந்தப்பட்டியலில் மேலும் பல இருக்கலாம்.

சிற்றிதழ் என்பதற்கான விளக்கத்தை பலரும் தமக்கு ஏற்ற வகையில் சொல்கின்றனர். சிற்றிதழுக்கு என ஒரு வரைவிலக்கணம் இருக்கிறது. அதன் பிரமாணங்களுடன் வெளியாவதுதான்





சிற்றிதழ் என சிலர் சொல்கிறார்கள்.

சிற்றிதழின் தோற்றம், வளர்ச்சி பற்றிய கருத்துகள் பொது வெளியில் பகிரப்பட்டுள்ளன. ஆனால், அச்சு வடிவம் வரமுதலே முன்னரே கையெழுத்துப் பிரதிகள் வெளிவரத் தொடங்கிவிட்டன. அவை பற்றிய ஆய்வுகள் குறிப்புகள் எவையும் பாதுகாக்கப்படவில்லை. கையெழுத்துப் பிரதி,ரோனியோ, அச்சு என வளர்ச்சியடைந்த சிற்றிதழ்கள் ஈ மகசீன் என்ற வடிவம் வரை வியாபித்துள்ளது.

புத்தகத்தை அச்சிடுவது பெரும் செலவு என்பதால் கையெழுத்துப் பிரதிகள் கவனம் பெற்றன.

வாசிகசாலை, பாடசாலை,கிராம அபிவிருத்திச் சபைகள் என்பன வருடாந்தம் கையெழுத்துப் பிரதிகளை வெளியிட்டன. அவற்றை சஞ்சிகை, சிற்றிதழ் என்ற வகைக்குள் இதுவரை எவரும் அடக்கவில்லை. அவை வெளியான காலகட்டத்தில் கலை, கலாசார,சமூக விழுமியங்கள் அவற்றில் பதியப்பட்டன. அடுத்த ஊருக்குத் தெரியாமல் அந்த ஊருக்குள் மட்டும் மட்டுப் படுத்தப் பட்டதால் அவற்றினால் எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

பிரதேச சபைகள் தமது எல்லைக்குட்பட்ட கலைஞர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வருடாந்தம் புத்தகங்களை வெளியிடுகின்றன. அவை ஆண்டுமலர் என்ற வகைக்குள் அடக்கப்படுகின்றன.அந்தப் பிரதேசசபைக்குள் வாழும் வாசகர்கள் அனைவரின் கைகளுக்கும் அவை கிடைப்பதில்லை. தாம் புறக்கணிக்கப்படுவதாக ஒருசில கலைஞர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.




இலங்கையில் இருந்து வெளியாகும் சிற்றிதழ்கள் எவையும் வியாபார நோக்கம் கொண்டதல்ல. புது வருடம், பொங்கல், கிறிஸ்மஸ், தீபாவளி, அட்சயதிருதியை, ஆடித்தள்ளுபடி போன்ற நாட்களில் இலட்சக்கணக்கில் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடுபவர்கள் சிற்றிதழின் பக்கம் எட்டிப்பார்ப்பதில்லை. விளம்பரத்தை நம்பாமல் வாசகர்களின் மீது முழு நம்பிக்கை வைத்து சிற்றிதழ்களை வெளியிடும் ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

பத்திரிகை ஆசிரியர்கள் அல்லது இலக்கியப்பக்கத்துக்குப் பொறுப்பானவர்களுடன் நெருக்கமாகப் பழகும் சிற்றிதழ்களைப் பற்றிய விமர்சம் பெரிதுபடுத்தப்படுகின்றன. பத்திரிகை நிருவனங்கலுக்கு மாதாந்தம் சிற்றிதழ்களை இலவசமாக அனுப்பினாலும் சிலவேளை அவை கண்டுகொள்ளப்படுவதில்லை. தமக்குப் பிடிக்காத சிற்றிதழ்களை மட்டம் தட்டுவதில் சிலர் முழுமூச்சாகச் செயற்படுகிறார்கள்.

ஃபேஸ் புக்,வைபர், வட்ஸ் அப் போன்ற சமூக வலைத்தளங்களில் எழுத்தாளர்கள் பலர் ஆர்வமுடன் செயற்படுகின்றனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் தம்மைப் பிந்தொடர்வதாக அவர்கள் பறைசாற்றிக்கொள்கின்றனர். அவரின் ஆக்கம் பிரசுரமான சிற்றிதழை முறைந்த நூறு பேர் வாங்கினாலே ஆசிரியர் சந்தோஷப்படுவார்.

தமது ஆக்கம் பிரசுரமான அடுத்தகணமே சில எழுத்தாளர்கள் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுவிடுவார்கள். அவரைப் பின்தொடர்பவர்கள், உடனடியாக லைக் பண்ணிவிடுவார்கள். அத்துடன் நிற்காமல் ஆகா,அற்புதம், அருமையான ஆக்கம் என உசுப்பேற்றுவார்கள்.அதை எத்தனைபேர் முழுமையாகப் படித்திருப்பார்கள் என்பது தெரியாது. ஒரு சஞ்சிகையை

வாங்கினால், ஆசிரியருக்கு ஒரு கடிதம் அனுப்பினால் பிரயோசனமாக இருந்திருக்கும்.

பத்திரிகைகளில் பிரசுரமாகும் சிறுகதைகள் மறக்கப்பட்டுவிடுகின்றன. சஞ்சிகைகளில் பிரசுரமாகும் சிறுகதைளைப் பற்றிய விமர்சனங்கள் அடுத்த சஞ்சிகையில் பிரசுரமாகும்போது அவை மீண்டும் உயிர் பெறுகின்றன.

உள் நாட்டில் சஞ்சிகையை அச்சடித்து விற்பனை செய்வதற்கு போராட்டம் நடத்தும் நிலையில் வெளிநாட்டுச் சஞ்சிகையின் உள்ளூர் முகவர்களாகச் சிலர் செயற்படுகின்றனர். இலங்கையில் உள்ள எழுத்தாளரது ஆக்கம் வெளிநாட்டு சஞ்சிகையில் பிரசுரமானால் அதனை சமூக வலைத்தளத்தில் பெரிதாக பதிவிடுவார். தன்னுடைய ஆக்கம் வெளிவரவில்லை என்றால் மூச்சு விடமாட்டார்.


சஞ்சிகையின் விற்பனையை கூட்டுவதற்காக அவ்வப்போது சிறப்பிதழ்களை வெளியிடுவார்கள். ஆனால், அவற்றினால் இலாபம் கிடைப்பதில்லை.

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களுடன் ஒப்பிடுகையில் வெளியாகி நின்றுபோன சஞ்சிகைகளின் எண்ணிக்கை மிக அதிகம்.

ஊடகத்தைப் பற்றிய எந்த ஒரு அடிப்படி அறிவும் இல்லாமலே டொமினிக் ஜீவா 48 வருடங்களாக மல்லிகையை நடத்தினார். போட்டி பொறாமை, குழு மனப்பான்மை என்பனவும் சஞ்சிகைகளின் வீழ்ச்சிக்குக் காரணம்.மறுமலர்ச்சி, மல்லிகை, விவேகி,சுடர் போன்றவற்றின் மூலம் புதிய எழுத்தாளர்கள் பலர் அறிமுகமானார்கள்.

ஆனந்தவிகடன்,குமுதம் போன்றவற்றின் மாயையில் இலங்கையின் வாசகர்கள் கட்டுண்டு கிடக்கிறார்கள். நூறு ரூபா கொடுத்து அவற்றை வாங்குகிறார்கள்.

இலங்கையிலிருந்து வெளிவரும் சிற்றிதழ்களின் ஆயுள் மிகக் குறைவு என்பது கசப்பான உண்மையே. திட்டமிடப்படாமையினாலும், நிறுவனமயப்படுத்தாமையினாலும் இலங்கையில் சிற்றிதழ்களினால் நீண்ட தூரம் பயணிக்கமுடியவில்லை. பிரபல்யமான சில நிறுவனங்கள் அவ்வவ்போது சில சிற்றிதழ்களை வெளியிட்டன.தகுதியான ஆசிரியரும், ஆசிரியபீடமும், இல்லாமையால் அவையும் கால ஓட்டத்தில் மறைந்து போயின. இதே வேளை பிரபல எழுத்தாளர்களினால் ஆரம்பிக்கப்பட்டசிற்றிதழ்களும் கால ஓட்டத்தில் மூழ்கிவிட்டன




இலங்கையில் இருந்து வெளிவரும் சிற்றிதழ்கள் சந்தாக்காரர்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் நம்பியே உள்ளன. பிரதான தொழில் உள்ளவர்களே சிற்றிதழ்களை வெளியிடுகின்றனர். மல்லிகை ஆசிரியர் மட்டும் மல்லிகையின் வருமானத்தையே அதிகமாக நம்பினார். மிகக்குறைந்தளவு பிரதிகளே அச்சிடப்படுகின்றன. சிற்றிதழ்களின் விற்பனையை அதிகரிப்பதற்குரிய கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

# காற்றுவெளி முந்தைய இதழ்கள்

